# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 01

ஜனவரி 2019 - ரபியுல் ஆகிர் - ஜமாத்துல் அவ்வல் 1440



## 10 அப்பாவி இளைஞர்கள் கைது!

## NIA வின் நாடகம்!!



## நாட்டின் பெரிய வழக்கில் வெளியான அநீதி தீர்ப்பு!



## அடுத்த அயோத்தி ஆகிறதா காசி?

## உங்கள் படுக்கையறையில் பத்து உளவாளிகள்

بسم الله الرحمن الرحيم

அல்லாஹ் தான் வானங்களையும், பூமியையும், இவ்விரண்டிற்கும் இடையிலிருப்பவற்றையும் ஆறு நாட்களில் படைத்துப்பின் அர்ஷின் மீது அமைந்தான்; அவனையன்றி உங்களுக்கு உதவியாளரோ, பரிந்து பேசுபவரோ இல்லை. எனவே (இவற்றை யெல்லாம்) நீங்கள் (நினைத்து) சிந்திக்க வேண்டாமா? வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்கு படுத்துகிறான்; ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும்.
(அல்குர்ஆன்32:4-5)


04 10 அப்பாவி இளைஞர்கள் கைது! NIA வின் நாடகம்!!

14 அடுத்த அயோத்தி ஆகிறதா காசி?

20 நடால் இந்திய காங்கிரஸ்

24 நாட்டின் பெரிய வழக்கில் வெளியான அநீதி தீர்ப்பு!

40 உங்கள் படுக்கையறையில் பத்து உளவாளிகள்!

48 அமெரிக்கர்களால் தகர்க்கப்பட்ட ஸங்கியின் பள்ளிவாசல்

53 முதல் சிலுவைப்போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

60 சங்கப்பரிவாரங்களின் ஓலமும்! தலைமை நீதிபதியின் அறிவுரையும்!

62 குஜராத் - முஸ்லிம் பெண்கள் சிலர் செய்த சாதனைகள்



# வைகறை வெளிச்சம்

ஜனவரி 2019 - ரபியுல் ஆகிர் - ஜமாத்துல் அவ்வல் 1440

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.
ஆண்டுச் சந்தா
உள் நாடு: ரூ.240.
வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darulislam.in

# 10 அப்பாவி இளைஞர்கள் கைது!

# NIA வின் நாடகம்!!


## கவர் ஸ்டோரி

> "இந்தியாவில் முஸ்லிம்களின் மீது நடத்தப்படும் ஒடுக்குமுறைகளை எதிர்த்து நீதியை பெற்றுத்தர வேண்டிய யாவரும் ஒடுக்குமுறை களுக்கான காரணமே முஸ்லிம்களாக இருப்பது தான் என்று பொதுச்சமூகத்தில் முஸ்லிம்களை குற்றவாளிகளாக மாற்ற இத்தகைய தீவிரவாத முத்திரையை பதிக்க பாசிச அரசுகள் முயற்சிக்கின்றன"

முஸ்லிம்களை கைது செய்வதற்கு இந்தியாவில் பல்வேறு அமைப்புகள் முன்பெல்லாம் உருவாக்கப்படும். ஜெய்ஷ்-இ-முகம்மது, லஷ்கரே தொய்பா என்று பல்வேறு பெயரில் கைதுகள் தொடரும். ஆனால் பாஜக ஆட்சி தொடர்ந்த பிறகு முஸ்லிம்கள் ஒரு புது அமைப்பின் பெயரில் கைது செய்யப்பட்டு, அது **ISIS** எனும் சர்வதேச பயங்கரவாதத்துடன் இணைந்தது என்று கூறி கொத்து கொத்தாக வேட்டையாடப் படுகிறார்கள். இந்த வேட்டையாடப்படும் வேலையை **NIA** துரிதமாக செயல்படுத்தி வருகிறது.

சமீப வருடங்களாக இந்தியா முழுவதும் **ISIS** உடன் தொடர்பு என்று கூறி **NIA** முஸ்லிம்கள் மீதான கைது நடவடிக்கைகள் அதிகமாக்கியுள்ளது. இந்த கைது நடவடிக்கைகளுக்கு தமிழகமும் விடுபடாமல் பெரும் விளம்பரத்துடன் முஸ்லிம்கள் மதுரையில் கைது செய்யப்பட்டனர்.

ஆனால், கைது செய்யப்பட்ட அனைவரும் அப்பாவிகள் என்று நாம் நடத்திய கள ஆய்வில்



தெரிய வந்தது, அதனை வைகறை வெளிச்சம் ஜனவரி 2017 இதழில் பார்க்கலாம்.

மதுரை, சென்னை உள்ளிட்ட பகுதிகளில் **NIA** அதிகாரிகள் எப்படியான கைது நடவடிக்கைகளையும், போலி சாட்சியங்களையும் உருவாக்கினார்களோ அதையே தற்போது தலைநகர் டெல்லியிலும் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

## ISIS பெயரில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள்

திசம்பர், 26ம் தேதி தலைநகர் டெல்லி மற்றும் உத்திர பிரதேசத்தின் அரோஹா என்ற கிராமத்திலும் **NIA** அதிகாரிகளால் 12 முஸ்லிம்கள் **ISIS** உடன் தொடர்பிருப்பதாக கூறி கைது செய்யப்பட்டனர். பின்னர் அதில் இருவர் விடுவிக்கப்பட்டு மீதம் 10 பேர் **NIA** வின் விசாரணைக்கு இழுத்து செல்லப் பட்டனர்.

**NIA** அதிகாரிகள் பத்திரிக்கைகளுக்கு கொடுத்த தகவலின் படி, **ISIS** அமைப்பால் ஈர்க்கப்பட்டவர்கள் "ஹர்கத்-உல்-ஹ்ர்ப்-இ-இஸ்லாம்" (இஸ்லாத்தின் படைவீரர்கள்) எனும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பல அரசியல் தலைவர்களையும், டெல்லியின் காவல் தலைமையகம், மற்றும் ஆர்.எஸ்.எஸ் ஷாகா நடைபெறும் இடங்களையும் தாக்க திட்டம் போட்டிருக்கிறார்கள்.

**NIA** தலைமை அதிகாரி அலோக் மிட்டால் பத்திரிக்கை சந்திப்பில், எங்கள் முதற்கட்ட விசாரணையில் அவர்களிடமிருந்து நிறைய வெடிபொருட்களை பறிமுதல் செய்திருக்கிறோம். அவர்கள் ரிமோட் கண்ட்ரோல் வெடிகுண்டுகள் செய்வதிலும், தற்கொலை தாக்குதல் நடத்துவதிலும் தீவிரமாக இருந்துள்ளனர்.

அவர்களிடம் 150 வெடிபொருட்கள், 112 அலாரம் கடிகாரங்கள், செல்போன்களின் எலக்டிரிகல் பாகங்கள், 21 பைப்புகள், 91 மொபைல் போன்கள், 134 சிம்கார்டுகள், 3லேப்டாப், ஒரு கத்தி, ஒரு வாள், **ISIS** சம்பந்தமான புத்தகங்கள், 7 லட்சம் பணம், 25

கிலோ வெடிமருந்து, ராக்கெட் லாஞ்சர் உட்பட மற்றும் இன்னும் சிலவற்றை பறிமுதல் செய்திருப்பதாக சொன்னார்.

அதன் படங்களும் சமூக வலைதளங்களில் வெளிவந்து பெரும் சர்ச்சையை கிளப்பியது. காரணம், அவர்கள் பறிமுதல் செய்யப் பட்டதாக சொல்லப்பட்ட படத்தில் தீபாவளி பண்டிகையின் போது கேளிக்கைக்கு உபயோகப்படுத்தும் சாதாரண வெடி வகைகளும், ராக்கெட் லாஞ்சர் என்று கூறி டிராக்டர் பாகம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

**வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்**

இந்த அமைப்பின் தலைவர் என்று கூறி மதரஸாவில் படித்து வந்த மாணவர், முப்தி முகம்மது சுஹைல்(29) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் டெல்லியில் உள்ள ஜாஃபராபாத் பகுதியில் தங்கி வாட்சாப் மற்றும் டெலிகிராம் வலைத்தளங்கள் மூலமாக தீவிரவாதிகளிடம் தொடர்பு வைத்துக் கொண்டதாகவும் வெளிநாட்டில் உள்ள ஒருவரின் உதவியோடு இதை செய்து வருகிறார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

24 வயதான அனஸ் யூஸுப் நொய்டாவில் உள்ள தனியார் பல்கலைகழகத்தில் சிவில் பொறியியல் பிரிவில் பயின்று வருகிறார். இவர் குண்டுவெடிப்புக்கான பேட்டரி, கடிகாரம் போன்றவற்றை வாங்க உதவினார் என கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ராஷித் ஜாபர் ராக்(23) துணி வியாபாரம் செய்து வருபவர், சயீத்(28) வெல்டிங் கடை வைத்திருக்கிறார், இருவரும் வெடிகுண்டுகளை தயாரித்தார்கள் என்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாவது வருடம் **BA** படித்து கொண்டிருக்கும் ஜுபைர் மாலிக் மற்றும் அவரது சகோதரன் சயீத் மாலிக் இருவரும் போலி ஆவணங்களை கொண்டு குண்டுதயாரிக்க சிம்கார்டுகள் வாங்கி தந்ததாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

உத்திர பிரதேசத்தில் உள்ள ஹாபுர் பள்ளியின் இமாம் சகிப் இஃப்தெகர் மற்றும் ஆட்டோ ஓட்டுனர் முகம்மது இருவரும் வெடிகுண்டுகளை ஒளித்து வைக்க உதவியதாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மெடிக்கல் கடை நடத்தி வரும் முகம்மது ஆஜம் ஆயுதங்களை தயாரிக்க உதவியதாக கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவர்கள் அனைவரும் 120B, 121,121A இந்திய தண்டனை சட்டத்தின் கீழும், **UAPA** பிரிவுகள் 17,18,18B,20,38,39ன் கீழும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (ஆதாரம் - INDIA TODAY 26/12/18)

**அப்பாவிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறும் அப்பகுதி மக்கள்.**

மெடிக்கல் கடை நடத்தி வரும் முகம்மது ஆஜம் இங்கிருக்கும் அனைத்து சமூக மக்களிடமும் நற்பெயர் பெற்றவர். அவர் நல்லவர் என்று உறுதி கூற இங்கிருக்கும் பலரும் வருவார்கள் என்று இந்தியா டுடே பத்திரிக்கைக்கு கூறுகிறார்கள் அப்பகுதியினர். அதுமட்டுமல்ல அதிகாரிகள் இங்கே வந்து முகம்மது ஆஜம் வீட்டை சோதனை செய்த போது அவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. நாங்கள் அனைவரும் அங்கே தான் இருந்தோம் என்றும் கூறுகிறார்கள். ***(INDIA TODAY 26/12/18)***

சயீத் மற்றும் ஜுபைர் மாலிக்கின் தந்தை குல்சார் அஹ்மத் சொல்லும் போது, உங்களுக்கு பத்திரிக்கையின் மூலம் என்ன தெரியுமோ அதுதான் எங்களுக்கும் தெரியும், அதிகாரிகள் எங்களிடம் எதுவுமே சொல்லாமல் மகனை இழுத்து சென்று விட்டதாக கண்ணீருடன் புலம்புகிறார்.

அனஸ் யூசுப் உறவினர் கூறும் போது, காலை ஐந்து மணிக்கெல்லாம் நூற்றுக்கும் அதிகமான காவல் அதிகாரிகள் வீட்டிற்கு வெளியே குவிந்து யூஸுப்பின் முகத்தை மூடி இழுத்து சென்றனர். இது ஜாஃபர்பாத் முழுவதில் பெரும் பதற்றத்தை உருவாக்கியிருக்கிறது என்றார்.

முக்கிய குற்றவாளியாக சேர்க்கப் பட்டிருக்கும் சுஹைலை பற்றி அவரது மாமா சொல்லும் போது, சுஹைல் சிரியாவுக்கு போயிருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் சுஹைல் வெளிநாட்டுக்கு எங்குமே சென்றதில்லை. எங்களிடம் சுஹைலின்



பாஸ்போர்ட் காப்பி இருக்கிறது அதில் அப்படி எதுவுமே இல்லை. வேண்டுமென்றே இதில் சுஹைல் சிக்க வைக்கப்படுகிறார் என்கிறார். ***( TOI 27/12/2018)***

சயீத் உடைய வெல்டிங் கடைக்கு கிராம மக்கள், பத்திரிக்கையாளர்களை அழைத்து சென்றார்கள். அவருடைய வேலையே டிராக்டர்களுக்கும் வண்டிகளுக்கும் பிஸ்டன் செய்து தருவது தான்.

ஆனால், அதிகாரிகள் இந்த டிராக்டரின் பிஸ்டனை ராக்கெட் லாஞ்சர் என்று அபாண்டமாக கூறுகிறார்கள். 26 வருடமாக எனக்கு அவனை தெரியும். அவன் அப்படி செய்பவனில்லை என அப்பகுதியை சார்ந்த முஹம்மது என்பவர் சொல்கிறார். ***(The New Indian Express 28/12/18)***

முக்கிய குற்றவாளியாக சித்தரிக்கப் பட்டிருக்கிற சுஹைலைப் பற்றி அப்பகுதியின் மூத்த மனிதர் முகம்மது இசாக் கூறும் போது, அந்த பையன் மிகவும் சாதுவானவர். நல்லவர். யாருடனும் சண்டையிட மாட்டார். இப்பகுதியில் அனைவரிடமும் நல்ல விதமாகவே பழகுவார் என்கிறார். ***(Fristpost 28/12/18)***

**அதிகாரிகள் சோதனை என்ற பெயரில் மேற்கொண்ட விதிமீறல்கள்.**

கைதாயிருக்கும் ஜாஃபரின் மாமா இக்றார் அஹ்மத் சொல்லும் போது, எல்லோருக்கும் தெரியும் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யாரும் இப்படியான செயலை செய்திருக்க மாட்டார்கள். காலை 4 மணிக்கு வீட்டில் சோதனையை தொடங்கிய அதிகாரிகள் மதியம் 12 மணி வரை தொடர்ந்தனர்.

எந்த வித அனுமதியும் இல்லாமல் வீட்டுக்குள் புகுந்து எல்லாவற்றையும் எடுத்து சென்றார்கள் என்கிறார். ***( TOI 27/12/2018)***

கைதாயிருக்கும் ராஷித் ஜாஃபர் ராக் அவர்களின் வீட்டுக்கதவை காலை 5.30 மணிக்கு தட்டி வீட்டின் முன்னால் கார் இடையூறாக நிற்கிறது எடுக்க சொல்லிருக்கிறார்கள். அப்போது வெளியே வந்த ராஹித்தை கைது செய்து முகத்தை மூடி இழுத்து சென்றிருக்கிறார்கள். 14 மணி நேரமாக வீட்டின் எல்லா மூலையிலும் சோதனையிட்டு இறுதியில் எதுவும் கிடைக்காமல் வெளியேறினார்கள் என்கிறார் ராஷித்துடைய சகோதரரின் மனைவி ரெஹ்மத் ரியாஷ்.



உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள அக்ரோஹா கிராமத்தில் கைதாக்கப்பட்ட சயீத் மற்றும் ரயிஸ் வீடுகள் சோதனைக் குள்ளாக்கப்பட்டன. ரயிஸ் வீட்டை அதிகாரிகள் சூறையாடியதை அவர்கள் அம்மா முஸ்தாரியா விவரிக்கிறார், காலை மூன்று மணிக்கெல்லாம் வந்து மதியம் 12 மணி வரை எங்களை மிரட்டினார்கள், வீட்டின் எந்த பகுதியையும் விட்டு வைக்காமல் சோதனையிட்டார்கள். எங்களை எதையும் பேச அனுமதிக்கவில்லை. பாத்ரூம் போக கூட அனுமதிக்க வில்லை. எங்கள் வீட்டு பெண்கள் தங்கள் உடைகளிலேயே சிறுநீர் கழிக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். குழந்தைக்கு பால் உட்பட எதையும் கொடுக்க அனுமதிக்க வில்லை. குழந்தை கூட என்ன பாவம் செய்தது என பரிதாபமாக அழுது கொண்டே நடந்ததை கூறினார். ***(New Indian Express 28/12/18)***

கைது செய்யப்பட்டிருக்கும் ராஹித் ஜாஃபரின் தந்தை இக்பால் அஹமத் அடுத்த நாள் நீதிமன்றத்தில் தன் மகனை காண வந்திருந்தார். ஆனால் அவரிடம் முறையான ஒரிஜினல் அடையாள அட்டை இல்லை என கூறி ராஹித்தை பார்ப்பதற்கு மறுத்து விட்டனர். ஆனால், வீட்டை சோதனை செய்த அதிகாரிகள் வீட்டிலிருந்த எல்லா ஆவணங்களையும் எடுத்து சென்று விட்டார்கள். என்னிடம் எனது போட்டோவை தவிர எதுவுமில்லை என நீதிமன்ற வாசலிலேயே கதறுகிற நிலைக்கு ஆளாக்கப்பட்டார்.

**கைது நடவடிக்கையை கேள்விகுட்படுத்தும் தலைவர்கள், அமைப்புகள்.**

தேர்தல் வரும் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த கைது நடவடிக்கை சந்தேகத்தை உருவாக்குகிறது. திருவிழாவில் பயன்படுத்தும் பட்டாசுகளை கொண்டு தீவிரவாதி என முத்திரையிடுவது தவறு. இது போல் எத்தனை வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறை அனுபவித்து பத்தாண்டுகளுக்கு பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் மூலம் ***NIA*** கற்றுக் கொள்ள வேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார் காஷ்மீர் ***pdp*** கட்சியின் தலைவர் மெஹ்பூபா முப்தி. ***(News 18,28/12/18)***

ஜமியத்துல் உலமா அமைப்பும் இக்கைதுக்கு எதிராக கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில், ஜமியத்துல் உலமா சபை தீவிரவாதத்திற்கு எதிராக பல வருடங்களாக செயல்பட்டு வருகிறது. ஆனால் அப்பாவி மக்களை தீவிரவாதிகள் என்று கூறி ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களை கைது செய்வது அனுமதிக்க முடியாது என்று வெளியிட்டிருக்கிறார்கள்.

## NIA வால் முஸ்லிம்கள் சிக்க வைக்கப் பட்டிருக்கும் சில வழக்குகள்,

டிசம்பர்,2016ல் மதுரையில் ***NIA*** நிகழ்த்திய கைது நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டோர் பெரும்பாலும் ஏழ்மை நிலையில் இருப்பவர்கள். அவர்கள் அப்பாவிகள் என்பதற்கான பல்வேறு ஆதாரங்கள் இருந்த போதிலும் கூட நீதிமன்றங்களை அணுகி வழக்கை நடத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

2016 ஜூன் மாதம் ஹைதராபாத்தில் உள்ள ஹஷ்மாபாத் பகுதியில் ஹபீப் முகம்மது மற்றும்

அப்துல் காதர் என்ற சகோதரர்களை கைது செய்து காதரை சிறிது நேரத்தில் அனுப்பி விட்டார்கள். ஆனால் ஹபீப் மட்டும் கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டார். விடுவிக்கப்பட்ட காதர் சொல்லும் போது நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. எங்கள் குடும்பத்தின் பெயர் அல்பக்தாதி. ***ISIS*** அமைப்பின் தலைவர் பெயரும் அல்பக்தாதி என்றிருப்பதால் தனது சகோதரன் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

ஆந்திர பிரதேஷத்தில் வழக்குரைஞர், ரவிச்சந்திரன் தனி நபராக உண்மை கண்டறியும் விசாரணையை மேற்கொண்டார் அதில் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் 22 பேரின் வழக்குகளையும் ஆராய்ந்து இப்படி கூறுகிறார், எல்லோரும் நள்ளிரவு அல்லது முற்பகல் நேரத்தில் தான் கைது செய்யப்படுகிறார்கள். உடனே அவர்களை கண்களை கட்டி தனியார் விடுதிகளில் கொண்டு சென்று அடைத்து விடுகிறார்கள். பின்னர் 10 நாட்களுக்கு பிறகு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு பல வருட சிறை தண்டனைகளுக்கு பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்படுகிறார்கள் என்கிறார். ***(scroll 01/07/2016)***

இதுவரை இந்தியாவில் தீவிரவாத முத்திரையில் கைது செய்யப்பட்டு பல ஆண்டு சிறைக்கு பின் விடுதலை செய்யப்பட்ட அப்பாவிகளின் வழக்குகளில் சில,

**நஸ்ருதின் அஹ்மத்** - 23 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 1994.

**விடுதலை செய்யப்பட்டது** - 2015

**கைது செய்யப்படும் போது வயது** - 19.

வழக்கு - பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத்தின் போது நடந்த ஐந்து இரயில் குண்டுவெடிப்பு, இரண்டாம் ஆண்டு மருத்துவ படிப்பின் போது குற்றம் இழைக்கப்பட்டதாக கைது செய்யப்பட்டார்.

**குல்சார் அஹ்மத் பானி** , 16 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 2001

**விடுதலை செய்யப்பட்டது** - 2017



**கைது செய்யப்படும் போது வயது**- 28.

வழக்கு - சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டுவெடிப்பு வழக்கு.

**ஜாஹீருத்தீன் அஹ்மத்** , 23 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 1994

**விடுதலை செய்யப்பட்டது** - 2016

வழக்கு - மும்பையில் சிவில் பொறியாளராக இருக்கும் போது தீவிரவாத செயலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டார்.

md **ஆமிர் கான்**, 14 **வருட சிறை**

**கைது செய்யப்பட்டது** - 1998

**விடுதலை செய்யப்பட்டது** - 2012

**கைது செய்யப்படும் போது வயது**- 20.

வழக்கு - டெல்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்.

**ஹபீப் பாவா மற்றும்**

**ஹனிப் பாகிட்வாலா** , 14 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 2003

**விடுதலை செய்யப்பட்டது** - 2017

வழக்கு - 2002 ல் டிபன் பாக்ஸ் குண்டு பேருந்தில் வெடித்த வழக்கு.

**ஹுசைன் பாசிலி மற்றும்**

**ராபிக் ஷாஹ்** , 12 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 2005

**விடுதலை செய்யப்பட்டது** - 2017

*வழக்கு - ஷாஹ் இஸ்லாமிய மாணவராக இருக்கும் போது கைது செய்யப்பட்டார், டெல்லி தொடர் குண்டுவெடிப்பின் குற்றவாளிகள் என கைது செய்யப்பட்டார்.*

**ஆறு பேர்**, 11 **வருட சிறை.**

**கைது செய்யப்பட்டது** - 2003

**விடுதலை** - 2014

*வழக்கு - 2002 அக்ஸர்தம் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள்.*

**இர்ஷத் அலி மற்றும்**

**மௌரிப் கமர்** , 11 **வருட சிறை.**

**கைது** - 2005

**விடுதலை** - 2017

*வழக்கு - அல்-பத்ர் எனும் குழுவில் உறுப்பினர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள்.*

**ஒன்பது பேர்** , 10 **வருட சிறை.**

**கைது** - 2006

**விடுதலை** - 2016

*வழக்கு - மாலேகான் குண்டுவெடிப்பு.*

**அப்துல் வாகித் செய்க்** , 9 **வருட சிறை**

**கைது** - 2006

**விடுதலை**- 2015

*வழக்கு - 11/07 மும்பை ரயில் குண்டுவெடிப்பு,*

**ஐந்து பேர்**, 9 **வருட சிறை.**

**கைது** - 2007

**விடுதலை** - 2016.

*வழக்கு - தடைப்பட்ட ஹுஜி குழுவை சார்ந்தவர்கள் என்றும், பாகிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள்.*

**சொஹெப் ஜாஹிர்தார்,**

**அப்துல் நய்யிம்,**

md **இம்ரான் கான்**

**சையத் கான்.**

7 **வருட சிறை.**

**கைது** - 2007

**விடுதலை**- 2014

*வழக்கு - மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு.*

**ரியாஸ் கான்**

**அப்துல் சையத்** , 7 **வருட சிறை.**

**கைது** - 2010

**விடுதலை** - 2017

*வழக்கு - மக்கா குண்டுவெடிப்பு வழக்குக்கு பழிவாங்க காவலதிகாரியை கொலை செய்ததாக கைது.*

17 **பேர்**, 7 **வருட சிறை.**

**கைது** - 2008

**விடுதலை** - 2015

*வழக்கு - சிமி அமைப்பில் இருந்து நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்டவர்கள்.*

**ஹாரூன் ரஷீத்,**

**விபீ. இஃப்திகார்,**

**மசூத் அஹ்மத்,**

**திலாவர் கான்** ,

5 **வருட சிறை.**

**கைது** - 2005

**விடுதலை** - 2010

*வழக்கு - டெஹ்ராடூனில் இருக்கும் மிலிட்டரி பள்ளியில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.*

**மஹ்பூப் இப்ராகிம்,**

**சபாப் சோப்தார்** ,

5 **வருட சிறை**

**கைது** - 2006

**விடுதலை**- 2011

*வழக்கு - டெல்லியில் உள்ள IIT மீது தீவிரவாத தாக்குதலை நடத்த முயற்சித்தார்கள் என்று கைது.*



இப்படி கைது செய்யப்பட்டு அப்பாவி என்று கூறி விடுவிக்கப்பட்ட எவருக்கும் எந்த வித நிவாரணமும் கிடையாது. பொய்யான குற்றச்சாட்டின் பெயரில் 23 வருடங்கள் வரை தங்கள் வாழ்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையை கொண்டு வந்ததற்கே நமது நீதிமன்றங்கள் குற்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உச்சநீதிமன்றத்தில் அக்ஸர்தம் குண்டுவெடிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேர் தொடர்ந்த வழக்கில் இது " ஓர் மோசமான முன்மாதிரியாக" மாறி விடும் என சொல்லியது. இந்நாட்டில் நீதிமன்றங்களே பாசிச சிந்தனையில் மூழ்கியிருக்கும் போது இந்தியாவில் இருக்கும் முஸ்லிம்கள் யாரை தான் நம்புவது?.*(TOI 11/08/17)*

**சந்தேகத்திற்குள்ளாக்கும் கேள்விகள்!**

ஹுமா இஹ்தியார், கைது செய்யப் பட்டிருக்கும் ராஷித் உடைய மூத்த சகோதரரின் மனைவி, இரவு 7.30வரை 14 மணி நேரமாக சோதனை எல்லாவற்றையும் முடித்து வீட்டை விட்டு வெளியேறினார்கள். அப்போது ராஷித் அப்பாவி அதனால் கண்டிப்பாக நீதிமன்றம் விடுதலை செய்து விடும் என்று கூறி விட்டு சென்றார்கள். ஆனால் அடுத்த நாளே பத்திரிக்கையாளர்களிடம் ராக்கெட் லாஞ்சரை தயாரித்தார் என்று சொல்வதற்கான காரணம் என்ன?

கைது செய்யப்பட்ட அனஸ் யூசுஃப்பின வீட்டில் பல்வேறு வெடிபொருட்களும் சிம்கார்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது.

ஆனால் அவரது வீட்டிலிருந்து அருகில் வெறும் 150 மீட்டர் தொலைவில் தான் ஜஃப்ராபாத் காவல்நிலையம் இருக்கிறது. அந்த பகுதி முழுக்க சிசிடிவி கண்காணிப்பின் கீழ் இருக்கும் பட்சத்தில் அங்கிருக்கும் காவல் அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாமல் போனது எப்படி?

அப்பகுதி மக்களும் அப்படி எதுவும் கண்டதாகவும் கூறவில்லை. அப்படியெனில் இந்த பொருட்கள் திட்டமிட்டு உருவாக்கப் பட்டிருக்கிறதா? ***(Hindustan Times 28/12/18)***

சர்வதேச குற்றவாளிகள் என்று காட்டப் பட்டவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட பயங்கர ஆயுதங்களில் தீபாவளிக்காக வெடிக்கும் பட்டாசுகளும், வேலைக்கு வைத்திருந்த டிராக்டர் பிஸ்டனும் சேர்க்கப் பட்டிருக்கிறது.



இதன் மூலம் முஸ்லிம்கள் வீட்டில் இருக்கும் எப்பொருளையும் பயங்கரவாத ஆயுதமாக திரித்து அவர்களுக்கு தீவிரவாத முத்திரை குத்துவோம் என்று முஸ்லிம்களை அச்சுறுத்துகிறதா **NIA**? இல்லையெனில் இவ்வளவு போலி சாட்சியங்களை உருவாக்குவதற்கான அவசியம் என்ன?

டெல்லியில் உள்ள ஜஃப்ராபாத் பகுதி தொடர்ச்சியாக அரசால் குறிவைக்கப்பட்டு வருகிறது 44.19% மக்கள் இங்கு முஸ்லிம்கள். இதுவே டெல்லி மக்கள் தொகையில் 12.66%. கல்வியறியவை பொறுத்தவரை 74.20%. முஸ்லிம்கள் அதிகமாக இருக்கும் பகுதியில் கல்வியறிவிலும் அவர்கள் அதிகமாக இருக்கிறது என்பதால் அவர்களின் வளர்ச்சியை தடுப்பதற்கு இப்படியான செயலை செய்கிறார்களா?

முக்கிய குற்றவாளியாக இணைக்கப் பட்டிருக்கும் சுஹைலின் மூத்த சகோதரன் சொல்லும் போது, சுஹைல் பேட்டரி பழுது பார்க்கும் வேலை செய்கிறான்.

அதனால், அவனது டைரியில் பேட்டரியின் செயல்பாடுகளை குறிக்கும் படங்கள் வரையப்பட்டிருக்கும், அந்த இன்வெட்டர் காயிலின் படத்தை எடுத்து தீவிரவாத செயலுக்காக வெடிகுண்டு தயாரிக்க பயன் படுத்தப்பட்டது என குற்றம் சாட்டுகின்றனர் அதிகாரிகள் என்கிறார்.

முஸ்லிம்கள் வீட்டில் எலக்ட்ரிக்கல் பொருள் இருந்தால் அது குண்டு தயாரிப்பதற்காக, முஸ்லிம்கள் வீட்டில் கத்தி இருந்தால் அது பெரும் தலைவர்களை கொல்வதற்கு என கூறி கைது செய்யும் கொடுமைகள் இன்னும் எத்தனை காலத்திற்கு தான் முஸ்லிம் சமூகம் சந்திக்க வேண்டியிருக்கும்?. ***(Firstpost 28/12/18)***

**இந்தியாவில் முஸ்லிம்களுக்கான நீதியை யார் உறுதி செய்வது?**

இந்தியாவில் முஸ்லிம்களின் மீது நடத்தப்படும் ஒடுக்குமுறைகளை எதிர்த்து நீதியை பெற்றுத்தர வேண்டிய யாவரும் ஒடுக்குமுறைகளுக்கான காரணமே முஸ்லிம்கள் தான் என்று பொதுச்சமூகத்தில் முஸ்லிம்களை குற்றவாளிகளாக மாற்ற இத்தகைய தீவிரவாத முத்திரையை பதிக்க பாசிச அரசுகள் முயற்சிக்கின்றன.

மதுரையில் எப்படி **NIA** வால் கைது செய்யப்பட்டவர்கள் பத்து நாட்கள் விசாரணைக்கு பின் துன்புறுத்தப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் என்ற செய்தி வெளியானதோ அதே போல் நடக்கும் வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் இந்த பாசிச நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் எப்போதும் தொடரும். அதையும் முஸ்லிம்கள் தான் முன்னிறுத்த வேண்டும்.




# பாபரி மஸ்ஜித் வழக்கில்

## தொழுகைக்கு அனுமதி கேட்டவர்கள் மீது அபராதம்!

பாபரி மஸ்ஜித் - இல் இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதைப் போல் முஸ்லிம்களுக்கும் தொழுகைக்கு அனுமதி வழங்கிட வேண்டும் என்றொரு மனு அலஹாபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை அர்ரஹ்மான் அறக்கட்டளைத் தாக்கல் செய்திருந்தது.

இப்படியொரு கோரிக்கையை முஸ்லிம்கள் 1984 முதலே வைத்து வருகின்றனர்.

அது உச்சநீதிமன்றம் வரை சென்றது. உச்சநீதிமன்றம் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதால் வழிபாட்டு உரிமையை இழந்தவர்கள் இந்துக்கள் தாம். அல்லாமல் முஸ்லிம்கள் அல்ல என கூறிற்று.

இது போன்ற தீர்ப்புகளால்தான் முஸ்லிம்கள் பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்து நிற்கின்றார்கள்.

இப்போது அர்ரஹ்மான் அறக்கட்டளை தொடுத்த வழக்கில் வழங்கிய தீர்ப்பில் மனுவை தள்ளுபடி செய்ததோடு ஐந்து இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்திருக்கின்றார்கள். அபராதத்தைச் செலுத்தத் தவறினால் அதனை மாவட்ட கலெக்டர் வசூலிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

முஸ்லிம்கள் மேல் முறையீட்டுக்கு உச்ச நீதிமன்றம் செல்லலாம். அதைத் தடுக்கவே இந்த ஐந்து லட்சம் ரூபாய் அபராதம். அபராதத்தை கட்டினால் மட்டுமே மேல் முறையீட்டுக்குச் செல்ல முடியும்.

(செய்தி ஆதாரம்: தி இந்து டிசம்பர் 21,2018)

ஜாஃபர் யாப் ஜிலானியுடன் பேட்டி

இந்தப் பின்னணியில் பாபரி மஸ்ஜித் வழக்கை முன்னின்று நடத்திய வழக்கறிஞர் பாபரி மஸ்ஜித் ஆக்ஷன் கமிட்டியின் தலைவர் ஜாஃபர் யாப் ஜிலானி அவர்களை தொலைப்பேசியில் பேட்டி கண்டோம்.

**கேள்வி:** தொழும் உரிமையைக் கோரி வழக்கைத் தொடுத்தது யார்?

**பதில்:** அர்ரஹ்மான் அறக்கட்டளை.

**கேள்வி:** இவர்கள் யார்?

**பதில்:** எனக்குத் தெரியவில்லை. இதுவரை கேள்விப்படாத அறக்கட்டளை.

**கேள்வி:** இரகசியமாகக் கோயிலைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என வதந்திகள் பரவுகின்றனவே.

**பதில்:** அதனை நம்பிட வேண்டாம். எல்லாம் நன்றாகவே உள்ளது. வீணான பதற்றங்களுக்கு ஆளாக வேண்டாம்.

பேட்டி : எம்.ஜி.எம்.

# அடுத்த அயோத்தி

சந்தடி இல்லாமல் உருவாக்கி வரும் இன்னொரு அயோத்தியா!

இப்படித் தலைப்பிட்டு ஒரு பெரும் இரகசிய நடவடிக்கையை வெளியே கொண்டு வந்திருக்கின்றது. பிரண்ட் லைன் ஏடு!

டிசம்பர் 7, 2018

அதன் சுருக்கத்தை வைகறை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

"இது வெறும் முன்மாதிரிதான். இனி காசியும், மதுராவும் மீதமிருக்கிறது."

இப்படி முழங்கிக் கொண்டே தான் கரசேவகர்கள் டிசம்பர் 6, 1992 அன்று பாபரி மஸ்ஜித் - ஐ இடித்து விட்டு அயோத்தியாவிலிருந்து வெளியேறினார்கள்.

26 ஆண்டுகளுக்குப் பின் சங்கப்பரிவாரம் தங்கள் இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆமாம், காசியில் கியான்வஸ்பி மஸ்ஜித் - ஐ இடிக்க நெருங்கிவிட்டார்கள். உத்திரப்பிரதேசத்திலிருக்கும் வாரனாசிக்கு இன்னொரு பெயர் காசி. இந்த இடிப்பு இப்போது ஒரு புதிய முழக்கத்தோடு நடக்கின்றது.

அந்த முழக்கம், வாரனாசி இலக்கு மோடியின் இலக்கு.

இது இனப்படுகொலை புகழ் மோடிக்கும் மிகவும் விருப்பமான ஓர் இலக்காம். கங்கையாற்றங்கரையில் பல கிலோ மீட்டர் தூரத்தை அழகுபடுத்துகின்றோம் என்று, "வாரனாசியே இலக்கு" என தங்கள் முழக்கத்திற்கு விளக்கம் சொல்லுகின்றார்கள்.

ஆனால் அடுத்து நெருங்கி வந்து ஏன் திடீரென இப்படி ஒரு முழக்கத்தை வைக்கின்றீர்கள் எனக் கேட்டால், காசியிலே இருக்கின்ற கியான்வஸ்பி பள்ளிவாசலை இடிக்க இதுவே சிறந்த உத்தி எனக் கூறுகின்றார்கள். காசி விஸ்வநாத கோயில்



என்பதும், கியான் வஸ்பி மஸ்ஜிதும் ஒரே வளாகத்தில் இருக்கின்றன.

இந்த "வாரனாசியே இலக்கு" என்ற லட்சியத்திற்காக 1200 சதுர கிலோமீட்டர்களை அரசு கையகப்படுத்தி அங்கே எழில் மிகு வாரனாசியை வடிவமைக்கப் போகின்றார்களாம். இந்த 1200 கிலோ மீட்டர் எல்லைக்குள் காசி விஸ்வநாதர் கோயிலும், கியான் வஸ்பி மஸ்ஜிதும் வந்து விடுகின்றன.

1200 சதுர கிலோ மீட்டரும் கங்கை ஆற்றோரம் அமையும். CORRIDER வழிப்பாதையையும் இதனை நவீனப்படுத்தி அழகுப் படுத்தப்போகின்றார்கள். இதற்காக இந்த இடங்களில் உள்ள கட்டடங்கள்

# ஆகிறதா? காசி?



அனைத்தையும் இடிக்கப் போகின்றார்கள். உண்மையில் இவற்றில் பெரும் பகுதி இடிக்கப்பட்டும் விட்டது.

**கோயிகள் - வீடுகள் - பள்ளிவாசல்கள்?**

இந்த இலக்கை அடைவதற்காக பல கோயில்களை இடிக்கின்றார்கள். இதுவரை கட்டடங்களை இடித்திருக்கின்றார்கள். இதில் பல பள்ளிவாசல்களும் உண்டு. கோயில்களும் உண்டு. கோயில்களை இடித்தப் படத்தை இவர்கள் வெளியிடுகின்றார்கள். ஆனால் பள்ளிவாசல்களின் படத்தை வெளியிடுவதில்லை.

இடிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கைகளைக் குறிப்பிடும் போது 65 கோயில்கள் இன்னும் பல வழிபாட்டுத்தலங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆங்கிலத்தில் TEMPLES AND PLACES OF WORSHIP கோயில்களும் பிற வழிபாட்டுத்தளங்கள் என்கிறார்கள். இந்தப் போர்வையில் இடிக்கப்பட்டவை மஸ்ஜித்கள் தாம். ஆக மொத்தமாக இலக்கு வாரணாசி நுணுக்கமான சதி திட்டங்களோடும் இரகசியமாகவும் செயல்படுத்தப்படுகின்றது.

முதல் கட்டமாக எத்தனை கோயில்களும் வழிபாட்டு மையங்களும் இடிக்கப்படும் என்பதற்கான முன் வரைவை ஜூலை 14, 2018இல் வாரனாசி சென்றிருந்த மோடியிடம் உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத் ஒப்படைத்தார். அன்றிலிருந்தே இடிக்கும் வேலையையும் அரசு இயந்திரங்களைக் கொண்டே தொடங்கி விட்டார் முதல்வர் யோகி ஆதித்யாநாத்.

**கதவு** 28/11

காசி விஸ்வநாதர் கோயிலை அடுத்து கியான் வஸ்பி பள்ளிவாசலை இடிக்க மக்களின் கண்ணை மறைக்கும் ஓர் உத்தி கையாளப்படுகின்றது. இந்தப் பள்ளிவாசலை பள்ளிவாசல் எனக் குறிப்பிடாமல் கட்டடம் எண் **CK**28/11 எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மஸ்ஜித்-ஐ பள்ளிவாசலை இடிக்கிறோம் என்றால் நாடெங்கும் - உலகெங்குமிருந்து எதிர்ப்புகளும் கண்டனங்களும் வரும். அவற்றை சமாளிப்பதில் சிக்கல் ஏற்படலாம் என்பதனாலேயே இப்படியொரு உத்தி கையாளப்படுகின்றது.

சிரி 28/11 என்று கியான் வஸ்பி மஸ்ஜித்-ஐ அடையாளப்படுத்தியதோடு கீழே ஓர் அடிக்குறிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். அதில் சிரி 28/11 என்பது காசி விஸ்வநாதர் கோயிலின் வாசல் எண் 4 எனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இப்படி அடையாளப்படுத்துவதன் மூலம் ஏதோ கோயிலின் ஒரு வாசலைத்தான் இடிக்கவிருக்கின்றார்கள் என்றே எல்லோறும் எண்ணுவார்கள் ஆனால் அது கியான் வஸ்பி மஸ்ஜித் - இன் உள்ளே செல்லும் படிக்கட்டுகள்.

### இடிக்கப்பட்ட மஸ்ஜித் படிக்கட்டுகள்

அக்டோபர் 25 2018 இல் இந்த வாசலுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகளை இடித்து விட்டார்கள் உத்திரப்பிரதேச அரசு அதிகாரிகள்.

அதுவரை கண்டு கொள்ளாமலிருந்த முஸ்லிம்கள் உண்மையில் இவர்கள் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனுஷனைக் கடித்தாற்போல் பள்ளிவாசலை இடிப்பதே இலக்காகக் கொண்டு இயங்குகின்றார்கள் என்பதை நன்றாகக் கண்டு கொண்டனர்.

மிகப்பெரிய எதிர்ப்புகளை உருவாக்கினார்கள். முஸ்லிம்களின் ஆவேசம், அத்தோடு கடல் அலையென திரண்ட மக்கள் இவையெல்லாம் சற்றே அரசை ஆட்டங்கான வைத்தன.(இதில் சில நல்லுள்ளங்கொண்ட மனித ஆர்வலர்களும், கலந்து கொண்டனர். இதனால் இந்த இடிப்பு வேலையை அதிகாரிகள் இப்போது நிறுத்தி வைத்துள்ளார்.

பல ஏமாற்று வேலைகளைக் கொண்டும் அவர்கள் இடித்த அந்தப் பகுதி சுன்னத் வல் ஜமாத்க்குச் சொந்தமானது. "SUNNI CENTRAL WAKF BOARD" (சுன்னி வக்ஃ போர்டுக்குச் சொந்தமானது.

### இந்து - முஸ்லிம் ஒற்றுமை

இதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள் கண்மூடித்தனமான கட்டிட இடுப்புகளால் பாதிக்கப்பட்ட இந்துக்கள் பாசிசத்திற்கெதிரான மனித உரிமை ஆர்வலர்கள் இவர்கள் அனைவரும் இணைந்து ஓர் அமைப்பைக் கட்டி எழுப்பினார்கள். அதன் பெயர் JOINT ACTION COMMITTEE ஒருங்கிணைந்த செயற்குழு - இந்தக் குழு தந்த அழுத்தத்தால் இடிக்கப்பட்ட படிக்கட்டுகள் மீண்டும் கட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் நேரடியாக கள ஆய்வு ஒன்றை நடத்திய Frontline பிரண்ட் லைன் ஏடு இப்படிக் குறிப்பிடுகின்றது.

"இந்த வாரனாசியே இலக்கு" என்ற பின்னணியில் நடப்பவை முஸ்லிம்களைப் பதற்றப்பட வைத்திடும் இலக்காகவே இருக்கின்றது என்று முஸ்லிம்களில் பலர் எங்களிடம் கூறினார்கள். மோடி வகையறாக்கள் இங்கே வாரனாசியில் இன்னொரு அயோத்தியாவையே உருவாக்கிட முனைகின்றார்கள். ஏனெனில் இங்கே கையாளப்படும் உத்திகள் அனைத்தும் பற்றி மஸ்ஜித் - ஐ இடிக்கும் முன் கையாண்ட உத்தியைப் போலவே இருக்கின்றன.(Frontline, Dec 7, 2018)

### இரகசியம்

வாரனாசியே இலக்கு என்பதை மத்திய அரசும் மாநில அரசும் மிகவும் இரகசியமாகவே செயல்படுத்துகின்றன. இதுபோல எப்போது எதைச் செய்வார்கள் எதை இடிப்பார்கள் என்று யாருக்கும் தெரியாது.

பல இந்தி பத்திரிகைகள் அரசின் அத்துமீறல்களைப் பட்டியலிடவே செய்கின்றன. அவை அரசாங்கம் தனி மனிதர்களின் வீடுகளைக் கைப்பற்றுவதில் எந்த விதிமுறைகளையும் பின்பற்றுவதில்லை நடப்பிலிருக்கின்ற எல்லா விதிமுறைகளையும் மீறவே செய்கின்றார்கள். என்பதை இப்போது எழுதி வருகின்றன.

அதே போல் கோயில்களையும் - இதர வழிபாட்டுத்தலங்களையும் கையகப் படுத்துவதிலும் இடிக்கப்பட்டதிலும் எந்த நீதி நெறியையும் கடைபிடிப்பதில்லை. எல்லாம் இரகசியமாகவே இருக்கின்றன.

இன்னும் ஆயிரக்கணக்கான கோயில்களையும் வீடுகளையும் சிறுபான்மையினரின் தொழுமிடங்களையும் இடிக்க இருக்கின்றார்கள்.

### இடிக்கப்படும் கோயில்கள் மீண்டும் கட்டப்படுமா? எப்படி? எப்போது?

இடிக்கப்படும் வீடுகளுக்குச் சொந்தக்காரர்களுக்கு என்ன நிவாரணம்? எவ்வளவு நஷ்ட ஈடுகள். இவர்களுக்கு எங்கேனும் வீடுகள் கட்டித்தரப்படுமா?

இப்போது அவர்கள் தங்கள் சொந்த பந்தங்களின் வீடுகளுக்கு விரட்டப் பட்டிருக்கின்றார்கள் பலர் நெருங்கியும் சுருங்கியுமிருக்கும் வீதிகளிலே வாழ்கின்றார். சில சமுதாய கூடங்களை இவர்களுக்குத் திறந்து விட்டிருக்கின்றார்கள். பலர் தங்கள் நண்பர்களோடு ஒண்டிக் குடித்தனம் நடத்துகின்றார்கள்.

கோயில்களிலே பூஜா, புனஸ்காரப் பொருள்களை விற்றுப் வயிறு பிழைத்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து நிற்கின்றார்கள்.





இடிக்கப்படும் சிறுபான்மையினரின் வழிபாட்டுத்தலங்களுக்கு என்ன பதில்? எல்லாமே மாயமாகவும், மர்மமாகவுமே இருக்கின்றது.

அறிவிக்கப்படாத ஒரு பெரும் போர் நடந்து கொண்டே இருக்கின்றது. இந்தப் பெரும் போரில் சிறுபான்மையினர் தனித்து விடப்படவில்லை. அவர்கள் தனித்து நிற்கவும் இல்லை.

இந்த எதிர்ப்புப் பெரும் போரில் இடிக்கப்பட்ட கோயில்களின் - மகந்த்கள் - புஜாரிகள் - இடிக்கப்பட்ட வீடுகளின் சொந்தக்காரர்கள், சமூக ஆர்வலர்கள் இவர்களெல்லாம் கைகோர்த்து முஸ்லிம்களும் - இந்துக்களும் இணைந்தே நிற்கின்றார்கள்.

ஆனால் இந்தச் சாமானியர்களுக்கு எதிரே நிற்பவர்களில் ஒருவர் இனப்படுகொலைகளுக்குப் புகழ் மோடி இன்னொருவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டே நாடெங்கும் குண்டு வைக்கப்பணம் கொடுத்தவர். (யோகி ஆதித்யநாத்

**அயோத்தி அல்ல காசி**

*1990* முதல் *1992* வரை பாபரி மஸ்ஜித் - ஐ இடிக்க பாசிஸ்டுகள் மக்கள் கும்பலைத் திரட்டிய போது பாமர மக்கள் சிலர் ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் காசியில் - "வாரனாசியே இலக்கு" என்பதற்கு மக்கள் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவுக் கொடுக்கவில்லை. தொடக்க நாள் தொட்டே எதிர்க்கின்றார்கள்.

கியான் வஸ்பி மஸ்ஜித் காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்திற்கு இட்டுச் செல்லும் பாதைகள் வீதிகள் குறுகலானவை. இந்த வீதிகள் வரலாற்றுப் பாரம்பரியமிக்கவை.

கோயிலை பராமரிப்பவர்களும் பல இந்து சாமியார்களும் வரலாற்று ஆய்வாளர்களும் இந்த வீதிகளெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மைமிக்கவை. இவற்றின் பாரம்பரியத்தை அறியாதவர்கள் தாம் அவற்றை அழிக்கிறார்கள் என்கின்றார்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள். அங்குள்ள வீதிகளும், சந்துகளும், பைசாக்கியர்கள் காலத்தில் அவர்களின் வீதிகளையும் சந்துகளையும் போல் வடிவமைக்கப்பட்டவை. இந்தத் தொன்மையை இடிப்பவர்களுக்கு எடுத்துச் சொல்கிறார்கள் மக்களும், தொல்லியல் வல்லுநர்களும்.

**நாத்திகர்கள்**

இவர்கள் சொல்வதைக் கேட்காத மோடி வகையறாக்களை அவர்கள் நாத்திகவாதிகள். இவர்கள் போடும் பக்தி - பட்டப்பகல் வேஷம் என்கின்றார்கள்.


கோயிலோடு சம்மந்தப்பட்ட பொருள்களை விற்பவர்கள் பலர் தங்கள் குடும்பங்களை வாழ வைத்த வாழ்வாதாரங்களை இழந்து அல்லல் படுகின்றார்கள்.

அங்குள்ள புஜாரிகள் காசி கோவில்களின் வரலாறு இந்தியாவிலுள்ள வேறு எந்தக் கோவில்களுக்குமில்லை என்கின்றார்கள்.

வாரானாசியில் வாழும் இந்துக்களும் கோயில்களைப் பராமரிப்பவர்களும் பள்ளிவாசல் வளாகத்திற்குள் கோயில் இருப்பதில் எந்தப் பிரச்சனையுமில்லை என்கின்றார்கள்.

**இராஜ்குமார் கபூர்**

வாரானாசியில் வாழும் இந்துக்களில் பெரும் பகுதியினர் பல நூற்றாண்டுகளாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் தங்கள் வீடுகளையே ஒரு பாரம்பரிய சின்னம் எனக்கருதுகின்றார்கள். இந்த வீடுகளும் இடிக்கப்படுகின்றன. இப்படி தன் வீட்டை இழந்த



ராஜ்குமார் கபூர் என்பவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"எனக்குச் சொந்தமான 20 அறை கொண்ட வீட்டை இடிக்கப் போகின்றார்கள் இது என்னுடைய பூர்வீக வீடு. இதுவே நான் புடவை விற்கும் கடமையும் கூட. நாங்கள் பல தலைமுறைகளாக இங்கே வாழ்ந்து வருகின்றோம். வியாபராமும் செய்து வருகின்றோம். நாங்களும், முஸ்லிம்களும் நல்ல நல்லுறவோடு வாழ்ந்து வருகின்றோம். ஆனால் இவர்கள் நாத்திகர்களைப் போல் வரலாற்று தொன்மைகளையும் கோயில் களையும் இடித்துக் கொண்டிருக்கின்றார்கள்" என்கின்றார்.

ஆனால் ஸ்ரீ காசி விஸ்வநாத் மந்திர் டிரஸ்ட் - ஐ சார்ந்தவர்கள் 250 - 300 கட்டிடங்கள் வரை இடிக்கப்பட வேண்டியதிருக்கின்றது என்கின்றார்கள்.

### 50 வருட ஆர்.எஸ்.எஸ். ஊழியரின் கதி

கிருஷ்ண குமார், இவருடைய வீடும், கடையும் இடிக்கப்படவிருக்கின்றது. இவர் தன் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை நாடி இருக்கின்றார். இவர் பிரதமர் மோடிக்கே கடிதம் எழுதினாராம். எந்தப் பதிலுமில்லையாம் இவர் சாலைகளை விரிவாக்கும் பணிதான் நடக்கின்றது என்கின்றார்கள்.

ஆனால் நாங்கள் ஒவ்வொருவரும் 10 அடிவரை விட்டுத் தந்திட தயராக இருக்கின்றோம். ஆனால் அவர்கள் மொத்தத்தையும் இடிப்போம் என்றே அடம் பிடிக்கின்றார்கள்.

மோடியின் பிடிவாதம் மோசமானது. அவர் காசியின் ஆன்மீகத்தோடு விளையாடுகின்றார். இப்போது புதுப்புது தீவிரவாத பக்தர்கள் முளைத்திருக்கின்றார்கள். இவர்கள் தாம் இப்போது காசியை ஆட்சி செய்கின்றார்கள்; என்கின்றார்.

### புதுப்புது தீவிரவாத அமைப்புகள்

பிரண்ட்லைன் பத்திரிகை மேற்கொண்ட ஆய்வில் பல புதிய குழுக்கள், அத்தனையும் இந்துத்துவ தீவிரவாத குழுக்கள், காசியில் முளைத்திருக்கின்றன. இவை இந்த இடிப்பில் மும்முரம் காட்டுகின்றன என்கின்றது.

இந்தக் குழுக்களின் தலைவர்கள் பணத்தில் மிதக்கின்றார்கள். அதேபோல் வாகனங்கள் உட்பட அனைத்து வசதிகளோடும் உலா வருகின்றார்கள். இடிபாடுகளைக் கவனிக்கின்றார்கள். புதிய இந்துத்துவ அமைப்புகள் இப்போது அங்கே கொடி கட்டி பறக்கின்றன இவையெல்லாம் நேற்று முளைத்தக் காளான்கள் போடுகின்ற ஆட்டங்களுக்கு அளவில்லை.

### முஸ்லிம்களுக்கு எதிர்ப்பு

நடப்பவை இறுதியில் கியான் வஸ்பி பள்ளிவாசலை இடிப்பதிலே வந்து முடியும் என்பதை முஸ்லிம்கள் நன்றாகவே உணருகின்றார்கள். மஸ்ஜித்

கியான் வஸ்பி - காசி விஸ்வநாதர் கோயில் இவை வீற்றிருக்கும் வளாகத்திற்கு இட்டுச் செல்லும் பாதை மிகவும் குறுகலானது.

மனிதர்களே கியூ முறையில் தான் செல்ல முடியும் இதனை ஏற்கனவே குறிப்பிட்டோம். அவற்றின் தொன்மைகளைக் கருதியே அவை அப்படியே, ஆண்டாண்டு காலமாக அப்படியே விடப்பட்டன.

இந்த வீதிகளையும் அவற்றிலிருந்த கடைகளையும் இடிக்கின்றார்கள். காரணம் கியான் வஸ்பி மஸ்ஜித் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்திற்கு வெளியே அதிகம் அதிகம் மக்கள் குழுமுவதற்கும் பெரும் கும்பலைக் கொண்டு மஸ்ஜித் - ஐ இடிப்பதற்குமே என்கின்றார் ஜெ.எஸ். அமின். இவர் அஞ்சுமன் இந்தி ஜாமியே மஸ்ஜித் பொது செயலாளர். அதாவது அயோத்யா போன்றதொரு சூழ்நிலையை உருவாக்கிட வகை செய்கின்றார்கள்.

**முஸ்லிம்களோடு கை கோர்க்கும் இந்துக்கள்**

நடந்து கொண்டிருக்கும் காட்டு மிராண்டித்தனங்களுக்கு எதிராக கியான் வஸ்பி மஸ்ஜித் கமிட்டியும் வேத வியாஸ் பீடம் என்ற அறக்கட்டளையும் இணைந்து இடிமானங்களை நிறுத்த வேண்டும் அவை இப்போதைய நிலையிலேயே பாதுகாக்கப்பட வேண்டும். என்றொரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

ஆனால் முஸ்லிம்களையும் அவர்களோடு கை கோர்க்கும், இந்துக்களையும் மத்திய மாநில அரசுகளும், சங்கப்பரிவாரத்தின் குட்டி அமைப்புகளும் பயங்கர மிரட்டல்களை விடுத்து வருகின்றார்கள். எதிர்ப்பைத் தெரிவித்த இந்து மக்களை ஏற்கனவே மிரட்டி அவர்களின் வாயை அடைத்து விட்டார்கள்.

ஆனாலும் பலர் அனைத்துத் தடைகளையும் தாண்டி அங்கே வீரியத்தோடு எதிர்த்து விடுகின்றனர். முஸ்லிம்கள் அவர்களையும் அரவணைத்து அணிதிரட்டி கியான் வஸ்பி மஸ்ஜித் - ஐ காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

**மஸ்ஜித் - ஐ கப்பாற்றிட இயலுமா?**

சங்கப்பரிவாரகள் தங்கள் குண்டர்களைத் திரட்டி ஒரே நாளில் கியான் வஸ்பி மஸ்ஜித் - ஐ இடித்து விடலாம் என்று திட்டம் போட்டு செயல் பட்டாலும், முஸ்லிம்களும் தங்களால் பெரிய கூட்டம் ஒன்றை கூட்டிட இயலும் எனக் காட்டி வருகின்றார்கள்.

இதனால் இன்று வரை உயிர்ச் சேதங்கள் எதுவுமில்லை. அடுத்து இதில் முஸ்லிம்கள் தனித்து இல்லை. ஆன்மீகவாதிகள் இந்துக்களில் பக்தி சிரத்தையோடு இருப்பவர்கள் இவர்களையெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திடும் அளவில் கைக்கோர்த்து நிற்கின்றார்கள்.

பொதுமக்களும், ஒட்டுமொத்தமாக சங்கப்பரிவாரத்திற்குப் பின்னால் இல்லை. அவர்கள் நியாயத்தின் பக்கமே நிற்கின்றார்கள் அவர்களை பொருத்தவரை கோயிலும் மஸ்ஜித்தும் அடுத்தடுத்து நிற்பதில் எந்தப் பிரச்சனையுமில்லை.

இனி சங்கப்பரிவாரத்தினர் குண்டர்களைக் கொண்டு வந்து தான் தங்கள் வகுப்புக் கலவரத்தை நிறைவேற்றிட வேண்டும். பள்ளிவாசலை இடித்திட வேண்டும்.

இதுவே தான் பாபரி மஸ்ஜித் விவகாரத்திலும் நடந்தது என்கின்றார்கள் பார்வையாளர்கள்.


எல்லாவற்றிற்கும் மேலாகச் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் யாரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள், நாத்திகவாதிகள் ஒரு பாசிச திட்டத்தை வன்முறையின் மூலம் இந்திய மக்கள் மீது திணித்துக் கொண்டிருக்கின்றன என்பதை அதிகமதிகம் இந்துக்கள், மகந்துகள், பூசாரிகள் இந்து வேதங்களை ஆராய்ச்சி செய்பவர்கள், இவர்கள் புரிந்திட தலைப்பட்டு விட்டார்கள்.

ஆட்சியில் அமர்ந்து எதையும் சாதிக்க முடியாதவர்கள் சண்டைகளை மூட்டி வாழலாம் என முடிவு செய்து விட்டார்கள் என்பதை இந்துக்களும் புரிந்து கொள்ள முற்பட்டுவிட்டார்கள்.

இந்த அனுகூலங்களைப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்கள் தங்கள் –

**ஸிம்.ஜி.எம்**


பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்.




விலை: 90/-

+91 8148129887



# நடால் இந்திய காங்கிரஸ்

தென்னாப்பிரிக்கா நடால் நகரில், பிரிட்டிஷ் அரசின் கொத்தடிமைகளாக வேலை செய்த இந்தியர்களை மீட்பதற்காக 1894ல் உருவான ஓர் இயக்கம் நடால் இந்திய காங்கிரஸ் எனப்படுகிறது.

இதற்கு முன்னரே 1885ல் இந்தியாவில் நடந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எதிர்கட்சியாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம், தாதாபாய் நௌரோஜி மற்றும் தீன்ஷா வாச்சா ஆகிய மூவரால் உருவானதே இந்திய தேசிய காங்கிரஸ். பிரிட்டிஷ் ராணி விக்டோரியாவின் அரசை எதிர்த்து இந்த தேசிய காங்கிரஸ் தொடங்கப்படவில்லை. வணிகம் மற்றும் சரக்கு போக்குவரத்து உடனான ஒப்பந்தங்கள் பிரிட்டிஷ் ராஜின் கீழ் கொஞ்சம் அடாவடித்தனமாக நடத்தப்பட்டுக்கொண்டிருந்த போது இங்கிலாந்து பார்லிமண்டில் ஒரு அங்கமாக இருந்த இங்கிலாந்தின் காங்கிரஸிற்கு இந்தியாவில் ஏற்பட்ட கிளையே தேசிய காங்கிரஸ்.

இதனை வணிக லாபம் மற்றும் பொருளாதார பிரச்சனைகளை சீர்படுத்திக்கொள்வதற்காக ஆலன் ஹியூம் தொடங்கினார். அவர் பிரபல வியாபாரியாக இருந்தார்.அவரது வியாபாரத்திற்கு அவ்வப்போது இடைஞ்சல் கொடுத்தும், மிதமிஞ்சிய வரி வசூலும் செய்துகொண்டிருந்த பிரிட்டிஷ் அரசை உள்ளிருந்து எதிர்க்கவே ,ஹியூம் தமது சொந்த சுயலாபத்திற்காக தொடங்கிய அமைப்பு தான் காங்கிரஸ் ஆகும். அவருக்கு துணையாக இந்திய நிலத்தின் பிரபல வியாபாரிகளான பார்சிய தாதாபாயும், தீன்ஷாவும் துணை நின்றனர். அவர்களுக்கும் தங்களது வியாபாரத்தை விரிவுபடுத்துவதில் பிரிட்டிஷ் அரசு தடைகள் ஏற்படுத்தியது.

பட்டாபி சித்தராமையா - இந்திய காங்கிரஸ் பற்றிய வரலாற்றினை விரிவாக எழுதிய ஒரு பிரபல எழுத்தாளர் ஆவார்., அவர் கூட காங்கிரசின்

இந்தியாவில் தொடங்கப்பட்டது மர்மமாகவே உள்ளது என எழுதியுள்ளாரே தவிர, இந்திய காங்கிரஸ் சுதந்திர போராட்ட இயக்கமாக தொடங்கப்படவில்லை, அது ஆறு பேர் மட்டுமே அடங்கிய ஒரு அமைப்பாக தொடங்கப்பட்டது என்கிறார். உமேஷ் சந்திர பானர்ஜி, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகிய இரு இந்துக்களும், தாதாபாய் நௌரோஜி, தீன்ஷா வாச்சா ஆகிய இரு பார்சிக்களும், ஆலன் ஹியூம், வில்லியம் வெடர்பர்ன் ஆகிய இரு ஆங்கிலேயர்களுமாக வியாபார சங்கமாக தோன்றியதே இந்திய காங்கிரஸ் ஆகும்.

ஆனால் இந்திய காங்கிரஸை தாதாபாய் நௌரோஜி தான் இந்திய தேசிய காங்கிரஸ் ஆக்கினார், இரண்டாவது வருடம் 200பேர் இந்த அமைப்பில் இணைந்தனர், அனைவரும் வணிக நோக்கத்திற்காக இணைந்திருந்தனர். மூன்றாவது மாநாடு சென்னையில் நடந்த போது சிறுகுறு வணிகர்கள், தொழிலதிபர்களாக 430 பேர் வரை இணைந்த பிறகே அது கட்சியாக உருவெடுத்தது. இந்திய தேசிய காங்கிரஸ், 1887-1907 ற்குள் ஆங்காங்கே இருந்து அனைத்து வணிகர் மற்றும் தொழிலாளர் சங்கத்தினரின் சேர்க்கை காரணமாக பிரதான கட்சியாக உருவெடுத்திருந்த காரணத்தால் எல்லா தரப்பு மக்களும் காங்கிரசின் கீழ் திரள தொடங்கினார் அதன் பின்னரே பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் ஒர் இந்திய சுதந்திர போராட்ட அமைப்பாக மாறியது. பாலகங்காதர திலகர் தலைமையில் தீவிரவாத காங்கிரஸ் என்றும் கோகலே தலைமையில் மிதவாத காங்கிரஸ் என்றும் பிரிந்து செயலாற்ற தொடங்கியது.


ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒருவித சூழ்ச்சியே இந்திய தேசிய காங்கிரஸ் என அப்போதே சுபாஸ் சந்திர போஸ் முழங்கினார், காங்கிரஸ் ஒரு பிரித்தானிய சூழ்ச்சி தவிர வேறில்லை, ஒருவேளை பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருந்து அகற்றப்பட்டாலும், பிரதான எதிர்க்கட்சியாகவே இருந்து தேர்தல்களில் போட்டியிட்டு பதவிகளில் இந்தியாவில் குந்திக்கொள்ளலாம் என்கிற யுக்தியில் தான் இங்கே அதன் கிளை திறக்கப்பட்டுள்ளதாக கூறினார், 1915ல் காந்தி ,தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பி வந்த போது தீவிர அரசியலில் ஈடுபட்டார், ஒத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம் என பல சுதந்திர இயக்கங்களை அமல்படுத்திய காந்தி, 1919-1922 காலகட்டத்தில் சற்றே தளர்வுற்று , பிரிட்டிஷ் அரசினை எதிர்க்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மௌனம் காத்திருத்தார், இதனால் நாடு தழுவிய அளவில் பல குழப்பங்கள் நிலவியது இவ்வேளையில் தான் "சுயராஜ்யம் எம் பிறப்புரிமை " என குரல்கொடுத்த சித்தரஞ்சன் தாஸ் அவர்களின் தலைமையை ஏற்று காங்கிரசில் இருந்து விலகினார் போஸ். அதன் பிறகு நேருவின் பதவி ஆசைக்கு காந்தி இணங்கி போனது வேறு விஷயம்.

நாம் இங்கே ஆரம்பத்தில் குறிப்பிட்ட நடால் காங்கிரஸ் பற்றி ஒன்றுமே கூறவில்லையே, என இப்போது உங்களுக்கு தோன்றும்.. அதன் வரலாற்றை சுருக்கமாக சொல்ல இயலாது என்றாலும் கூற முயற்சிக்கிறேன்.

இந்தியாவில் இருந்து தேயிலை தோட்டத்தொழிலாளர்களாக ஒருபுறம் இலங்கைக்கும், ரப்பர் தோட்ட தொழிலாளர்களாக மலேயாவிற்கு ஒருபுறமும், தேக்குமரங்களை வெட்டிவீழ்த்திட பர்மாவிற்கும் , கரும்புத்தோட்ட தொழிலாளர்களாக தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கும் கொத்தடிமைகளாக குடிப்பெயர்வு செய்யப்பட்டோர் பல லட்சம் இந்தியர்கள். இதில் மலேயா,இலங்கை நாடுகளுக்கு அதிகம் சென்றவர்கள் தமிழர்கள், பர்மாவிற்கு சென்றோர் வங்காளிகள் - கணிசமான தமிழர்களும் உண்டு. தென்னாப்பிரிக்கா நாட்டிற்கு அடிமைகளாக சென்றவர்கள் குஜராத்திகளும் ராஜப்புத்திரர்கள், இதிலும் கணிசமான அளவு தமிழர்கள் உண்டு.

தென்னாப்பிரிக்கா, நடால் நகரில் பெரும் வணிகக்காரராகவும் பணக்காரராகவும் இருந்தவர்கள் குஜ்ஜார் முஸ்லிம்கள். அங்கு அவர்களுக்கு மரம் அறுக்கும் சாமில்கள் தொடங்கி நிறைய நிலபுலன்களோடு கரும்புத்தோட்டங்களும் இருந்தன. அவற்றை வருட லீசுக்கு எடுத்து நடத்திவந்த பிரிட்டிஷ் ஆங்கிலேய முதலாளிகள், இந்திய தொழிலாளிகளை கொடுமைப்படுத்தி வந்தனர். இது ஒருபுறமிருக்கட்டும்.

அங்கு மிகப்பெரிய செல்வாக்குடன் ஏற்றுமதி செய்து வந்தவரும் தென்னாப்பிரிக்கா தொழிலாளர் மக்களிடையே பிரபலமானவருமான தாதா அப்துல்லாஹ் ( சேத் அப்துல்லாஹ் ஹாஜி



ஆதம் ஜவேரி) அவருடைய பெயரை கூறி அங்கு யாரும் அழைக்கமாட்டார்கள், "பெரியண்ணா" என பொருள்படும்படியான "தாதா" என்றே அன்போடு அழைப்பார்கள்.

அவருடைய வணிக நண்பர்களான அப்துல் காதிர் ஹாஜி, மூஸா ஆதம் ஹாஜி, காசிம்ஹாஜி மற்றும் கம்ருதீன் ஹாஜி ஆகியோருடன் இணைந்து வணிக கம்பெனி ஒன்றை நடத்தி வந்தார். இதில் ஹாஜி என்பது அவர்களது இனத்தின் அடைமொழி. அனைவருக்கும் மூத்தவரான பெரியண்ணா தாதா அப்துல்லாஹ் அவர்களுக்கு சொந்தமாக நான்கு போக்குவரத்து ஸ்டீமர்கள் ஓடியது என்பதை வைத்து அந்தகாலகட்டத்தில் அவர் எத்தனை பெரிய சீமானாக இருந்திருப்பார் என யூகிக்கலாம்.

தாதா அப்துல்லாஹ் அவர்களுக்கு குஜராத் போர்பந்தர் தான் சொந்த ஊர், ஆகவே அவர் அடிக்கடி குஜராத்திற்கும் -நடால் நகரத்திற்கும் கப்பல் போக்குவரத்தாக இருந்தார். சிலகாலம் தென்னாப்பிரிக்கா நாட்டிலேயே தங்கிவிட்ட காரணத்தால் குஜராத்தில் அவரது கூட்டாளிகளில் சிலர் நஷ்டக்கணக்கு காண்பித்து ஏமாற்ற தொடங்கினர். இதனால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். குஜராத்தில் ,குஜராத்தியில் வழக்காடினால் போதும் என்ற நிலையில் தென்னாப்பிரிக்கா வழக்காடு மன்றத்தில் ஆங்கிலத்தில் வாதாட அவருக்கு வழக்குரைஞர் தேவைப்பட்டது. வணிகத்தொடர்பு இருநாட்டிற்கும் இருந்த காரணத்தால் இருநாட்டிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்துகொண்டிருந்தால் வழக்கு மாறி மாறி தங்களது போக்கினை மாற்றியமைத்துக் கொண்டிருந்தது.

இதனால் தாதா அப்துல்லாஹ் அவர்களுடைய நண்பரின் சிபாரிசின் பெயரில் பார் அட் லா முடித்த காந்தி, தாதா அப்துல்லாஹ் தரப்பு வக்கீலாக ,தென்னாப்பிரிக்கா செல்கிறார். அங்கு சிறப்பாக செயல்படுகிறார். தாதா அப்துல்லாஹ், காந்தியின் ஆங்கில வழக்காடு திறமையை பலரிடம் புகழாரம் செய்து வைக்கிறார். அதே நேரத்தில் நடால் பகுதி தோட்டத்தொழிலாளர் பிரச்சினை தலையெடுக்கிறது.

இதனையும் காந்தியுடைய ஆங்கில வழக்காடு திறமையுடன் கையாண்டு அவர்களுக்கான நேர்மையான கூலி மற்றும் ஓய்வு, அடிமை முறை வேலை ஒழிப்பு, திருமணம் மற்றும் இந்தியா போய்வர அனுமதி என தொழிலாளர்களுக்கான அனைத்தையும் ஆங்கிலேய முதலாளிகளிடம் பெற்று ஓர் ஒழுங்குமுறைக்கு கொண்டுவருகிறார், ஏற்கனவே அவர்களுக்காக குரல்கொடுக்க தொடங்கியிருந்த தாதா அப்துல்லாஹ் மற்றும் அவரது சகோதர் சேத் அப்துல் கரீம் ஜவேரி ஆகியோர் மேலும் அவர்களது வணிக நண்பர்களாக ஹபீப் ஹாஜி, ஆதம் ஹாஜி, பீரான் முகமது, முகமது ஹாஜி, கமருதீன், காசிம் ஹாஜி, மூஸா ஹாஜி,தவ்ஜி முகமது, முருகேசன் பிள்ளை, ராமசாமி நாயுடு, உசேன் மீரான், ஆதம்ஜி மியான்கான், தாவுத் முகமது, துரைசாமி பிள்ளை , ரங்கசாமி படையாட்சி, உஸ்மான்கான் ரஹ்மத் ஆகியோரை இணைத்து "நடால் இந்திய காங்கிரஸ்" எனும் விடுதலைப்போராட்ட இயக்கத்தை 1892ல் துவக்கினார்.

அதற்கு லீகல் அட்வைசராகவும் மதிப்புமிகு செயலாளராகவும் காந்தியை நியமித்தார் தாதா அப்துல்லாஹ். அங்கிருந்தபடியே அடிமைப்பட்ட இந்தியர்களுக்காக போராடி வந்த தாதா அப்துல்லாஹ் அவர்கள் இந்திய சுதந்திர இயக்கங்களுக்கும் பண உதவி, பொருளுதவி செய்தவர் ஆவார்.



அதன் பிறகு 1915ல் காந்தி, இந்தியா திரும்ப வேண்டிய நிலையில், இதே விடுதலை இயக்கத்தை, இந்தியாவில் போய் தொடரும்படியும் அதற்கு தேவையான பண உதவியை தாம் தாராளமாக செய்ய கடமைப்பட்டிருப்பதாகவும் கூறி இந்திய நாட்டின் சுதந்திர வேட்கைக்கு வித்திட்டு அனுப்பி வைத்தார் அந்த கோமான், இந்தியாவில் நிகழ்ந்த அரசியல் குழப்பங்கள் மற்றும் இருமுறை நிகழ்ந்த உலகப்போர்கள் காரணமாக ஏற்றுமதி தொழில் மட்டுமல்லாது மற்ற அனைத்துவித வர்த்தகமும் பாதிப்படைந்து தாதா அப்துல்லாஹ் உள்ளிட்ட மற்ற எல்லா வெளிநாட்டு தனவந்தர்களும் போர் சூழலில் சிக்கி காணாமல் போயினர்.

தாதா அப்துல்லாஹ் அவர்களுக்கு ஒரேயொரு மகள் மட்டுமே அவரையும் இந்தியாவில் தான் திருமணம் முடித்து கொடுத்திருந்தார்... தாதா அப்துல்லாஹ் அவர்களின் வரலாறு புதைக்கப்பட்டது போலவே அவரது குடும்பம் என்னானது, இந்தியாவில் அவரது மகள் என்னவானார் என மறக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டது.

வரலாற்று சிறப்புமிக்க திரைப்படமான "காந்தி" ல் கூட தாதா அப்துல்லாஹ் அவர்களது கதாபாத்திரத்தில் இந்தி நடிகர் அம்ரிஷ் பூரி நடித்திருப்பார், அதில் ஒரு ஓரமாகத்தான் அவரது கதாப்பாத்திரம் வரையப்பட்டிருக்கும், அதேபோல தென்னாப்பிரிக்கா நாட்டில் காந்தி சென்ற ரயிலில் அவரை கருப்பர் என கூறி தூக்கியெறியப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பின்னணியில் உண்மைகள் பல மறைக்கப்பட்டிருக்கிறது.

சத்திய சோதனை படித்த அனைவருக்கும் அது தெரிந்தே இருக்கும். தாம் கருப்பர் என இனவெறி தாக்குதலுக்கு உள்ளானதால் தான் காந்திக்கு சுதந்திர தாகம் எடுத்ததாக இன்னாள் வரை கூறப்படுவது அனைத்துமே புனைந்துவிடப்பட்ட பொய்யே ஆகும்.

இந்திய சுதந்திர போராட்டத்தில் முஸ்லிம்களின் தியாகங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டது போலவே இந்த வரலாறும் இருளில் மூழ்கியது. காந்தியும் கூட தமது அரசியல் ஆசான் கோபாலகிருஷ்ண கோகலே என்று பலமுறை கூறினாரே தவிர எங்காவது தாதா அப்துல்லாஹ் பெயரை குறிப்பிட்டாரா என தெரியவில்லை.

**Article by**
**Ummu Adhil.**


**வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்**

**8148129887**



# நாட்டின் பெரிய வழக்கில் வெளியான அநீதி தீர்ப்பு!

## சொஹ்ராபுதீன் போலி என்கவுண்டர் வழக்கு

சொராஹ்புதீன், அவரது மனைவி கௌசர் பீ பி மற்றும் ஒருவர் ஹைதராபாத்திலிருந்து மகாராஸ்டிராவின் சிங்கிலி என்ற ஊருக்கு சென்று கொண்டிருக்கும் போது 2005 நவ.23ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு குஜராத் மற்றும் ராஜஸ்தான் காவல்துறையினரால் இழுத்து செல்லப்பட்டனர். அதன் பிறகு மூன்று நாட்கள் கழித்து சொஹ்ராபுதீன் காலை 5 மணியளவில் ரோட்டுக்கு கொண்டுவரப்பட்டு இருசக்கர வாகனத்தில் தப்பித்து செல்ல முயற்சி செய்தார் என கூறி என்கவுண்டர் செய்யப்பட்டார்.

அவரது மனைவி கௌசர் பிபி அடுத்த சிறிது நாளிலேயே காவல் அதிகாரிகளால் கற்பழிக்கப்பட்டு உடல் எரிக்கப்பட்டு புதைக்கப் பட்டார். அடுத்த வருடமே அவர்களுடன் இருந்த துளசிராம் பிரஜாபதி சாட்சியங்களை அழிக்க முயற்சி செய்தார் என்று கூறி என்கவுண்டர் செய்யப்பட்டார்.

சொஹ்ராபுதின் அப்போதைய குஜராத் முதலமைச்சராக இருந்த மோடியை கொல்ல திட்டமிட்டு வந்த லஷ்கர் இ தொய்பா தீவிரவாதி அதனால், அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றே காவல்துறையினரால் சொல்லப்பட்டது. (DC 13/07/07)

அதன் பிறகு சொஹ்ராபுதீன் சகோதரர் ரபாபுதீன், கௌசர் பிபி பற்றி தகவல் அறிய உச்சநீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார். அந்த மனுவை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம் இந்த வழக்கை குஜராத்தின் CID கிரிமினல் பிரிவிற்கு மாற்றி உத்தரவிட்டது. அதனால் பல்வேறு விசாரணைக்கு பிறகு அதிர்ச்சிகரமான பல தகவல்களை உள்ளடக்கிய குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. (DC 12-03-07)

### CID குற்றப்பத்திரிக்கையின் அறிக்கை

சொஹ்ராபுதீன் எண்கவுன்டர் வழக்கை விசாரிக்க தொடங்கிய CID க்கு பல அதிர்ச்சிகரமான தகவல் கிடைத்தது. இந்த வழக்கில் குஜராத்தின் பெரிய பெரிய அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்தனர்.

அந்த அறிக்கைப்படி. குஜராத் ATS பிரிவின் உயர் அதிகாரிகள் பலர் ஹைதராபாத் சென்று சிறிது நாட்கள் தங்கி ஆந்திர காவல் அதிகாரிகளுடன் இணைந்து இரண்டு போலி நம்பர் பிளெட்களை *Ap-11* என்ற பெயரில் உருவாக்கி அதனை தனியார் காரில் பொருத்தி அதன் மூலம், KA *05* AF*5051* M.j டிராவல் தனியார் பேருந்தை இடைமறித்து சொராஹ்புதீன், அவரது மனைவி, மற்றும் அவர்களுடன் இருந்த ஒருவரை நவம்பர் *23,2005* அதிகாலை *1.05* மணிக்கு இழுத்து சென்றனர். சொஹ்ராபுதீனுடைய புகைப்படத்தை வைத்து அப்பேருந்தில் பயணித்த ஆறு நபர்கள் மற்றும் டிரைவர் இதனை உறுதி செய்தனர்.

பின்னர் சொஹ்ராபுதீன் தனியாக ஒரு பண்ணை வீட்டுக்கு அழைத்து வரப்பட்டு, குஜராத் துணை காவல் மேலாளார்(SI) ஒருவர் களவாடப்பட்ட இரு சக்கர வாகனத்தில் வேகமாக வருவது போல் வந்து சினிமா பாணியில் குதித்த பிறகு அதே இடத்தில் சொஹ்ராபுதினை வைத்து நான்கு காவல் அதிகாரிகளால் எட்டு முறை சுடப்பட்டு கொல்லப்பட்டார். இந்த சம்பவம் நடந்த இடத்தில் தீவிரவாத தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரியான வன்சாரா மற்றும் ராஜேஷ் பாண்டியன் ஆகியோர் இருந்தனர். சொஹ்ராபுதீன் பயன்படுத்தியதாக கூறப்பட்ட இருசக்கர வாகனம் திருடப்பட்டதாக கூறி அந்த பகுதியை சார்ந்த ஸ்லாக்சிங் ராம்சிங் யாதவ் என்பவர் சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்கு பிறகு **FIR** தாக்கல் செய்தார். பின்னர் பத்திரிக்கை செய்திகளில் சொஹ்ராபுதீன் என்கவுண்டர் படத்தை பார்த்து தனது வண்டி என அடையாளம் காட்டினார்.

***(DC 12/03/07)***

இந்த அறிக்கை மூலம் சொராஹ்புதீன் என்கவுண்டர் மட்டுமல்ல அவரது மனைவி, துளசிராம் என அனைவரும் காவல்துறையினரால் கொல்லப்பட்டது தெரிய வந்தது.

**வழக்கில் சம்பந்தப்பட்டவர்களும் சாட்சிகளும்,.**

முன்னாள் **DIG** குஜராத்தை சார்ந்த வன்சாரா மற்றும் ராஜ பாண்டியன். ராஜஸ்தானை சார்ந்த **M.N.**தினேஷ் மற்றும் குஜராத்தை சேர்ந்த காவலதிகாரி நரேந்திர அமீன் போன்றோர்கள் இவ்வழக்கின் முக்கிய குற்றவாளிகள் .இவர்கள் எல்லோரும் **IPS** தரத்தில் இருந்த உயரதிகாரிகள்.

***(The Hindu 13.10.10)***

***IG H.C*** பாண்டேவிற்கும் இந்த வழக்கில் தொடர்பிருப்பதால் வழக்கு விசாரணையை காலம் தாழ்த்தியும் சாட்சியங்களை அழிக்கும் செயலையும் செய்து வருகிறார் என விசாரணை அதிகாரி ராய் குற்றம் சாட்டுகிறார். ***(TOI 12-08-11)***

முதன்மை குற்றவாளியாக இருந்த வன்சாரா'வின் பெயர் கூறி *2007*ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தை மோடி தொடங்கினார். இவ்வளவு நெருக்கத்தை கொண்டிருந்த மோடி வன்சாரா கைதுக்கு பிறகு அவருக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என கூறினார். ***(Tehelka 05-09-13)***

இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான அமீத் ஷாவிற்கு பிணை வழங்கப்பட்ட பிறகும் குஜராத்திற்குள் நுழைவதற்கு குறிப்பிட்ட காலம் வரை தடை பிறப்பித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ***(DC 11/11/10)***

முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான முன்னாள் காவல்துறை உயரதிகாரி நரேந்திர அமீன் குற்றங்களை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலமும் அளித்தார். ***(The hindu 11-08-10)***

குஜராத்தின் காந்திநகர் **SP** ஆக இருந்த சிங்கால் சொராஹ்புதீன் மற்றும் அவரது மனைவி சட்டவிரோத காவலில் இருந்த போது தான் கண்டதாக சாட்சி அளித்திருந்தார். இந்த வழக்கின் முக்கிய சாட்சியான இவர் தொடர்ச்சியான மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார் என நீதிமன்றத்தில் அதிகாரி ராய் கூறியிருந்தார்.

***(TOI 11-05-10)***

இந்த போலி என்கவுண்டர் கொலையில் குஜராத் மட்டுமல்ல ஆந்திராவை சார்ந்த *24* காவல் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ***(DC 11/04/11)***

இந்த வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முக்கிய குற்றவாளியான வன்சாரா பிரதமர் வேட்பாளராக மோடி முன்னிறுத்தப்படும் போது அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் "எல்லாவற்றிற்கும் காரணமானவர்களான தாங்களும், உங்கள் கூட்டாளிகளான அமீத் ஷாவும் பதவியில் இருக்கும் போது நாங்கள் மட்டும் சிறையில் இருக்க வேண்டுமா?" என்று எழுதியிருந்தார். இந்த கடிதத்தை கொண்டு எதிர்கட்சிகள் மோடியின் ராஜினாமாவை வலியுறுத்தினார்கள். ஆனால் இதுவும் பிறகு மழுங்கடிக்கப்பட்டது. ***(Tehelka 5/09/13)***



**விசாரணை அதிகாரிகள், சாட்சிகள் மீதான அச்சுறுத்தல்கள்.**

இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக இருந்த ரஜ்னிஷ் ராய் **IG** ஆக இருந்த பி.சி.பாண்டேவிற்கும் இதில் தொடர்பு இருக்கிறது என்று கூறினார். இதன் காரணமாகவே இவர் மூலம் ராயின் பதவி உயர்வு நிராகரிக்கப்பட்ட து.**(TOI 12/08/11)**

சொராஹ்புதீன் சகோதரர் ரபாபுதீன் மும்பை நீதிமன்றத்தில் தோன்றி திடீரென தான் தொடர்ந்த அனைத்து வழக்குகளையும் திரும்ப பெறுவதாக அறிவித்தார். இதை தனது வழக்கறிஞர்களுக்கு கூட சொல்லாமல் செய்தார். ஊடகங்களிடம் விளக்கும் போது தான் மன அமைதியற்று இருப்பதாகவும் அதனாலேயே திரும்ப பெறுவதாகவும் அறிவித்தார். **(The Hindu 07/04/16)**

வழக்கை விசாரித்து வந்த சிபிஐ, குஜராத் நீதிமன்றம் அமீத் ஷாவிற்கு பிணை வழங்கியதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை நாடி, இந்த வழக்கை குஜராத் கீழ்நீதிமன்றங்களில் நடந்தால் நீதமாக நடக்காது அதனால் குஜராத்திற்கு வெளியிலேயே வைக்க வேண்டும் என கேட்டது. (தினமலர் 11/30/11) குஜராத் நீதிமன்றங்களே அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக நீதிக்கு எதிராக செயல்படுவதை சிபிஐ வெளியே கொண்டு வந்தது.

வழக்கின் தீர்ப்பு 2018 டிச.21 வருகின்ற வேலையில் டிச.17ம் தேதியே வழக்கின் முன்னாள் விசாரணை அதிகாரியான ராய் அவர்களை பணி இடைநீக்கம் செய்து அரசாங்கம் உத்தரவிட்ட து.

**(Scroll 20/12/18)**

**நீதிமன்றத்தின் பங்களிப்புகள்.**

சொராஹ்புதீன் என்கவுண்டர் வழக்கை விசாரித்து வந்த உச்சநீதிமன்றம் போலி என்கவுண்டர் என்பதை உறுதி செய்து சொராஹ்புதீன் குடும்பத்திற்கு 10 லட்சம் தரும் படி உத்தரவிட்ட து. **(DC 12?08/09)**

ஜனவரி, 2010ம் ஆண்டு மாநில அரசின் விசாரணையில் நம்பிக்கையிழந்த நீதிமன்றம் ரபாபுதீன் கோரிக்கையை ஏற்று சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது.

ஜூலை 23,2010 சிபிஐ நீதிமன்றத்தில் குஜராத் உள்துறை அமைச்சர் அமீத் சா, ராஜஸ்தான் உள்துறை அமைச்சர், குஜராத்தின் பெரிய **IPS** உயர் அதிகாரிகள் உட்பட 38 பேர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது.

ஜூலை 25,2010 அமீத் ஷா கைது செய்யப்பட்டார். பிறகு அக்.8 2010ல் அமீத் ஷாவிற்கு பிணை கோரிய வழக்கில் பிணை தர முடியாது என மறுத்து விட்டது சிபிஐ சிறப்பு நீதிமன்றம். அக்29,2010 அமித்ஷாவிற்கு ஒரு லட்சம் அபராதத்துடன் பிணை வழங்கியது.

2012 செப்.27 அன்று இந்த வழக்கை குஜராத்திலிருந்து மும்பை நீதிமன்றத்திற்கு மாற்றி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அடுத்ததாக அமித் ஷா விடுதலை, அதிகாரிகள் விடுதலை என இறுதியாக 23 பேரை தவிர அனைவரும் சாட்சிகள் போதவில்லை என்று இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவித்தது. **(Indian Express 21/12/18)**

12 வருடங்களுக்கு பிறகு இந்த வழக்கின் இறுதி தீர்ப்பை அளித்துள்ளது சிபிஐ சிறப்பு நீதிமன்றம். பாஜக'வின் தேசியத் தலைவர் அமித்ஷா, காவல்துறையின் முக்கிய உயர் அதிகாரிகள் உடபட 38 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சாட்சி போதாமை காரணமாக முக்கிய பெரிய மனிதர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டு இறுதியாக காவல் மேலாளர், இணை மேலாளர் போன்ற 22 காவல் அதிகாரிகள் மற்றும் பண்ணை வீட்டின்

உரிமையாளர் உட்பட 23 பேர் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்கள். டிச 21,2018 அன்று வழக்கின் தீர்ப்பை அளித்த நீதிமன்றம், குறிப்பிடப்பட்டுள்ள 210 சாட்சிகளில் முக்கிய சாட்சிகளான 92 சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியதால் குற்றம் நிரூபிக்க முடியாமல் 22 பேரும் விடுவிக்கப்படுவதாக தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

***(Scroll.in 07/12/18, 21/12/18)***

**நீதிபதி லோயா கொலை?!**

2012ம் ஆண்டு உச்சநீதிமன்றம் விசாரணையை குஜராத் நீதிமன்றத்திலிருந்து மாகாராஷ்டிராவுக்கு மாற்றி வைத்து, இந்த வழக்கு விசாரணை நேர்மையானதாகவும் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை இவ்வழக்கின் விசாரணையை ஒரே நீதிபதியின் கீழ் நடத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டது. இந்த உத்தரவை மீறும் விதமாகவே தொடக்கத்தில் விசாரனையின் தொடக்கத்திலேயே சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக இருந்த J.T.உத்பத் பணி மாற்றம் செய்யப்பட்டு அந்த இடத்தில் லோயா அமர்த்தப்பட்டார்.

உத்பத் 2014 ஜூன் ,06 அன்று அமித் ஷா நீதிமன்றத்தில் ஆஜராகாததை கண்டித்தார். அடுத்த விசாரணை தேதியை ஜூன் 26ம் தேதி தள்ளி வைத்து அமித் ஷா கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார். ஆனால் ஜூன் 25ம் தேதியே பணி மாற்றம் செய்யப்பட்டார். அடுத்ததாக நியமிக்கப்பட்ட லோயாவும் விசாரணை செய்து வந்த நிலையில் 31 அக்டோபர் 2014 ல் விசாரணையின் போது அமித் ஷாவிற்கு ஆஜராகுவதில் இருந்து விலக்கு அளித்து கண்டிப்பாக டிச.15,2014 அன்று ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார். ஆனால் டிசம்பர் 1ம் தேதி லோயா இறந்த செய்தி பத்திரிக்கைகளில் வெளியானது.

**நீதிபதி லோயா மரணத்தில் மர்மங்கள்**

நீதிபதி லோயா, 2014. டிச,1 அன்று தன்னுடன் பணியாற்றும் ஒரு நீதிபதியின் மகளின் திருமணத்தில் பங்கேற்பதற்காக இரு நீதிபதிகளின் துணையுடன் சென்ற போது நாக்பூரில் மாரடைப்பால் இறந்து விட்டதாக செய்திகள் வெளியாயின.

நீதிபதி லோயா அவர்களின் மரணம் இயற்கையானது என சொல்லப்பட்ட நிலையில் அவருக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையும், அவரது உடலை குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளிலும் பல்வேறு விதமான குழப்பங்களும் சந்தேகங்களும் எழுகிறது.

லோயாவின் சகோதரிகளில் ஒருவரான அனுராதா பியானி லோயாவின் மரணத்தை பற்றி சொல்லும் போது, எனக்கு 1 டிச.2014 அன்று காலை, பார்டே என்ற நீதிபதி ஒருவர் எனக்கு போன் செய்து லோயா இறந்து விட்ட செய்தியை கூறினார். லோயாவின் உடல் லத்தூர் என்ற பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

லோயாவின் தந்தைக்கு ஐஷ்வர் பஹெத்தி என்ற ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர் போன் செய்து லோயா இறந்து விட்ட செய்தியையும் உடலை கொண்டு வருவதற்கான ஏற்பாட்டையும் செய்து வருவதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் லோயாவின் குடும்பத்தினர் யாருக்கும் அவர் யார் அவருக்கு எப்படி லோயாவின் மரணம் தெரிந்தது என்று இன்று வரை தெரியவில்லை.

லோயாவின் இன்னொரு சகோதரியான சரிதா மந்தானே விற்கு காலை டிச.1 அன்று 5.00 மணிக்கு நீதிபதி பார்டே போன் செய்து, லோயா இறந்துவிட்ட தகவலை சொல்லியிருக்கிறார். பிறகு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது அண்ணன் மகனையும் அழைத்து விட்டு கிளம்பும் போது அங்கே வந்த ஐஷ்வர் பஹெத்தி தனது வீட்டுக்கு அழைத்து சென்று நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாக கூறினார். ஆனால், இன்று வரை அவர் எப்படி நாங்கள் இருக்கும் மருத்துவனைக்கு வந்தார். நாங்கள் அங்கே இருப்பது எப்படி அவருக்கு தெரிந்திருக்கும் என தெரியவில்லை.

லோயாவின் சொந்தங்கள் எல்லாம் வந்து சேர்ந்த பிறகு இரவு 11.30 மணிக்கு லோயாவின் உடல் ஆம்புலன்சில் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஆம்புலன்சில் டிரைவர் தவிர யாரும் உடன் இல்லை. லோயாவை இந்த திருமணத்திற்கு வற்புறுத்தி கூட்டிச் சென்ற நீதிபதிகள் ஏன் ஆம்புலன்சில் இல்லை. இறப்பு செய்தியை சொன்ன நீதிபதி பார்டேவாவது வந்திருக்க வேண்டும், அவரும் இல்லை. லோயா ஒரு சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி, அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமல் டிரைவருடன் மட்டும் அனுப்பியது ஏன்?.

லோயாவின் சகோதரிகள் மேலும், லோயாவின் சட்டைகளில் ரத்தக்கறை இருந்தது, அவருடைய கழுத்து பகுதிகளில் தொடங்கி இடது தோள் பகுதியில் இருந்து முழங்கை வரை ரத்தக்கறை இருந்தது. அவருடைய பெல்ட் எதிர்புறமாக திருப்பப்பட்டு இருந்தது. ஆனால், பிரேத பரிசோதனை அறிக்கையில், லோயாவின் துணி வறண்டு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு மருத்துவராக பியானி, பிரேதபரிசோதனை செய்யும் போது ரத்தம் வராது என்பது தெரியும். பிறகு எப்படி ரத்தக்கறை வந்தது! என மீண்டும் பிரேத பரிசோதனை செய்ய வழக்கு தொடரலாம் என ஆலோசிக்கும் போது பிரச்சனையை தீவிரப்படுத்த வேண்டாம் என கூறி எல்லோரும் தடுத்து விட்டார்கள் என கூறுகிறார்.

லோயாவின் போன் எங்களுக்கு மூன்று நாட்களுக்கு பிறகு காவல்துறையினர் மூலம் இல்லாமல் அந்த ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர் ஐஷ்வர் மூலம் கிடைத்தது. ஆனால் அந்த போனில் எல்லா தகவல்களும் அழிக்கப்பட்டு இருந்தது.

**லோயா மரணத்தில் எழுப்பப்படும் கேள்விகள்?**

லோயாவின் சகோதரி பியானி நிறைய சந்தேகங்களை கேள்விகளாக எழுப்புகிறார்.அவை,

லோயா ரவி பவன் எனும் விருந்தினர் மாளிகையில் தான் தங்க வைக்கப்பட்டிருந்தார். அது எல்லா பெரிய மனிதர்களும் வந்து செல்லும் இடம். எப்போதுமே பாதுகாப்பு, வண்டி என எல்லா வசதியும் இருக்கும். ஆனால், லோயாவிற்கு நெஞ்சு வலி வரும் போது ஆட்டோ பிடித்து அழைத்து செல்லப்பட்டது ஏன்? இந்த இடத்திலிருந்து காலை நேரங்களிலேயே ஆட்டோ கிடைப்பது கஷ்டம். ஏனென்றால் ஆட்டோ நிறுத்தம் 2 கி.மீ தொலைவில் உள்ளது. இந்த நிலையில் எப்படி நள்ளிரவில் ஆட்டோ பிடித்து அழைத்து சென்றார்கள் என புரியவில்லை.

லோயாவை மருத்துவமனையில் அனுமதிக்கும் போதே ஏன் போன் செய்யவில்லை? லோயா இறப்பதற்கு முன்னர் கூட ஏன் போன் செய்யவில்லை?

பிரேத பரிசோதனை செய்வதற்கான அனுமதி கூட வாங்காமல் செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? லோயாவிற்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் என்ன? இதெல்லாம் யாருமே விளக்கவில்லை.

லோயாவை அனுமதித்த தாண்டே மருத்துவமனையில் என்ன மருத்துவ சிகிச்சைகள் பார்க்கப்பட்டது என்று எந்த மருத்துவ அறிக்கையையும் குடும்பத்தினரிடம் தராதது ஏன்?

லோயாவை திருமணத்திற்கு வலியுறுத்தி அழைத்து சென்ற நீதிபதிகள் இருவரும் லோயா இறந்து இரண்டு மாத காலத்திற்கு லோயா குடும்பத்தினரை சந்திக்கவே இல்லை.அதன் பிறகு அவர்கள் சொல்லும் போது, இரவு 12.30 மணிக்கு நெஞ்சு வலி வந்தது. அதனால் ஆட்டோவில் தாண்டே மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அவரே தான் படியேறி வந்தார். ஆனால் வசதி குறைவின் காரணமாக மெடிட்ரினா மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது அவரது உயிர் பிரிந்தது என்றார்கள். ஆனால் நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் மருத்துவமனையில் என்ன சிகிச்சை அளித்தார்கள் என்ற எவ்வித அறிக்கையும் குடும்பத்தாரிடம் கொடுக்கவில்லை.

பிரேத பரிசோதனை அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலும் நாக்பூரின் சதார் காவல் நிலைய மேலாளரின் கையெழுத்தும் லோயாவின் தந்தை உறவினர் என்று கூறி மயத்தாச்சா சுலத்பா என்ற கையெழுத்தும் இருந்தது. ஆனால் அப்படி ஒரு உறவினர் தங்களுக்கு இல்லை என்கிறார் லோயாவின் தந்தை.

பிரேத பரிசோதனையின் அறிக்கையில் லோயாவுக்கு கரோனரி தமனி குறைபாடு இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.இந்த நோய் புகைபிடித்தல், வயதானவர்களுக்கு, அதிக இரத்த அழுத்தம், கொழுப்பு இருப்பவர்களுக்கு வரக்கூடியது. ஆனால் லோயாவுக்கு வயது 48. ஒரு நாளைக்கு குறைந்தது 2 மணி நேரம் டேபிள் டென்னிஸ் விளையாடுவார். உடம்பில் சிறிய பிரச்சனை என்றாலும் என்னிடம் கேட்டுக்கொண்டு அதன் படி நடப்பார். அதனால் என்னால் இதை நம்ப முடியவில்லை என்கிறார் அவரது சகோதரி மருத்துவர்,பியானி.

பிரேத பரிசோதனை அறிக்கைப்படி, லோயாவுக்கு நெஞ்சு வலி காலை 4.00 மணிக்கு ஏற்பட்டதாகவும், டிச.1 2014 அன்று காலை 06.15 மணிக்கு அவர் உயிர் பிரிந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், லோயாவின் சகோதரிக்கு நீதிபதி பார்டே காலை 5.00 மணிக்கெல்லாம் அழைத்து லோயாவின் மரண

செய்தியை கூறிவிட்டார். இரண்டில் எது தவறானது?.இதில் எது தவறாக இருப்பினும் லோயாவின் மரணத்தில் ஏதோ அரசியல் சூழ்ச்சி இருக்கிறது.

**நீதிமன்றமும் ஜனநாயகமும் பாசிச அதிகாரத்தின் முன்னால் தோற்றுவிட்டன.**

நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் கூறப்பட்டதாவது, சாட்சிகள் ஏதும் சரியாக நிரூபிக்கப்படவில்லை. சொராஹ்புதீனை சுட்டவர்கள் யாரெனவும் நிரூபிக்க சிபிஐ தவறி விட்டது. அதனால் எல்லோரும் விடுவிக்கப் படுகிறார்கள். நான் இந்த விஷயத்தில் 'உதவியற்றவனாக' இருக்கிறேன். சொராஹ்புதீன் குடும்பத்திற்கு எனது வருத்ததை தெரிவித்து கொள்கிறேன் என தீர்ப்பு கொடுத்த நீதிபதி கூறினார்.

கிட்டத்தட்ட 12 வருடங்களாக பல்வேறு சோதனைகளுக்கு பிறகு பல சாட்சிகளை சில நேர்மையான அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்பித்து, பல அதிகாரிகள் இடம் மாற்றப்பட்டு, இடை நீக்கம் செய்யப்பட்டு, நீதிபதியின் உயிரும் பறிக்கப்பட்டு இறுதியில் இதுவரை நடந்த அத்தனை விசாரணையையும் வீணாக்கியிருக்கிறது நீதிமன்றம்.

சாட்சியங்கள் ஒப்படைக்கப்பட்ட பிறகு சில வருடங்களுக்கு பிறகு பல சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறி நாங்கள் வற்புறுத்தப்பட்டோம் என மிரட்டலுக்கு ஆளானதை எல்லோராலும் உணர முடிந்தது.

நீதிமன்றம் சொஹ்ராபுதீன் போலி என்கவுண்டரில் கொல்லப்பட்டதையோ, அவரது மனைவி கௌசர் பிபி கொடூரமாக காவல்துறையினரால் கொல்லப்பட்டதையும் நீதிமன்றம் மறுக்கவில்லை. ஆனால் இழப்பீடாக ஏற்கனவே குடும்பத்திற்கு 10 லட்சத்தையும் இழப்பீடு வழங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட நீதிமன்றத்தின் இச்செயல் அரசியல்வாதிகள் தங்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பணம் கொடுத்து அவர்களின் வாயை மூடுவார்கள். அதையே நீதிமன்றமும் செய்ய தொடங்கியிருக்கிறது.

**- அபூ சித்திக்**


நியூ
மலேஷியா
டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது
உரிமை: S.B.S. பஷீர்

பாஸ்போர்ட் ஆன்லைன்
விமான டிக்கட்
விசா சர்வீஸ்
ECNR & PCC
எம்பஸி அட்டஸ்ட்
GCC மெடிக்கல் சர்வீஸ்



தொலைப்பேசி:
04144 243267
04144 243440
செல்:
7708803789
7708503789

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை, கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmlaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com



அரபியில்
டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவீ

# எது முதலில்? இன்னொரு வகை ஏமாளிகள்!

தமிழில்
பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி

மார்க்கப் பற்று மிக்கவர்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் செல்வந்தர்கள் சிலர் பல தடவை ஹஜ் செய்கிறார்கள். ஹஜ்ஜுக்காக செலவளிப்பதற்குப் பேராவர்படுகின்றனர். தம் பக்கத்து வீட்டினர் (வறுமையில்) வாடுவது பற்றி கவலைப் படுவதில்லை. எனவே தான் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறினார்கள்..

“கடைசி காலத்தில் செல்வச் செழிப்புடன் இருப்பதாலும் பயணம் செய்வது இலகுவாகி விடுவதாலும் காரணமில்லாமல் ஹஜ் செய்வோர் அதிகமாகி விடுவார்கள். இவர்கள் (ஏற்கனவே செய்திருந்த பழைய) நன்மைகளை இழந்தவர்களாகவும் புதிய நன்மைகளைப் பெறாமலும் திரும்பி விடுவார்கள். இவர்கள் பரிதாபத்துக்குரிய தம் பக்கத்து வீட்டாரை அரவணைக்க மாட்டார்கள். (ஹஜ் பயணத்தில்) வழியெங்கும் பஞ்சப் பராரிகளைக் கடந்து வந்திருப்பார்கள்”

இப்னு மஸ்ஊத்(ரழி) அவர்கள் அந்தக் காலத்திலிருந்து கொண்டே இக்காலத்தில் நடப்பதைக் கண்ணால் கண்டதுபோல் அப்படியே கூறிவிட்டார்கள்.

அபூ நஸ்ர் ஆத்திமார்(ரஹ்) கூறுகின்றார்கள்

ஒருவர் பிஷ்ரு பின் ஹாரிஸ்(ரஹ்) அவர்களிடம் வந்து, “நான் ஹஜ் செல்ல முடிவு செய்துள்ளேன். எனக்கு ஏதேனும் நீங்கள் சொல்ல விரும்புகிறீர்களா” என்று கேட்டார்.

*பிஷ்ரு(ரஹ்)*: இதற்காக நீ எவ்வளவு பணம் தயாராக வைத்திருக்கிறாய்?

*அவர்*: இரண்டாயிரம் திர்ஹம் (வெள்ளிக்காசு)

*பிஷ்ரு(ரஹ்)* : ஹஜ் செய்து நீ எதை அடைய விரும்புகிறாய்? உலகப் பற்றின்மையா? கஅபாவின் மீதுள்ள அன்பையா? இறைவனின் திருப்தியையா?

*பிஷ்ரு(ரஹ்)*: நீ வீட்டில் இருந்துகொண்டே இரண்டாயிரம் திர்ஹம் செலவளித்து இறைவனின் திருப்தியை பெற வாய்ப்புக் கிடைத்தால் அதை விடுவாயா? செய்வாயா?

*அவர்:* கண்டிப்பாக செய்வேன்.

*பிஷ்ரு(ரஹ்):* உன்னிடமுள்ள இரண்டாயிரம் திர்ஹத்தை பத்துப் பேருக்குப் பகிர்ந்தளித்து விடு, கடனாளி தம் கடனை அடைப்பார். ஏழை தனது வறுமையை விரட்டுவார். குடும்பத்தலைவன் தம் குடும்பத்தினருக்கு செலவளிப்பார். அநாதையின் காப்பாளன் மகிழ்ச்சி அடைவான். இவ்வாறு பகிர்ந்தளித்து விடு. ஒருவரிடமே அந்த இரண்டாயிரத்தையும் தந்து விட உன்மனம் ஒப்பினால் தந்துவிடு.

ஏனெனில் ஓர் இயலாதவனுக்கு நீ உதவுவது ஒருவனின் சிரமத்தை நீக்குவது திக்கற்றவனுக்கு வழிகாட்டிக் காப்பாற்றுவது ஒரு முஸ்லிமின் இதயத்தில் மகிழ்ச்சியைத் ஏற்படுத்துவது இவை யெல்லாம் கடமையான ஹஜ்ஜை முடித்த பின்னர் நூறு ஹஜ் செய்வதை விட ஏற்றமானது.

நான் சொன்னபடி செய். இல்லாவிட்டால் நீ என்ன நினைக்கிறாயோ அதைச் சொல்.

*அவர்*: நான் ஹஜ் பயணம் மேற்கொள்ள வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறேன்

இதைக் கேட்ட பிறகு பிஷ்ரு(ரஹ்) அவர்கள் அவரைப் பார்த்து புன் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு சொன்னார்கள்,

"ஐயத்திற்கிடமான வழியிலும் வியாபாரத்தின் அழுக்கு இலகும் செல்வம் சேர்த்தால் அதன் மூலம் மனம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும். அது உனக்கு நற்செயல்போல் தோற்றமளிக்கும். ஆனால் அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களின் செயல்கள் வழிபாடுகளைத் தவிர வேறெதையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தன் மீதே சத்தியம் செய்துள்ளான்"

(நூல்: இஹ்யாவு உலூமித்தீன், பாகம்-8, பக்கம் 409)

(கர்ளாவி அவர்கள் "இமாம் கஸ்ஸாலி : பாராட்டுவோருக்கும் விமர்சிப்போருக்கும் இடையே" என்றொரு நூல் எழுதியுள்ளார்கள்.

அந்த நூலிலும் மேற்கண்ட கருத்துக்களை எடுத்தாண்டு இருக்கிறார்கள்.

**ஃபர்ளு, ஃபழ்லு எது ஏற்றம்**?

இமாம் கஸ்ஸாலி(ரஹ்) காலத்தில் வாழ்ந்தவர் பேரறிஞர் அர்ரா நவிப் அல் அனஸ்பஹானி (ரஹ்) மரணம் : ஹிஜ்ரி, 502)

"எது முதலில்" என்ற துறை பற்றி இவர் கூறியுள்ள சில கருத்துக்களை முன்னர் நாம் கூறியுள்ளோம். அவரின் பொன்மொழி ஒன்று இதோ...

"ஃபழ்லு (உபரி வணக்கம்)வை விட ஃபர்ளு (கடமையான வணக்கம்)க்கு முன்னுரிமை தந்தவர் தண்டனையிலிருந்து தப்ப வைக்கப்படுவார். ஃபர்ளு'வை விட பழ்லுக்கு முதலிடம் தந்தவர் ஏமாந்தவராவார்.''

அவருக்குப் பின் "எது முதலில்" எனும் இத்துறையில் அக்கறைக் காட்டிய அறிஞர்களுள் ஒருவர் இப்னுல் ஜவ்சீ(ரஹ்) (மரணம், ஹிஜ்ரி : 597)

இவர் முஸ்லிம் சமுதாயத்தையும் அதிலுள்ள குழுக்களையும் எந்தெந்த குழு எந்தப் பணிக்கு முன்னுரிமை தருகிறது என்பதையும் ஷைத்தான் அவர்களை எப்படியெல்லாம் குழப்பிக் கொண்டிருக்கிறான் என்பதையும் திறமையாக ஆய்வு செய்தவர்.

தல்பீஸ் இப்லீஸ், சைதுல் ஹாத்திர், ஆதம்முல் ஹவா உள்ளிட்ட அவரின் நூல்களில் இதை நாம் காணலாம்...

பலஹீனமான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் பொது மக்களிடையே பரவி இருப்பதால் தான் இவர்கள் எந்தப் பணிக்கு முன்னுரிமை தருவது என்று முடிவெடுக்க முடியாமல் குழம்பி வருவதாக ஒரு முக்கிய விஷயத்தை எச்சரிக்கையாக வைக்கிறார் இப்னு ஜவ்சீ (ரஹ்)

இது குறித்து அவர் "அல்மவ்ளூஆத்" "அல்இலலுல் வாஹியா ஃபில் அஹாதீசில் வாஹியா" என்று இரு நூல்களை எழுதியுள்ளார். இவருக்குப்பின் இத்துறையில் ஈடுபாடு கொண்டவராக நாம் காண்பது அறிஞர்களின் அரசர் எனப்படும் இஸ்சுத்தீன் பின் அப்துஸ் ஸலாம் (ரஹ்) (மரணம் : ஹிஜ்ரி 660)

இவர் எது முதலில்? எதை விட எது ஏற்றமானது? ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் கூரிய பார்வையும் உள்ளவர். இவர் தனது "கவாலிதுல் அஹ்காம் ஃபீமஸாலிஹில் அனாம்" எனும் முக்கியமான நூலில் தம்

கருத்துக்களை விரிவாகக் கூறியுள்ளார்.

இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் அவற்றை நாம் எடுத்துப் பதிவு செய்துள்ளோம்.

அறிஞர் இப்னு தைமிய்யா சொல்லுவதென்ன? எது முதலில்? எதை விட எது ஏற்றமானது ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் தேர்ந்த ஞானமும் கொண்ட அறிஞர்களுள் ஒருவர் இப்னு தைமிய்யா (இறப்பு : ஹிஜ்ரி 728) அதாவது பாட்டையில் நடைபோட்டவர். அன்னாரின் மாணவர், திறமைமிக்க அறிஞர் இப்னுல் கய்யிம் (இறப்பு : ஹிஜ்ரி 751)

"அவ்லவிய்யாத்துல் ஹரக்கத்தில் இஸ்லாமிய்யா" என்ற நூலின் இறுதியில் இப்னு தைமிய்யாவின் நூலிலிருந்து இரு அத்தியாயங்களை எடுத்து இணைத்துள்ளேன். இது அவரின் ஞானத்தைப் பறைசாற்றப் போதுமானது.

இப்னு தைமிய்யாவின் நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் ஃபத்வாக்களும் அவரின் நிலைப்பாடுகளும் அவரின் அறிவு ஞானத்தை நிரூபித்துக் கொண்டே இருக்கும். எனினும் நான் இங்கே அவரின் இரு கருத்துக்களை மட்டும் எடுத்து வைக்கிறேன் பாருங்கள்... இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நற்செயல்களின் தரங்கள் வேறுபடும்

இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நற்செயல்களின் தரங்கள் வேறுபடும்

இதுகுறித்து எனது நூலொன்றிலும் நான் என் கருத்தைப் பதிவு செய்துள்ளேன்.

இதோ இப்னு தைமிய்யா கூறுகிறார்

ஒரு நற்செயலைச் செய்வதனாலோ செய்யாமலிருப்பதனாலோ ஏற்படும் விளைவுகளைப் பொறுத்து அச்செயலைச் செய்வது ஒரு சூழலில் நன்மையாகும். மற்றொரு சூழலில் அதைச் செய்யாமலிருப்பது நன்மையாகும்.

உதாரணமாகப் பாருங்கள் நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பின்னர் கஅபா என்னும் இறை இல்லத்தை இப்ராஹீம் நபி(அலை)வின் அடித்தளத்தில் (செவ்வக வடிவத்தில்) கட்டிட விரும்பினார்கள். ஆனால் செய்யவில்லை.

ஆயிஷா(ரழி) விடம் "ஆயிஷாவே! உன் சமுதாயத்தினர் அஞ்ஞானத்திலிருந்து மீண்டு புதிதாக இஸ்லாத்துக்கு வந்தவர்களாக இல்லாவிடில் நான் கஅபாவை இடித்துவிட்டு அதன் வாசலை தலையை ஒட்டி வைத்து அதற்கு இருவாசல்கள் வைத்திருப்பேன். ஒரு வாசல் வழியாக மக்கள் நுழைந்து மறுவாசல் வழியாக வெளியே வர வசதியாக அமைத்திருப்பேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (நூல் : புகாரி, முஸ்லிம்)

மக்கள் நலனுக்கு ஏற்றபடி (இரு வாசல் வைத்து) கட்ட விரும்பினாலும் அதைச் செய்ய வில்லை. ஏனெனில் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய குறைஷிகள் வெறுப்படைந்து விடக் கூடும் என்று அஞ்சினார்கள்.

ஆக, தாம் விரும்பும் மக்கள் நலனை விட ஏற்படப் போகும் குழப்பங்களைக் கருத்தில் கொண்டு அப்படிக் கட்டாமல் விட்டு விட்டார்கள். ஒரு முஸ்லிம் இப்படித்தான் செயல்பட வேண்டும். ஒரு பணியைச் செய்வதால் சீர்த்திருத்தத்தை விட சீர்கேடு அதிகமாகி விடும் என்றால் அச்செயலை விட்டு விட வேண்டும்.

எனினும் சீர்த்திருத்தம், சீர்கேடு என்பவை ஷரீஅத்தின் சான்றுகளின்படியே அமைய வேண்டும். எனவே இமாம் அஹ்மது (ரஹ்) முதலிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

"தொழுகை நடத்தும் இமாம், தாம் எதை சிறப்பானது என்று நினைக்கிறாரோ அதை செய்வதால் மக்களிடையே குழப்பம் ஏற்படும் என்றிருந்தால் அதைச் செய்யக் கூடாது"

"உதாரணமாக மூன்று ரக்ஆத்துகள் கொண்ட வித்ரு தொழுகையை (ரமழானில்) கூட்டாகத் தொழும் சூழலில் முதல் இரண்டு ரக்அத்களை தொழுது முடித்து பிறகு தனியாக ஒரு ரக்அத் தொழுவதே சரியானது என்று இமாம் நினைக்கிறார்"

"மக்களோ மூன்று ரக்அத்களையும் (ஒரே சலாமில்) மொத்தமாக தொழும் வழக்கமுள்ளவர்கள் என்றால் இந்த இமாம் தாம் சரியெனக் கருதும் வழிமுறைப்படி தொழுகை நடத்தினால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும் என்ற சூழலில் அதை விட்டு விட்டு மக்களின் வழக்கப்படி தொழுகை நடத்த வேண்டும்."

"இதுபோலவே பிஸ்மில்லாஹ்வை சப்தமிட்டு ஓதும் வழக்கமுள்ளவர்கள் உண்டு. அதை மெதுவாக ஓதும் வழக்கமுள்ளவர்களும் உண்டு"

“இப்பொழுது தொழுகை நடத்துபவர் வீணான குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வழக்கப்படி தொழுகை நடத்த வேண்டும். அது ஏற்றமானதல்ல என்று அவர் கருதினாலும் சரி”

அறியாத மக்களுக்கு ஒரு சுன்னாவைக்(நபிவழி) கற்பிப்பதற்காகவும் இப்படிச் செய்யலாம். அஊதுபில்லாஹ், பிஸ்மில்லாஹ், ஸனா ஆகியவற்றை கூட்டுத் தொழுகையில் சப்தமாக ஓதிக் காட்டலாம். இவ்வாறு தொழுகைகளில் ஓத வேண்டும் என்று மக்கள் புரிந்து கொள்வதற்காக

உமர்(ரழி) அவர்கள் தக்பீர் கட்டியபின் “ஸனா”வை சப்தமிட்டு ஓதியிருக்கிறார்கள்.

அஸ்வத்பின் யசீத் கூறுகிறார் : எழுபதுக்கும் அதிகமான தொழுகைகளை நான் உமர்(ரழி) அவர்களின் பின்னால் நின்று தொழுதிருக்கிறேன். அவர்கள் தக்பீர் கட்டியபின் “ஸனா”வை சப்தமாக ஓதினார்கள் (நூல் : முஸ்லிம்)

சுப்ஹகல்லாஹூம்ம.. என்று தொடங்கும் ஸனா மக்களிடம் பரவலாகி அதை அனேக மக்கள் ஓதி வருவதற்குற்கு காரணம் அதை உமர்(ரழி) பிறர் கேட்கும்படி சப்தமாக ஓதியதுதான். இதுபோல இப்னு உமர், இப்னு அப்பாஸ்(ரழி) இருவரும் தொழுகையில் அவூதுபில்லாஹ்வை சப்தமிட்டு ஓதியுள்ளார்கள்.

பல நபித்தோழர்கள் “பிஸ்மில்லாஹ்”வை சப்தமிட்டு ஓதியிருக்கிறார்கள். இவ்வாறு சப்தமிட்டு ஓதுவது சுன்னத் அல்ல என்று கருதும் சட்ட வல்லுநர்களும் கூட அறியாத மக்களுக்குக் கற்பிப்பதற்காக சப்தமாக ஓதலாம் என்கின்றனர்.

இப்னு அப்பாஸ் (ரழி)யவர்கள் இறந்தவருக்கான ஜனாஸா தொழுகையில் ஃபாத்திஹா அத்தியாயத்தை சப்தமிட்டு ஓதினார்கள் என்று நம்பகமான ஓர் அறிவிப்பு உள்ளது. இது ஒரு சுன்னா என்று கற்பிப்பதற்காகவே அப்படி ஓதினார்கள் என்று இதற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இறந்தவருக்கான ஜனாஸா தொழுகையில் ஃபாத்திஹா அத்தியாயம் ஓத வேண்டியதில்லை என்று ஸலஃப் எனப்படும் முற்கால அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர்.

இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீபா ஆகியோரின் கருத்தும் இதுவே. ஓதுவது சுன்னா என்பது இமாம் ஷாபி இமாம் அஹ்மது ஆகியோரின் கருத்து. இப்னு அப்பாஸ்(ரழி)வின் மேற்கண்ட ஹதீஸையும் வேறு சில ஹதீஸ்களையும் தமக்குச் சான்றாக இவ்விருவரும் முன் வைக்கின்றனர்.

சிலர் அது கட்டாயம் என்கின்றனர். ஏனெனில் மற்ற தொழுகை போல இதுவும் ஒரு தொழுகை தான் என்கின்றனர். சிலர், இது (ஃபாத்திஹா அத்தியாயத்தை ஓதுவது) கட்டாயம் அல்ல, விரும்பத்தக்க ஒரு சுன்னா என்கின்றனர். மேற்கண்ட மூன்று கருத்துக்களில் இதுவே சரியானது.

இதுவே சரியான கருத்து என்று நான் கூறுவதற்குக் காரணம் “ஸலஃப்” எனப்படும் மூத்த முன்னோடிகள் இருவிதமாகவும் செயல்பட்டிருக்கின்றனர். இரு நடைமுறைகளும் அவர்கள் மத்தியில் தாராளமாக புழக்கத்தில் இருந்துள்ளது.

இறந்தவருக்கான ஜனாஸா தொழுகையில் அவர்கள் ஃபாத்திஹா அத்தியாயம் ஓதியுமிருக்கிறார்கள். ஓதாமலும் தொழுதிருக்கிறார்கள்.

அதில் பிஸ்மில்லாஹ்வை சப்தமாகவும் சொல்லியிருக்கிறார்கள், மெதுவாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஸனா ஓதியுமிருக்கிறார்கள், ஓதாமலுமிருந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தக்பீர் சொல்லும் போதும் கையை உயர்த்தியுமிருந்திருக்கிறார்கள். உயர்த்தாமலும் இருந்திருக்கிறார்கள்.

தொழுகை முடியும் போது ஒரு பக்கம் மட்டும் திரும்பி ஸலாம் சொன்னவர்களும் உண்டு, இரண்டு பக்கமும் திரும்பி இரு ஸலாம் சொன்னவர்களும் உண்டு. இமாமைப் பின்பற்றித் தொழுவோர் ஓதுவதும் உண்டு, ஓதாமலிருப்பதும் உண்டு. நான்கு தக்பீர், ஐந்து தக்பீர், ஏழு தக்பீர் என்று பலரும் பலவிதமாக (மேற்கண்டபடி ஜனாஸா தொழுகை) தொழுதிருக்கின்றார்கள். மேற்கண்ட எல்லா வழிமுறைகள் படியும் நபித்தோழர்கள் தொழுதிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல பாங்கு இகாமத் சொல்லுவதிலும் இரு நடைமுறை புழக்கத்தில் இருந்துள்ளது. பாங்கை சப்தமாகச் சொல்லி விட்டு ஒவ்வொரு வார்த்தையும் திரும்ப ஒருமுறை மெதுவாகச் சொல்வதும் உண்டு. சிலர் அப்படிச் சொல்வதில்லை.

“இகாமத்”தின் வசாகங்களை இருதடவை கூறுபவர்களும் உண்டு. ஒரு தடவை மட்டும் கூறுபவர்களும் உண்டு. இரண்டுமே நபி வழி (சுன்னா)தான். இவற்றுள் ஒன்று சிறந்தது. மற்றொன்று மிகச்சிறந்தது.

மிகச் சிறந்ததைச் செய்யாமல் சிறந்ததைச் செய்பவர் அனுமதிக்கப்பட்டதையே செய்திருக்கிறார். மிகச் சிறந்ததைச் செய்வதால் குழப்பம் ஏற்படும் எனும் போது சிறந்ததைச் செய்வதே மிகச் சிறந்ததாகி விடும். ஏனெனில் இதில் ஒரு சமூக நலன் இருக்கிறதே!

பொதுவாக எல்லா வழிபாடுகளுமே இப்படித்தான். எல்லாச் சூழல்களிலும் மிகச் சிறப்பானதாகவே ஒரு வழிபாடு(அமல்) இருந்து விடுவதில்லை. குர்ஆன் ஓதுவதை விட தொழுவது சிறந்தது. திக்ரு(இறைத்துதி)யை விட குர்ஆன் ஓதுவது சிறந்தது. பிரார்த்தனையை விட இறைத்துதி சிறந்தது.

அதே நேரத்தில் ஃபஜ்ர்க்குப் பின் (சூரிய உதயநேரம்) அஸர்க்குப் பின் (சூரியன் மறையும் வரை) ஆகிய நேரங்களில் தொழக்கூடாது. இந்த நேரங்களில் கிராஅத் எனும் குர்ஆன் ஓதுவதும், திக்ரு எனும் இறைத்துதியும் துஆ எனும் பிரார்த்தனையும் தொழுவதை விடச் சிறப்பானதாகிறது.

தொழுகையின் இறுதி இருப்பில் அத்தஹிய்யாத் ஓதிய பிறகு (ஸலாம் கொடுப்பதற்கு முன்னர்) திக்ரு ஓதுவதை விட துஆ ஓதுவதே சிறப்பானது.

ருகூவு எனும் குனிதல் ஸஜ்தா எனும் சிரம்பணிதல் ஆகிய இரு நிலையிலும் குர்ஆன் ஓதுவது கூடாது. இங்கு குர்ஆன் ஓதவதை விட திக்ருதான் சிறப்பானது.

இவ்வாறு ஒவ்வொரு(வழிபாடு) அமலுக்கும் உரியதோர் இடமுண்டு. அதன் இடத்தில் சிறப்பானது மற்றதை விட, இவ்வாறு அமல் எனும் வழிபாடுகள் அதனதனுக்குரிய இடங்களைப் பொருத்து சிறந்தவை, மிகச் சிறந்தவை, நல்லதல்ல என்று ஆவதைப்போல ஒரு தனிமனிதனுடைய சூழ்நிலையைப் பொருத்தும் இவ்வாறு ஆவதுண்டு.

இதற்குக் காரணம் அவர் அந்த வழிபாட்டைச் செய்யாதபடி பலஹீனமானவராக இருக்கலாம். அல்லது அவரின் விருப்பமும் ஆசையும் ஈடுபாடும் காரணமாகவே இருக்கலாம்.

அதாவது மிகச் சிறந்த வழிபாடு ஒன்றைச் செய்திட அவரின் உடல் ஒத்துழைக்கவில்லை. அல்லது அவரின் மனம் மிகச் சிறந்த வழிபாட்டை விட தாழ்ந்த வேறொரு சிறந்த வழிபாட்டை விரும்புகிறது, லயிக்கிறது எனும் பட்சத்தில் இவரைப் பொறுத்த வரை இதுவே மிகச் சிறந்த வழிபாடு என்றாகிவிடும்.

ஏனென்றால் மனம் எதை விரும்புமோ அதை அவன் அதிகமாகவும் ஈடுபாட்டுடனும் செய்வான் அல்லவா?

உதாரணமாக ஒரு நோயாளியின் நோய்க்கு இருவகை மருந்து உள்ளது. ஒன்று அவருக்குப் பிடித்திருக்கிறது. மற்றொரு மருந்து அவருக்குப் பிடிக்கவில்லை என்றால் பிடிக்காத மருந்து மிகச் சிறந்ததாக இருந்தாலும் கூட பிடித்த மருந்தைச் சாப்பிட்டு நோயைக் குணப்படுத்திக் கொள்வார் அல்லவா?

இந்தக் கோணத்தில் பார்த்தால் சிலருக்கு சில நேரங்களில் குர்ஆன் ஓதுவதை விட திக்ரு மிகச் சிறப்பானது. தொழுவதை விட குர்ஆன் ஓதுவது சிறப்பானது என்றாகிவிடும்.

அதை விட இது உள்ளபடியே சிறந்தது என்பதல்ல. அவருக்கு அவர் சூழலுக்கு அது சிறந்தது என்பதால்தான். இப்படியான உதார ணங்கள் ஏராளம் உண்டு.

இப்படி ஒரு வழிபாட்டை விட மற்றொரு வழிபாடு சிறப்பானது என்ற பாடத்தை இதற்கு மேல் விரிவாக நீட்டிக் கொண்டு போக முடியாது. நுண்மான் நுழை புலத்துடன் யாரும் இதைப் புரிந்திடவும் இயலாது.

பெரும்பாலான வழிபாடுகள் சூழ்நிலைக்கு ஏற்ப சிறந்தது, மிகச்சிறந்தது என்று ஏதோ ஒரு வடிவம் எடுக்கின்றன. இதற்குமேல் இதைப் பேசினால் குழப்பம்தான் ஏற்படும்.

ஏனென்றால் சிலர் சில குறிப்பிட்ட வழிபாடுகளை ஈடுபாட்டுடனும் விருப்பத்துடனும் செய்கின்றனர். இடைவிடாமல் தொடர்ச்சியாகச் செய்கின்றனர். பின்னர் கட்டாயக் கடமைகளை விட இவற்றுக்கு அதீத முக்கியத்துவம் தரும் அளவுக்குப் போய் விடுகின்றனர்.

இறுதியாக இது ஒரு வழிபாடு என்ற நிலையைத் தாண்டி “இது எம்வழி நடப்போரின் அடையாளம். இதைச் செய்யாதவன் எம்வழி நடப்பவனல்லன்

என்று கருதிடும் அளவுக்கு பிடிவாதம், இன அடையாளம், குழு அடையாளம், மனோ விருப்பத்தின்படி வழிபடுதல், அஞ்ஞான வழிமுறையாகவும் கூட ஆகிவிடுகிறது. அவர்கள் விடாப்படியாகச் செய்துவரும் ஒரு (அமல் எனும்) வழிப்பாட்டை வேறு சிலர் வேண்டுமென்றே புறக்கணிக்கின்றனர். அதைச் செய்யாமலிருப்பது எம் வழி நடப்போரின் அடையாளம்.

அதைச் செய்பவன் எம் வழி நடப்பவனல்லன் என்று கருதி ஹராமைத் தவிர்ப்பதைவிடக் கடுமையாக அந்த (அமலை) வழிபாட்டைத் தவிர்க்கின்றனர்.

இதுவும் பிடிவாதம், இன அடையாளம், குழு அடையாளம் மனோ விருப்பத்தின் படி வழிபடுதல், அஞ்ஞான வழிமுறையாகவும் கூட ஆகிவிடுகிறது.

அதுவும் தவறு, இதுவும் தவறு,ஆக எல்லா வழிபாடுகளுக்கும் ஒரு தரம் இருக்கிறது அந்த தரத்திலிருந்து அதை கீழே இறக்கக்கூடாது. அல்லாஹ்வும் அவனின் திருத்தூதரும் எதை தாராளமாக்கினார்களோ அதை தாராளமாகவே வைத்திருக்க வேண்டும். எதை விரும்பச் சொன்னர்களோ அதை விரும்ப வேண்டும். ஒவ்வொரு வழிபாட்டுக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. ஒரு சமூக நலன் இருக்கிறது. அது அல்லாஹ்வும் ரசூலும் விரும்பியது என்பதையும் கவனிக்கத் தவறக் கூடாது.

பேச்சுக்களில் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சு வழிமுறைகளில் சிறந்தது பெருமானார்(ஸல்) அவர்கள் வழிமுறை. அவர்களை அருட் கொடையாக அல்லாஹ் அனுப்பி வைத்துள்ளான். அவர்களின் கடைப்பிடித்துக் காட்டிய ஒவ்வொரு காரியத்திலும் ஈருலக வெற்றி இருக்கிறது என்பதையும் விளங்கிட வேண்டும்.

(தொழுகை, நோன்பு, தர்மம், ஹஜ், குர்ஆன் ஓதுதல், திக்ரு, துஆ ஆகியவற்றில் ஒன்றை உபரியாகவும் கூடுதலாகவும் ஒருவர் தொடர்ச்சியாகச் செய்து வருகிறார். அதில் மன ஓர்மையுடனும் லயிப்புடனும் ஈடுபடுகிறார். மற்ற வழிபாடுகளை விட இதுவே மேன்மை மிக்கது என்று அவர் கருதுகிறார் என்றால் அப்படி அவர் அதை விரும்புவதற்குரிய காரணம் தெளிவாக இருக்க வேண்டும்)

(அதாவது அல்லாஹ்வும், ரசூலுமே வழிகாட்டிகள். அவ்விருவரும் எதைச் சொன்னாலும் அதில் ஓர் அர்த்தம் இருக்கும் என்று நம்ப வேண்டும்) பிறகு குறிப்பிட்ட ஒரு வழிப் பாட்டில் மட்டும் தம் மனம் ஏன் லயிக்கிறது என்பதையும் அவர் விரிவாகப் புரிந்திடவேண்டும்.

இப்படி இல்லாமல் போனால் ஆளாளுக்கு மனம் போன போக்கிலோ அறியாமையாலோ அநியாயமாகவோ எனக்கு அது பிடிக்கும். எனக்கு இது பிடிக்கும் என்றும் அதை விட இந்த வழிபாடு ஏற்றமானது. இதைவிட அது ஏற்றமானது என்று செயல்படத் தொடங்கி விடுவர்.

சமுதாயத்தின் நிலைமை இப்படி ஆகிவிட்டால் அல்லாஹ்வும் ரசூலுமே வழிகாட்டிகள் அவர்கள் சொன்னால் அதில் ஓர் அர்த்தம் என்பதெல்லாம் வெறும் நம்பிக்கையாக மட்டுமே ஆகிவிடும். செயல்கள் அவரவர் விருப்பப்படி ஆகிவிடும். இது சரியல்ல.

அல்லாஹ் நமக்கு நேர்வழி காட்டுவானாக...! நபிமார்கள் வாய்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லோர்கள் ஆகிய அல்லாஹ்வின் அருள் பெற்றவர்களின் பாதையில் நம்மை செலுத்துவானால் இவர்களே நல்ல தோழர்கள். (நூல்: இப்னு தைமிய்யாவின் ஃபத்வாக்கள், பாகம்- 24, பக்கங்கள் 195 - 199)

இந்தப் புரிதலின் ஒளியில் தான் இமாம் ஷஹீத் ஹசன் அல்பன்னா(ரஹ்) அவர்களின் ஃபத்வாக்களும் இருந்துள்ளன.

மக்கா, மதீனா ஆகிய இரு புனித நகரங்களில் உள்ளது போலவும் நான்கு மத்ஹபுகளின் இமாம்கள் கூறியுள்ளது போலவும் இருபது ரக்அத்கள் தராவீஹ் தொழ வேண்டுமா?

ஸலஃபீகள் பிடிவாதமாகக் கூறுவது போல எட்டு ரக்அத்கள் தொழ வேண்டுமா?

என்ற பிரச்சனை ஒரு ஊர் மக்களிடையே ஏற்பட்டு அதற்காக அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்த போது இமாம் ஹசன் அல்பன்னா(ரஹ்) அவர்கள் இப்படிச் சொன்னார்கள்.

“சமுதாய ஒற்றுமை ஒரு கடமை. தராவீஹ் தொழுகை சுன்னத். ஒரு சுன்னத்துக்காக ஃபர்ளை விட்டு விடக்கூடாது யாரும் முட்டி மோதிக்கொள்ளாமல் பகைத்துக் கொள்ளாமல் அவரவரும் தமது இல்லங்களிலேயே தராவீஹ் தொழுது கொள்வதே சிறந்தது ஏற்றமானது.”

தலையங்கம்

# காத்திருங்கள்! நீங்கள் சுவாசிக்கும் காற்றிற்கும் வருகின்றது வரி!

1945 ஆண்டில் ஆங்கிலேயர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். அது இந்தியா நமக்கு இனி இலாபம் தந்திடாது என்பதே அந்த முடிவு.

1949 ஜூன் திங்களில் இந்தியாவுக்கு விடுதலையை வழங்கி விடுவது என்று தேதியும் குறித்துவிட்டார்கள்.

ஆனால் சில ஆங்கிலேயே தலைவர்கள் இந்தியாவை நாம் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பது, இலாபமா, நஷ்டமா எனக் கணக்குப் பார்க்கவில்லை. இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டை நிர்வகிக்கும் தகுதியில் எத்தனை எத்தனை இந்தியர்கள் இருக்கின்றார்கள் என்றே கணக்குப் பார்த்தார்கள்.

இவர்கள் பல்வேறு, இனம், மொழி, மதம் இவற்றால் வனையப் பெற்ற ஒரு சமுதாயத்தை நிரூபிக்க இயலுமா? என்ற கணக்கைப் பார்த்தார்கள்.

அந்தக் கணக்கில் அவர்களின் முடிவு நமது அரசியல்வாதிகள், ஆட்சிக் கைவரப்பெற்றால் அப்பாவி மக்களைப் பிழிந்து எடுத்து விடுவார்கள் என்பதே! இந்தப் பின்னணியில் இந்தியாவிற்கு விடுதலை வழங்குவதை பிற்படுத்தலாம் என முடிவு செய்தார்கள்.

இந்த சிந்தனையில் முன்னணியில் நின்றவர் ஆங்கில நாட்டு மக்கள் அனைவராலும் போற்றப்பட்ட, நேசிக்கப்பட்ட தலைவர் வின்ஸ்டன் சர்சில்.

இவர் இந்தியாவுக்கு விடுதலை வழங்கிட வேண்டும். அதையும் 1949 வரை தள்ளிப் போட வேண்டாம். என்றெல்லாம் சிந்தித்து ஆங்கில நாட்டு பிரதமர் கிளைமண்ட் ஹெட்லி – இடம் இப்படிக் கூறினார்;

**“You are entrusting the reigns of government to Rowdies, Raskals and free booters who will not stop at anything; The very air people breath will be Taxed on day. It will take millions and millions of year for the Indians to enter into the periphery politics”**

“பிரதமர் கிளைமண்ட் ஹெட்லி அவர்களே, நீங்கள் இந்திய அரசாங்கத்தை ரவுடிகள், ஒழுக்க மற்றவர்கள், மக்களை கொள்ளையடிப்பவர்கள், இவர்களின் கைகளில் ஒப்படைக்கின்றீர்கள். இவர்கள் இப்படி கொள்ளை அடிப்பதில் எந்த வரைமுறைக்குள்ளும் நிற்கமாட்டார்கள். ஒரு நாள் மக்கள் சுவாசிக்கும் காற்றுக்கும் வரி போட்டு விடுவார்கள். இந்தியர்கள் தரமான அரசியல் – ஆட்சி இவற்றின் எல்லைக்குள் நுழைவதற்கே பல ஆயிரமாண்டுகளாகும்.

இவற்றையெல்லாம் இன்றைக்கு மத்தியிலே ஆட்சிச் செய்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துப் பேசியது போல இருக்கிறது. இவர்களின் ரவுடித் தனங்களுக்கு எல்லையே இல்லை. நேர்மையாக இருந்தார்கள் என்பதற்காக கர்கரே என்ற காவல்துறை அதிகாரியைத் திட்டம் போட்டு நம் நாட்டிலேயே கொன்றார்கள்.

அஹ்லாக் என்ற அப்பாவி முஸ்லிம் ஒருவரை பட்டப்பகலில் நடுவீதியிலேயே போட்டு அடித்துக் கொன்ற விவகாரத்தில் நடுவுநிலையோடு நடந்து கொண்டதற்காக காவல்துறை அதிகாரியை அதேபோல் சுட்டுக் கொன்றார்கள்.

கொலை பற்றிய அறிக்கையை உத்திரப்பிரதேச முதல்வர் மிகவும் காலதாமதமாகவே வெளியிட்டார். அதில் கொலை செய்யப்பட்ட காவல்துறை அதிகாரியைப் பற்றி ஒரு வரி கூட இல்லை. ஆக இந்தக் கொலையும் அதிகார வர்க்கத்தின் ஒப்புதலோடும் திட்டத்தோடும் தான் நடந்துள்ளது.

நாட்டை ஆளும் பாசிச பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அமித்ஷா பல கொலைகளைச் செய்தார். ஒவ்வொரு கொலைகளிலிருந்தும் வரிசை கிரமமாக விடுவிக்கப்பட்டார். அவர் மீதுள்ள குற்றத்தைப் புரிந்து கொண்ட “லோயோ” என்பவர் மட்டும் அவரை கொலை வழக்கிலிருந்து விடுவிக்க மாட்டேன் என்றார்.

நூறு கோடி ரூபாயை தருகின்றேன் என்றார்கள். வாங்க மறுத்து விட்டார், கொலை செய்து விட்டார்கள். இப்படி சக நீதிபதி ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கை முறையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என நமது உச்ச (அ)நீதிமன்றத்தை அனுகிய போது அது அந்த வழக்கையே நீதிமன்ற அவமதிப்பு என்றது உச்ச நீதிமன்றம் – என்னே நீதி பரிபாலனம்.

ஆக அன்று வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் சொன்னது அனைத்தும் இந்த பாசிச பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த ஆட்சியாளர்களுக்கு அப்படியே பொருந்தும்.

இவர்களின் போக்கை வைத்துப் பார்த்திடும் போது சர்ச்சில் இன்னொரு சொல்லையும் சேர்த்திருக்க வேண்டும். அது ரவுடிகள், ராஸ்கல்ஸ், வன்புணர்ச்சியாளர்கள் **Rapist** எனும் சேர்த்திருக்க வேண்டும்.

இப்படி எடுத்துக் கொண்ட அனைத்துத் துறைகளிலும் கொலையும் கொலை வெறி ஆட்டங்களையும் வழிமுறையாகக் கொண்டவர் தாம் நமது நிலத்தடியிலிருந்து நமது சொந்த செலவில் நமது தாகம் தீர்ந்திட தண்ணீருக்கும் வரி விடிக்க இருக்கின்றார்கள்.

அண்மையில் நமது மத்திய அரசாங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இப்படிக் கூறியுள்ளது. நிலத்தடி நீரை அகழ்ந்தெடுக்கும் அலைகள், தண்ணீரை விற்பனை செய்யும் நிறுவனங்கள், இவையும் வீட்டுச் செலவுக்காக ஒரு அங்கும் விட்டமுள்ள குழாயை (பைப்பை) பயன்படுத்தும் வீடுகளையெல்லாம் அதற்குரிய கட்டணைத்தைச் செலுத்தி மத்திய நிலத்தடி நீர் பாதுகாப்பு ஆனையத்திடமிருந்து **(Center Ground Water Authority)** ஒரு சான்றிதழை **(No Objection Certificate - NOC)** ஐ பெற வேண்டும். **(The Hindu Dt Dec 14, 2018)**

இப்போது இறைவனால் சேர்த்து வைத்துத் தரும் தண்ணீருக்கும் வரி. இந்த வரியின் பெயர் **“Water Conservation Fee” (WCF)** தண்ணீர் பாதுகாப்பு கட்டணம். இந்தச் சட்டம் 2019 – இல் ஜூன் மாதத்திலிருந்து செயலில் வரும். இப்படியே போனால் இனி நீங்கள் சுவாசிக்கும் காற்றுக்கும் வரி வந்து விடும். அந்த வரி உங்கள் ஜன்னல்கள் எவ்வளவு நீள அகலங்களோடு இருக்கின்றதோ அதைப் பொருத்து அமையும்.

இது போன்ற அநீதிகளையும், வரிச்சுமையையும் இவர்கள் மக்கள் மீது திணித்து விடுவார்கள் என்பதால் தான் அன்று சர்சில் இந்தியாவுக்கு இப்போது விடுதலை வழங்க வேண்டாம் என பேசினார்கள்.

சர்சில் போலவே காந்திஜியும் பயந்தார். சுதந்திர இந்தியாவில் நல்ல ஆட்சியாளர்கள் கிடைக்க மாட்டார்களா? என அச்சப்பட்டார். அதனால் இஸ்லாமிய உலகின் ஆட்சியை வழி நடத்திய கலீபா உமர்(ரலி) அவர்களின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றார். அந்த ஆட்சியில் தண்ணீரைத் தடுப்பது குற்றம். தண்ணீர் அனைவருக்கும் இலவசமாகக் கிடைத்திட ஏற்பாடு செய்திட வேண்டியது அரசின் கடமை.

இஸ்லாத்திற்கு முந்தைய நாள் அரேபிய பெரு நிலத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கும் கிணறுகளிலிருந்து தண்ணீர்

எடுப்பார்கள். அந்த கிணற்றின் சொந்தக்காரர்களுக்கு பணம் தந்திட வேண்டும், இந்த தொழிலை அரேபிய பெரு நிலத்தில் வாழ்ந்த யூதர்கள் செய்தார்கள்.

ஒரு காலக்கட்டத்தில் இந்தக் கிணறுகளை யூதர்கள் கேட்ட அதிகமான விலையைத் தந்து வாங்கி பொதுமக்கள் அனைவருக்கும் இலவசமாக்கித் தந்தார்கள்.

தண்ணீரை தடுக்காதீர்கள் என்பது இஸ்லாத்தின் அடிப்படை கட்டளைகளில் ஒன்று. நோக்கம் மனிதர்கள் மட்டுமின்றி கால் நடைகள், மரம் செடி கொடிகள், இவையெல்லாம் முளைக்கவும் தழைக்கவும் தண்ணீர் மிகவும் முக்கியமானது.

கால் நடைகள் மேயவும், தாகம் தீர்க்கவும் நீர்ச்சுனைகள், புல்வெளிகள், இவற்றை வாங்கி தானம் தந்த தனவந்தவர்களை இஸ்லாமிய வரலாற்றில் நாம் முதன் முதலாக சந்திக்கின்றோம்.

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்;

ஜாபிர் பின் அப்துல்லாஹ் (அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானக) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

அல்லாஹ்வின் தூதர்(அல்லாஹ் அருளும், ஆசியையும் அவர்கள் மீது பொழிவானாக) அவர்கள் உபரி நீரை விற்பதை தடை செய்தார்கள். (முஸ்லிம்:3798)

இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் சொன்னதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;

உபரி நீரை தடுக்காதீர்கள். அவை முஸ்லிம்கள் மரம், செடிகள் வளர்வதைத் தடுக்கும். (முஸ்லிம்: 3800)

இன்னொரு அறிவிப்பில்; (பலன் பல தரும்) மரம், செடிகொடிகள் விற்பனைச் செய்யலாம் என்ற நினைப்பில் உபரி நீரை விற்காதீர்கள். (முஸ்லிம்: 3802)

உபரி நீர் என்பது கிணற்றுக்கு சொந்தக்காரர் அல்லது தோட்டத்துக்கு சொந்தக்காரர் தேவைக்குப் போக எஞ்சிய நீர் எனப் பொருள் கொள்ளலாம்.

அல்லாஹ் கூறுகின்றான்;

“மேலும் எல்லா உயிர்பிராணிகளையும் அல்லாஹ் நீரிலிருந்து படைத்துள்ளான். அவற்றில் தன் வயிற்றின் மீது நடப்பவையும் உண்டு. அவற்றில் இரு கால்களால் நடப்பவையும் உண்டு. அவற்றில் நான்கு கால்களைக் கொண்டு நடப்பவையும் உண்டு. தான் நாடியதை அல்லாஹ் படைக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றல் உடையவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன்: 24:45)

தண்ணீரை விற்பனை செய்ய நமது மத்திய அரசின் புதிய உத்தி பாதுகாப்பு கட்டணம் என்பது. இந்த கட்டணத்தை ஆலை முதலாளிகள் நிச்சயமாக தங்களுடைய உற்பத்தி செலவில் சேர்ப்பார்கள். பொருள்களின் விலையை உயர்த்துவார்கள். வீட்டுச் சொந்தக்காரர்கள் வாடகைக்கு இருப்பவர்கள் மீது சுமத்துவார்கள். பன்மடங்காக!

அடுத்து காற்று வரிக்கு காத்திருங்கள்!

உபரி நீரை தடுக்க இஸ்லாத்தில் இடமில்லை. தண்ணீரை தடுத்தால் அது கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படும் “தீனி”களை வளர்க்க தடையாக அமையும். மனிதர்களுக்கு மருந்தாக பயன்படும் மூலிகைகள் வளர்வதையும் தடுக்கும். மரங்கள் வளர்வதையும் தடுக்கும். மூன்று சூழ்நிலைகளில் தண்ணீரைத் தடுப்பதை அறவே அனுமதிக்காது இஸ்லாம்;

1. தண்ணீரை பெறுவதற்கு வேறு வழியே இல்லாத போது.

2. கால்நடைகள் தண்ணீரை பயன்படுத்திட வேண்டிய சூழலில்.

3. தண்ணீர் அதன் உடமையாளருக்கு உபரியாக இருக்கும் போது.

-நபிமொழி விளக்கம் : புகாரி

மக்கள் இறைவன் தந்த இயற்கை வளங்களை இலவசமாகப் பயன்படுத்தி வளங்கொழிக்கும் உலகைப் படைத்து நிம்மதியாக வாழ்ந்திட இஸ்லாத்தின் இந்த வழிகாட்டுதல்கள் இங்கே நிலைநாட்டப்படும். அதற்காக அனுதினமும் உழைப்போம். இன்ஷா அல்லாஹ்.

# பாபரி மஸ்ஜித் வழக்கு தடுமாறும் உச்ச நீதிமன்றம்!

முன்னாள் தலைமை நீதிபதி கேஹர், முன்னாள் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா ஆகியோர் தங்களால் இயன்ற சேவைகளை இந்துத்துவாவுக்குச் செய்தார்கள்.

நீதிபதி தீபக் மிஸ்ரா இந்த சேவையில் அனைவரையும் விஞ்சி விட்டார் என்றே சொல்ல வேண்டும். அவர் தான் உலகில் எந்த நீதிமன்றத்திலும் இல்லாத ஒரு விசித்திரமான விதியை இந்திய உச்ச நீதிமன்றத்தில் வகுத்தார். அதில் தன் மீதுள்ள குற்றச்சட்டை - ஊழல் வழக்கை தானே விசாரிப்பேன் என அடம் பிடித்தார்.

இவர் நீதித்துறையில் நடத்திய பாசிச அராஜாகத்தால் நான்கு நீதிபதிகள் வெளியே வந்து இனி இந்தியாவில் நீதி பரிபாலனமும், ஜனநாயகமும் பிழைக்காது என ஊடகங்களை அழைத்துச் சொல்லிட வேண்டிய நிலை வந்தது.

இந்த தீபக் மிஸ்ரா, பாபரி மஸ்ஜித் வழக்கை தனது ஆட்சி காலத்திலேயே விசாரித்து இந்துத்துவாவிற்கு சாதகமாக தீர்ப்பை வழங்கிட முயற்சி செய்தார்.

ஆனால் அவரது முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. சற்றும் தயங்காமல் மூத்த வழக்கறிஞர் கபில் சிபால், இந்த பாபரி மஸ்ஜித் வழக்கு 2019 மே தேர்தலுக்குப் பின் தான் விசாரிக்கப்பட வேண்டும் என வாதிக்கின்ற அளவிற்கு நிலைமை மோசமானது. காரணம் நீதிபதி தீபக் மிஸ்ரா காட்டிய அவசரம் அப்படி இருந்தது.

பின்னர் நீதிபதி தீபக் மிஸ்ராவின் பதவி காலம் அக்டோபர் 2, 2018 ஆம் நாள் முடிவடைவதாக இருந்தது. தனது பதவி காலம் முடிந்த பின்பும் தனது இந்துத்துவ சேவை தொடர வேண்டும் என விரும்பினார் நீதிபதி தீபக் மிஸ்ரா.

செப்டம்பர் 28, 2018 அன்று திடுத்திப்பென்று மஸ்ஜித், முஸ்லிம்களின் வணக்கத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதி அல்ல. - Masjid is not an Integral part of Islam என்ற உச்ச நீதிமன்றத்தின் பழையப் பிரகடனத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் அதிகமான நீதிபதிகள் கொண்ட ஓர் அமர்வுக்கு அனுப்ப வேண்டுமா? வேண்டாமா? என்ற வழக்கை விசாரணைக்கு எடுத்தார். எடுத்து அந்த வழக்கை அதிகமான நீதிபதிகள் கொண்ட ஒரு நீதிமன்றத்திற்கு அனுப்பிட வேண்டாம் என முடிவு கட்டினார்.

சாதாரணமாக இப்படி ஒரு மனு சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து வந்தது என்றால் அதனை அந்த நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஆனால் நீதிபதி மிஸ்ரா உச்ச நீதிமன்றம் கடைபிடித்து வந்த அனைத்து நீதி நெறிகளையும் காற்றிலே பறக்கவிட்டு விட்டு அந்த மனுவை நிராகரித்தார். முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளில் மஸ்ஜித்கள் பிரிக்க முடியாத ஒரு பகுதியா? என்பதை பாபரி மஸ்ஜித் வழக்கில் அதிக நீதிபதிகள் கொண்ட ஓர் அமர்வுக்கு அனுப்ப மறுத்துவிட்டார்.

2018 செப்டம்பர் 28 ஆம் நாள் நீதிபதி மிஸ்ரா அமர்ந்திருந்த அமர்வில் மூன்று நீதிபதிகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதி அசோக் பூஷான், நீதிபதி எஸ். அப்துல் நசீர்.

இதில் நீதிபதி அப்துல் நசீர் மஸ்ஜித்கள் இஸ்லாத்தின் பிரிக்க இயலாத பகுதி எனத் தீர்ப்பு வழங்கியவர். ஆனால் அவருடைய தீர்ப்பு எடுபடவில்லை. காரணம் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் அவருடைய தீர்ப்பு சிறுபான்மை தீர்ப்பாகி விட்டது. ஏனைய இரண்டு நீதிபதிகளும் மஸ்ஜித் இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகளின் பிரிக்க முடியாத ஒரு பகுதி அல்ல என தீர்ப்பு வழங்கி இருந்தார்கள்.

**- எம்.ஜி.எம்**



# உங்கள் படுக்கையறையில் பத்து உளவாளிகள்!

உள்துறை அமைச்சகம் சமீபத்தில் ஓர் உத்தரவை வெளியிட்டுள்ளது. அதில் 10 அரசு நிறுவனங்களுக்கு நாட்டில் உள்ள யாருடைய கணினியையும் ஊடுறுவ, கண்காணிக்க, அதில் பதிந்துள்ள தகவல்களை பார்க்க, சேமிக்க, திருட என பல்வேறு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இதுவரை ஹாக்கர்கள் எனப்படும் கணினி திருடர்கள் மட்டுமே செய்து வந்த வேலைகளை இனி அரசின் நிறுவனங்களில் பணியாற்றும் அரசுத் எந்திரங்கள் செய்யப் போகிறார்கள்.

இனி ஹாக்கர்கள் (கணினி திருடர்கள்) எப்படி உங்கள் கணினியில் இருந்து உங்களின் தனிப்பட்ட தகவல்களை (அது அந்தரங்கமானதோ அல்லது இரகசியமானதோ) திருடி உங்களை மிரட்டி பணியவைத்து தங்களுக்கு சாதகமான காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்வார்களோ அப்படி இனி அரசு எந்திரங்களின் உதவியோடு உளவுத்துறையினர் செய்யப்போகிறார்கள்.

இதுவரை இந்த ஹாக்கர்களால் பலர் தற்கொலை செய்து கொண்டதும் பலரின் தற்கொலைக்கு இந்த ஹாக்கர்கள் எனப்படும் கணினி திருடர்களே காரணம் என சந்தேகிக்கப்படுவது அனைவரும் அறிந்ததே. இனி இந்த வேலையை அரசே பார்த்துக் கொள்ளும். ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை இதுவரை தாங்கள் செய்து வந்த அராஜகங்களை நாட்டின் பாதுகாப்பு இரகசியமான நடவடிக்கை என்ற போர்வைகளிலேயே செய்து வந்துள்ளது. இதனையும் அப்படித்தான் செய்துள்ளது.

ஹாக்கர்களாவது நம் கணினியில் வருவார்களோ மாட்டார்களோ என்று சந்தேகப்பட்டு திருப்தி அடைந்து கொள்ளலாம். ஆனால் நமது உளவாளிகள் அரசின் அங்கீகாரத்தோடு பெரும் ஜம்பத்தோடு உங்கள் கணினிகளில் உள்நுழைந்து உங்கள் தகவல்களை கண்காணிக்கப்போகிறார்கள்.

இதை விட அசிங்கம் கெட்ட செயல் ஏதாவது உள்ளதா? ஆனால் மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் இதனை பெருமையுடன் செய்கிறது.

ஹாக்கர்கள் உங்கள் இரகசியங்களை திருடினால் காவல்துறையில் புகார் அளிக்கலாம்.

ஆனால் இந்த அரசு எந்திரங்கள் செய்யும் திருட்டை எதிர்த்து யாரிடமும் புகார் செய்ய இயலாது.

ஒருவருடைய கணினியை ஊடுறுவிச் சென்று கண்காணிப்பது, தகவல்களை திருடுவது எத்தகைய செயல் என்றால் நமது படுக்கையறையில் ஒரு கேமராவைப் பொருத்தி நம் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு ஒப்பானது.

இந்த திருட்டை செய்ய பத்து அரசு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது மத்திய உள்துறை அமைச்சகம்.

ஐ.பி.என்கிற மத்திய உளவுத்துறை (Intelligence Bureau), போதை தடுப்பு பிரிவு (Narcotics Control Bureau), அமலாக்க இயக்குனரகம்(Enforcement Directorate), நேரடி வரி மத்திய குழு( Central Board of Direct Taxes), வருவாய் நுண்ணறிவு இயக்குனரகம் (Directorate of Revenue Intelligence), C.H.ä. (Central Bureau of Investigation), தேசிய புலனாய்வு நிறுவனம் (National Investigation Agency),ரா எனப்படும் வெளிநாட்டில் உளவறியும் இந்திய நிறுவனம் (Cabinet Secretariat (R&AW), சமிக்ஞை நுண்ணறிவு இயக்குனரகம் (Directorate of Signal Intelligence (For service areas of Jammu & Kashmir, North-East and Assam only)) மற்றும் டெல்லி காவல்துறை ஆணையாளர் (Commissioner of Police, Delhi) என்ற இந்த பத்து நிறுவனங்களுக்கு மத்திய அரசு இந்த திருட்டுரிமையை வழங்கியுள்ளது.

இந்த உரிமைகளை தகவல் தொழில்நுட்ப சட்டம் 2000இன் பிரிவு 69(1)இன் கீழ் மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டம் விதி 4ன்படியும் இந்த பத்து நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. 2009இலேயே இந்த விதிகள் வகுக்கப்பட்டு விட்டாலும்தற்போது தான் மத்திய அரசு மேற்சொன்ன பத்து நிறுவனங்களுக்கு தகவல்களை திருட கண்காணிக்க அதிகாரம் வழங்கியுள்ளது.

**உருளைக்கிழங்கு போராட்டம்**

இந்த சட்டத்தை தவராக பயன்படுத்த மாட்டார்கள். ஏதோ சில குறிப்பிட்ட நபர்களை தான் இவர்கள் உளவு பார்ப்பார்கள் என்று நீங்கள் நம்பினால் உங்களை விட வடிகட்டிய முட்டாள்கள் யாரும் இல்லை. இந்த சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே இதுபோன்ற வேலைகள் மிகச்சாதாரணமான காரணங்களுக்காக நடந்துள்ளன.

உதாரணத்திற்கு உத்தரபிரதேசத்தில் அரசு அலுவலகங்களுக்கு வெளியே விவசாய போராட்டக்காரர்கள் தங்கள் போராட்டத்திற்காக உருளைக்கிழங்குகளை கொட்டி போராட்டம் நடத்தினர். உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் போகும் பாதுகாப்பான சாலையிலும் உருளைக்கிழங்குகள் கொட்டப்பட்டன.

உருளைகிழங்குகளின் இந்திய உற்பத்தியில் 35 சதவீதம் உத்தரபிரதேசத்தில் விளைவிக்கப்படுகிறது. உருளைக்கிழங்குகளின் விலை வீழ்ச்சி மற்றும் உருளைக்கிழங்குகளை கையிருப்பு வைத்து விற்பனை செய்ய அரசு கிடங்குகளில் செலுத்தும் செலவுத் தொகை உருளைக்கிழங்குகளின் விற்பனை விலையை விட அதிகம் போன்ற காரணங்களுக்காக விவசாயிகள் இந்த போராட்டத்தை நடத்தினர். அப்போது இரண்டு பேர் மேற்சொன்ன போராட்டத்தை நடத்தினர்.

அந்த இரண்டு பேரை கைது செய்ய மிகப்பெரிய நடவடிக்கையை உத்தரபிரதேச காவல்துறை மேற்கொண்டது. இதற்காக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டு கேட்டு இந்த இரண்டு பேரை கைது செய்தது. இதனை



லக்னோவில் காவல்துறை தலைவர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

https://www.ndtv.com/india-news/on-potato-trail-outside-yogi-adityanaths-house-cops-track-10-000-phones-1799654

**ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறைக்காகவே**

இவ்வாறு தகவல்களை திருடுவதற்கு முதன்மை நிறுவனமாக ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறைக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இந்திய அரசியலமைப்பு சட்டப்படி எந்த அங்கீகாரமுமில்லாமல் உருவாகி நிற்கும் இந்த நிறுவனத்திற்கு, இந்துத்துவாவிற்கு துணை நின்று நாட்டின் பல்வேறு குண்டு வெடிப்புகளில் சம்பந்தம் உள்ளதாக மஹாராஷ்டிராவின் முன்னாள் ஐ.ஜி எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களால் குற்றம் சாட்டப்படும் ஐ.பி.க்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது நாட்டின் இறையான்மைக்கே விடப்பட்டுள்ள சவாலாக தெரிகிறது.

ஆனால் இதெல்லாம் ஏதோ திடீரென்று நடப்பது போன்று நினைத்து விட வேண்டாம். காற்றில் பரவும் அலைக்கற்றைகளில் இருந்து பேசப்படும் அனைத்து கைபேசி தொலைபேசி உரையாடல்களையும் ஒட்டு கேட்க ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையால் முடியும்.

இந்த தொழில்நுட்பத்தை அது ஏற்கனவே பெற்று விட்டது. இந்த வேலைகளை ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை திட்டமிட்டு நடத்தி வருகிறது என்று மஹாராஷ்டிராவின் முன்னாள் ஐ.ஜி எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

நம்முடைய தொலைபேசி கைபேசி உரையாடல்களை மிகச்சாதாரணமாக ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை யாருடைய உத்தரவுமின்றி ஒட்டு கேட்டு வருகிறது என்பது அவரின் குற்றச்சாட்டு.

26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற புத்தகத்தில் இதனை அவர் தெளிவாக விவரிக்கிறார். அதை அப்படியே உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

**ஐபி என்கிற மத்திய உளவுத் துறையின் வலையில் அரசாங்கம்**

பாகிஸ்தானின் ISIIப் போன்று ஐபி என்கிற மத்திய உளவுத்துறை எவ்வாறு இவ்வளவு அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டது என்பது பற்றியும் அரசாங்கத்தையும், அரசியல் தலைவர்களையும் மிரட்ட முடிகிறது என்பதைப் பற்றியும் மராத்திய பத்திரிகையான பகுஜன் சங்கர்ஷ் (30 மே 2008) இதழில் பின்வருமாறு அறிக்கை வெளியிட்டது.

1990களின் ஆரம்பத்தில் அப்போதைய பிரதம மந்திரியும் உள்துறை அமைச்சரும் ஐபி என்கிற மத்திய உளவுத்துறையை அதிகாரப்பூர்வமற்ற முறையில் சில முக்கியமான பிரச்னைகளில் மிக ஜாக்கிரதையாக விசாரணை நடத்தவும், சில நபர்களின் தொலைபேசி உரையாடல்களை கண்காணிப்பில் வைக்கவும் அனுமதி அளித்தனர்.

இவ்வாறு இரகசியமாக அதிகாரப்பூர்வமற்ற முறையில் செய்யவில்லையெனில் இந்த இரகசிய செயல்கள் கசிந்து விடும் எனக் கூறி சமாதானப்படுத்தி, இந்த அனுமதியை ஐபி பெற்றது.

இவ்வாறாக, ஐபி என்கிற மத்திய உளவுத்துறை பொருந்தா நியாயங்கள் பேசி, அரசியல்வாதிகள் மற்றும் மற்றவர்களின் தொலைபேசி உரையாடல்களை அதிகாரப் பூர்வமற்ற முறையில் ஒட்டுக் கேட்கவும் அவர்களின் மீது இரகசிய விசாரணை நடத்தவும் அளப்பிற்கரிய சக்திகளைப் பெற்றது.

ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறை இவர்களின் சிந்தனைக்கு ஒத்த தொலைபேசி துறை உயர் அதிகாரிகளை கையில் போட்டுக் கொண்டு இவ்வாறு ஒட்டுக் கேட்பதை வழமையாக்கி கொண்டது.

இதற்காக, அடுத்தடுத்து வரும் அரசாங்களின் அனுமதியை ஐபி என்கிற மத்திய உளவுத்துறை பெற்றுள்ளதா அல்லது அடுத்தடுத்த அரசாங்கங்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றி தெரியுமா என்பது யாருக்கும் தெரியாது. இந்த நடைமுறையை அனுமதித்த அரசாங்கம், இது இரு முனையும் கூரானதொரு கத்தி, இதனை ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறையிடம் தருகிறோம்,

இது நமக்கு எதிராகவும் உபயோகப் படுத்தப்படக்கூடும் என உணரவில்லை.

இந்த நடைமுறை ஆபத்தான விளைவுகளை கொண்டுள்ளது. எவ்வாறெனில், தொலைப்பேசி துறையிலோ, அரசு நிறுவனங்களான **BSNL** அல்லது **MTNL**இலோ முக்கிய பதவிகளில் ஆர்.எஸ்.எஸ் விசுவாசிகளை பணியமர்த்துவதன் மூலம் ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறை எந்த நபராயினும் அவர் எவ்வளவு பெரியவராயினும் எவ்வளவு வல்லவராயினும் அவருடைய தொலைபேசி உரையாடல்களை கையகப்படுத்தி, மிரட்டக் கூடும். எனவே, இந்த அரசாங்கம் அவர்களே உருவாக்கி கொண்ட தொரு வலையில் மாட்டிக் கொண்டார்கள்.

ஆனால், ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறை தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பது என்பது என்ற பழமையான தொழில் நுட்பத்தோடு, திருப்தி அடைவதாக இல்லை. கார்கில் போர் உளவுத் தோல்விக்கு பிறகு தேசிய தொழில் நுட்ப ஆய்வு நிறுவனத்தை (National Technical Research Organisation - NTRO) 2004இல் உருவாக்கியதை பயன்படுத்திக் கொண்டு ஒரு சில வருடங்களில், அதை விட முன்னேறிய தொழில் நுட்பங்களை அடைந்து விட்டது.

உண்மையில், **NTRO** என்பது தொழில்நுட்ப வழிகளின் வாயிலாக உளவுத் தகவல்களை சேகரித்து அதனை செவ்வனிடுவது.

ஆனால் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் **NTRO**வை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து புதிய ஒட்டு கேட்டும் தொழில் நுட்பத்தினை (காற்றில் பரவும் அலைகற்றினை கண்காணிக்கும் தொழில் நுட்பத்தையும் சேர்த்து) அடைந்து விட்டார்கள்.

சுருக்கமாக, ஐ.பி. என்கிற மத்திய உளவுத்துறை, டெல்லி, மும்பை, ஹைதராபாத், லக்னோ, இதர நகரங்களில் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் இந்த தொழில் நுட்பத்தினை பயன்படுத்த ஆரம்பித்து 2007 வரை முஸ்லிம்கள் தான் எல்லா குண்டு வெடிப்புகளுக்கும் எல்லா தீவிரவாத நடவடிக்கைகளுக்கும் காரணம் என்ற தோற்றத்தினை உருவாக்கியது. அரசாங்கத்தை நம்ப வைத்தது.

தானாக வெடித்த நந்தேத் (மஹாராஷ்டிரா) 2007 வழக்கு, கான்பூர் (உ.பி) 2008 வழக்கு, பிராமணிஸ்ட் குழுக்களிடமிருந்து மாலேகான் 2008 குண்டு வெடிப்பு வழக்கில் ஹேமந்த் கர்கரே அவர்களால் கைப்பற்றப்பட்ட மூன்று மடிக்கணிகள் இவற்றிற்கு பின்பே சூழ்நிலை மாறியது.

17 வெடிகுண்டு வழக்குகளில் பிராமணிய அமைப்புகளுக்கு தொடர்பிருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் காற்றில் பரவும் அலைக்கற்றைகளை கண்காணிக்கும் தொழில் நுட்பம் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையால் பிராமணியவாதிகள் வாழும் பகுதிகளில் பயன்படுத்தப் பட்டதா என்பதைப் பற்றி எந்த அறிக்கையும் இல்லை.

மேலதிகமாக, ஐபி என்கிற மத்திய உளவுத்துறை இந்த தொழில் நுட்பத்தை அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தியுள்ளது.

3 மே 2010 நாளிட்ட அவுட்லுக் வார இதழில், அரசு ஆவணங்களின் அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் (**July** 2008), பீகார் முதலமைச்சர் நிதீஷ் குமார் (நவம்பர் 2007) ஆகியோரின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டது மட்டுமல்லாமல், மத்திய விவசாயத் துறை அமைச்சர் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் (ஏப்ரல் 2010) (இவருடைய கட்சி காங்கிரஸ் கூட்டணியில் இருந்தது), காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.திக் விஜய் சிங் (பிப்ரவரி 2007) ஆகியோரின் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்பட்டன.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதி, அவர் எந்த கட்சியை சார்ந்தவர் என்பது விஷயமல்ல. அவர் எந்தவிதமான சித்தாந்தத்தை கொண்டிருக்கிறார் என்பதே விஷயம். ஒரேயொரு பிராமணிய தலைவரின் உரையாடல்கள் கூட இவ்வாறாக ஒட்டுக் கேட்கப்படவில்லை.

இடைமறித்தல், ஒட்டுக்கேட்டல் போன்றவற்றை பற்றிய காலாவதியான

சட்டங்களை கடந்து ஊகஷிஞ் ரட்றா தொழில் நுட்பத்தை இவர்கள் பெற்றுவிட்ட போதிலும் இவர்களை தடுத்த நிறுத்தக்கூடிய எந்த சக்திகளும் இல்லை என்ற போதிலும் ஐபி என்கிற மத்திய உளவுத்துறை திருப்தியடையவில்லை. அது தங்கு தடையற்ற தொழில் நுட்பத்தை பெற இருந்தது என்பதை நாம் விவாதிக்க இருக்கிறோம்.

**I) உங்கள் தனியுரிமையை உளவு பார்ப்பது – ஐ.பி– இன் தடையற்ற தொலைபேசி ஒட்டுகேட்பு**

ஏற்கனவே விவாதித்ததன்படி ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை தொலைபேசி மற்றும் தொலைதொடர்பு நிறுவனங்களான பி.எஸ்.என்.எல் **(BSNL)** எம்.டி.என்.எல் **(MTNL)** போன்றவற்றின் முழுக்கட்டுப்பாட்டையும் 1990களின் ஆரம்பத்தில் தனக்குக்கீழ் கொண்டு வந்தது. 2005-2006 இல் காற்றில் பரவும் (ஒளிபரப்பப்படும்) அலைக்கற்றினை கண்காணிக்கும் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தை அடைந்தது. அன்றிலிருந்து எந்த அதிகாரிகளின் அனுமதியும் இன்றி எவருடைய தொலைபேசியையும் இடைமறித்து ஒட்டு கேட்கிறது.

ஆயினும் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை இந்த அதிகாரத்துடன் திருப்தியடையவில்லை. அது நாட்டின் எல்லா தொலைபேசிகளையும், தரைவழி இணைப்பு மற்றும் கைபேசிகளையும், எல்லா இன்டர்நெட் இணைப்புகளையும் கட்டுப்படுத்த விரும்புகிறது.

எனவே பிப்ரவரி 2011இல் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை உள்துறை அமைச்சகம் வழியாக தொலை தொடர்பு துறைக்கு **(Department of Telecommunications - DOT)** 14 தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களின் பட்டியலைத் தந்து தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் **(SMS)**, மின்னஞ்சல்கள் (இ-மெயில்), ஸ்கைப்பி, வீடியோ பேச்சுக்கள் இன்னும் பிறவற்றை இடைமறித்து உளவு பார்க்கும் மிகப்பெரிய திட்டத்தை அனுப்பி வைத்தது.

மத்திய உள்துறை அமைச்சகம் (ஐ.பி என்று படிக்கவும்) பின்வருமாறு அதன் செய்தி பரிவர்த்தனையில் எச்சரித்தது. ஒருவேளை இந்த "சட்டபூர்வமான இடைமறிப்பிற்கு" வழி காணப்படவில்லை என்றால் இந்த சேவைகள் கண்டிப்பாக தடை செய்யப்பட வேண்டும் அல்லது தடுக்கப்பட வேண்டும்.

நூன் 2011 இல் தொலைதொடர்பு துறை ஒரு ரகசிய குறிப்பினை தயார் செய்தது. அதில் தடை செய்வது, தடுப்பது போன்ற கடுமையான நடவடிக்கைகளை சிந்திப்பதற்கு பதிலாக உளவு நிறுவனம் இடைமறித்து பெறப்படும் தகவல்களை சங்கேத செய்தியிலிருந்து சாதாரண செய்தியாக மாற்றம் செய்யும் **(Decrypting)** சொந்த திறமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியிருந்தது.

அது மேலும் தேசிய தொழில் நுட்ப ஆய்வு நிறுவனம் **(NTRO National Technical Research Organisation)**. மற்ற மென்பொருள் நிறுவனங்களுடன் **(Software Companies)** இணைந்து இந்த இடைமறிப்பு சாதனத்தை உருவாக்க வேண்டும் என்ற கூடுதல் ஆலோசனையையும் அது வழங்கியிருந்தது.

தற்செயலாக **NTRO** தேசிய தொழில் நுட்ப ஆய்வு நிறுவனமும் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையைப் போன்று அரசியலமைப்பு வெற்றிடத்தில் எந்தவிதமான சட்டபூர்வமான அங்கீகாரமும் இன்றி ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற நிறுவனம்.

ஏற்கனவே விவாதித்தன்படி ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை தேசிய தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்தை ஏற்கனவே அதன் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டு விட்டது.

என் எண்ணம் என்னவென்றால் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைதான் தொலைதொடர்பு துறையிடம் இந்த ஆலோசனையை வழங்கும்படி கண்டிப்பாக சொல்லியிருக்க வேண்டும். அவர்கள் இதற்கான உள்கட்ட அமைப்பை ஏற்கனவே தயாராக வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

எதிர்பார்த்தபடி ஆறுமாதங்களுக்குள்ளாக தேசிய தொழில் நுட்ப ஆய்வு நிறுவனத்தின் உதவியுடன் தொலை தொடர்பு துறை தொலை தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களை தொடாமலேயே தொலைபேசிகளை இடைமறித்து ஒட்டு கேட்கும் திறனை உருவாக்கிக் கொண்டது.

**MINISTRY OF HOME AFFAIRS**

(CYBER AND INFORMATION SECURITY DIVISION)

**ORDER**

New Delhi, the 20th December, 2018

**S.O. 6227(E).**—In exercise of the powers conferred by sub-section (1) of section 69 of the Information Technology Act, 2000 (21 of 2000) read with rule 4 of the Information Technology ( Procedure and Safeguards for Interception, Monitoring and Decryption of Information) Rules, 2009, the Competent Authority hereby authorises the following Security and Intelligence Agencies for the purposes of interception, monitoring and decryption of any information generated, transmitted, received or stored in any computer resource under the said Act, namely:—

(i) Intelligence Bureau;
(ii) Narcotics Control Bureau;
(iii) Enforcement Directorate;
(iv) Central Board of Direct Taxes;
(v) Directorate of Revenue Intelligence;
(vi) Central Bureau of Investigation;
(vii) National Investigation Agency;
(viii) Cabinet Secretariat (RAW);
(ix) Directorate of Signal Intelligence (For service areas of Jammu & Kashmir, North-East and Assam only);
(x) Commissioner of Police, Delhi.

[No.14/07/2011-T]

RAJIV GAUBA, Union Home Secy.

இந்த மத்திய கண்காணிப்பு முறையில் ***(Central Monitoring System)*** உள்ள குறிப்பிடத்தக்க முக்கியமான விஷயம் என்னவென்பதை அதிகாரிகள் கூறும்போது ஆபரேட்டர்கள் யார் என்ற கவலையின்றி ஒரு இடத்தில் இருந்து அழைப்புகள் இடைமறிக்கப்பட்டு 24 மணி நேரமும் அரசு நிறுவனங்களின் அதிகாரிகளால் (ஐ.பி என்று படிக்கவும்) மற்றொரு இடத்தில் பெறப்படும். கண்காணிக்கப்படும்.

அதிகாரிகளின் கூற்றுப்படி இந்த புதிய முறையின் இன்னொரு பலன் என்னவென்றால் பழைய முறைப்படி இது உள்துறையின் ஒப்புதல் பெறப்பட்டு தொலைதொடர்பு சேவை நிறுவனங்கள் வழியாக ஒட்டுக்கேட்க வேண்டிய தேவையில்லை. பாராளுமன்ற நீதிமன்றங்களின் பார்வைக்கு வராமல் நேரிடையாக ஒட்டு கேட்க இயலும்.

அரசாங்கம் ஒவ்வொரு மாநிலமாக இதனை ஏப்ரல் 2013 இல் இருந்து செயல்படுத்தி வருகிறது. 2013 இறுதிக்குள் இந்தியாவில் உள்ள 900 மில்லியன் தரைவழி தொலைபேசிகள் மற்றும் கைபேசி உபயோகிப்பாளர்கள் 120 மில்லியன் இணைய உபயோகிப்பாளர்களை இதன் மூலம் அடைய இயலும்.

இந்த விஷயத்தில் பொது விவாதம் எதுவும் நடத்தப்படவில்லை. அரசாங்கமும் இது எவ்வாறு வேலை செய்யும், தவறாக பயன்படுத்தப்படாது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டதா என்பனவற்றை பற்றி தெளிவுபடுத்தவில்லை.

அதற்கு பதிலாக இது மிக இரகசியமாக அமல்படுத்தப்பட்டது ஏன் என்பதை அரசு இவ்வாறு நியாயப்படுத்தியது. "இது ஓர் இரகசிய உளவு சேகரிக்கும் கருவி, இதன் விவரங்களை பொதுப்படுத்துவது இதன் செயல்பாட்டின் வீரியத்தை கெடுத்து விடும்" (புனே மிரர், டைம்ஸ் ஆஃப் இந்தியா பதிப்பு, 21 ஜீன் 2013).

இந்த முறையை அறிமுகப்படுத்துவது அரசியல் நிர்ணய சட்டம் பிரிவு 19 மற்றும் 21ற்கு (Article 19 and 21) எதிரானதாக உள்ளது என்பது அரசுக்கு தெரியவில்லை. அரசாங்கம் தன்னையறியாமல் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் வலையில் வீழ்ந்து விட்டது. இதில் மிகவும் ஆச்சரியப்படுத்தும் விஷயம் என்னவென்றால் நான் அறிந்தவரை எதிர்கட்சியோ அல்லது ஆளும்கட்சியோ எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளு மன்றத்திலோ அதற்கு வெளியிலோ இந்த பிரச்சனையை எழுப்பவே இல்லை.

இப்படித்தான் முஷ்ரிஃப் அவர்கள் ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை நம்மை எப்படி ஒட்டு கேட்கிறது என்று அந்த புத்தகத்தில் விவரித்துள்ளார்கள். இப்போது அதைத்தாண்டி நம் கணினியையும் ஊடுறுவும் அதிகாரம் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தனியாக ஐ.பி.க்கு மட்டும் இந்த அதிகாரம் வழங்கப்பட்டால் இது மேலும் கேள்விக்குறியாக்கிவிடும் என்பதாலேயே மற்ற நிறுவனங்களுக்கும் இந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை செவ்வனே பயன்படுத்தி இந்துத்துவாவாதிகளுக்கு செஞ்சோற்று கடனாற்ற போவது ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையில் உள்ள பிராமணியவாதிகளே என்பது நிதர்சனம்.

**- அபூ அஃப்ரஹ்**

# சிலுவை யுத்தம் 2.0




மு. குலாம் முஹம்மது.M.A.,

இந்தத் தொடரில் அமெரிக்காவின் தலைமையில் ஐரோப்பிய நாடுகள் எப்படி இஸ்லாத்தின் மேல் தங்கள் தாக்குதல்களை நடத்துகின்றன என்பதைப் பார்த்து வருகின்றோம்.

இந்தத் தாக்குதல்கள் இஸ்லாத்தின் மீதுள்ள தாக்குதல்கள் எப்படியெல்லாம் நடக்கின்றன என்பதை ஜான் பெப்பர் என்பவர் விரிவாக விளக்குகின்றார். அதே போல் நடக்கும் தாக்குதல்களை முஸ்லிம்கள் எப்படி எதிர்கொள்கின்றார்கள் என்பதையும் பார்த்து வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்!

ஜான் பெப்பர் கூறுகின்றார்;

இஸ்லாத்தின் மீதும் உலக முஸ்லிம்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுக்க அவர்களை உலக மக்களின் பொது எதிரியாகக் காட்டிட வேண்டும். உலக மக்கள் முஸ்லிம்கள் மேல் வெறுப்படைந்திட வேண்டும். அப்போது தான் நாங்கள் தொடுக்கும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புகளே இருக்காது. மாறாக ஆறுதல் வார்த்தைகளும் ஆதரவும் கிடைக்கும். இந்த ஆறுதல்களையும், ஆதரவுகளையும் அப்படியே டாலர்களாக (பணமாக மாற்றிட வேண்டும்).

உலக மக்களை நம்ப வைப்பது மிகவும் எளிது என்பதே எங்கள் கணக்கு. ஆனால் அமெரிக்கர்களை நம்ப வைப்பது மிகவும் கடினம். காரணம் நாம் முஸ்லிம்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள், மனித இனத்தை அழிக்கப் பிறந்தவர்கள். மனசாட்சி இன்றி மக்களைக் கொத்துக் கொத்தாக அழித்துக் கொண்டிருப்பவர்கள்.

இதனால் மனித இனத்திற்கே எதிரானவர்கள் எனப் பிரச்சாரம் செய்யலாம். ஆனால் அமெரிக்கர்கள் இவற்றை அவ்வளவு எளிதாக நம்பி விட மட்டார்கள்.

காரணம் அவர்கள் அக்கம் பக்கத்தில் முஸ்லிம்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பண்பான, அன்பான நடவடிக்கைகளால் பெரிதும் கவரப்படுகின்றார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்று வருகின்றார்கள்.(இந்த முஸ்லிம்களின் ஆதிக்கமும், அழுத்தமும் வெள்ளை மாளிகை வரை விரிந்து வியாபித்து நிற்கின்றன என்பதை முந்தைய தொடர்களில் விளக்கி இருந்தோம் என்பதை வாசகர்கள் நினைவில் நிறுத்திட வேண்டும்.)

மேலே நாம் கோடிட்டுக் காட்டியக் காரணங்களால் வெறும் பிரச்சாரம் மட்டும் அமெரிக்கர்களை வெறுப்படையச் செய்து விடாது. அவர்களுக்கு முஸ்லிம்கள் உண்மையில் தீவிரவாதச் செயல்களைச் செய்து காட்டிட வேண்டும். அதனால் அவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்பட வேண்டும்.

அந்தப் பதிப்புகள் மிகவும் பாரதூரமானவையாக இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அவர்கள், இஸ்லாத்திற்கெதிரான இந்தப் போரில்

முஸ்லிம்களுக்கு எதிரான இந்தப் போரில் அவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள். இல்லையேல் வீதிக்கு வந்து போராட்டங்களை நடத்துவார்கள் அமெரிக்க அரசுக்கு நெருக்கடிகளைத் தருவார்கள்.

இங்கே இன்னொரு புதியப் பிரச்சனை என்னவெனில் முதல் சிலுவைப் போருக்கு முன்பும், பின்பும் இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம் களுக்கெதிராகவும் பல பிரச்சாரங்களையும் செய்து, ஐரோப்பியர்களையும் பின்னர் அமெரிக்கர்களையும், முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் வெறுப்படையச் செய்திருந்தோம். பின்னர் பாடப்புத்தகங்கள் வழி அதனை எங்கள் குழைந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைத்திருந்தோம். ஆனால் யதார்த்த வாழ்க்கையில் இவையெல்லாம் பொய்ப் பிரச்சாரங்கள் என முஸ்லிம்கள் நிரூபித்து விட்டார்கள். இது எங்களுக்கேற்பட்ட புதியப் பிரச்சனை.

இவற்றையெல்லாம் தாண்டி நாங்கள் அமெரிக்கர்களையும் ஐரோப்பியர்களையும் நம்ப வைத்திட வேண்டும் என்றால் நடைமுறையில் சில தீவிரவாத செயல்களைச் செய்து காட்டி பாதிப்புகளை ஏற்படுத்திக் காட்டிட வேண்டும் அப்போது மட்டுமே அமெரிக்க மக்கள் இஸ்லாத்திற்கெதிரான போரில் எங்களோடு கைக்கோர்த்து நிற்பார்கள்.

அதனால் தான் நாங்கள் அமெரிக்காவையும் அகிலத்தையும் உலுக்கும், அளவில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களைத் தகர்க்க செய்தோம்.

ஒரு பெரும் கூட்டம் இஸ்லாமிய அமைப்புகள், முஸ்லிம் முஜாஹித்கள் இவர்களை நாம் எதிரிகளாகக் காட்டினோம். முதலில் ஒசாமா பின்லேடனை எதிரியாகக் காட்டினோம். பின்னர் ஒசாமா பின்லேடன் மட்டும் போதாது ***OSAMA BINLADEN WAS NOT BIG ENOUGH*** ஒசாமா பின்லேடன் போதிய அளவிற்கு ஒரு பெரிய எதிரி அல்ல என்பதை உணர்ந்தோம்.

***"But binladen, plus the Taliban plus Saddam Hussein plus Iran and Syria and Hamas and Hezbollah and Radical Imams in London, New york and Hamburg raised the Stake considerably "***

***Page 18, Crusade 2.0 The West's Resurgent War on Islam***

இதன் பொருள்

ஆனால் பின்லேடன் - உடன் தாலிபானுடன், சதாம் உசேனுடன் ஈராக் மற்றும் சிரியாவுடன் ஹாமாஸ் அத்தோடு ஹிஸ்புல்லாஹ், லண்டன், நியூயார்க், ஹாம்பர்க் ஆகிய இடங்களிலுள்ள (அநீதிக்கெதிராக ) குரல் கொடுக்கும் இமாம்கள், இவர்களையெல்லாம் ஒரு பெரிய எதிரியான வடிவை பெற்றார்கள்.

(அதாவது இத்தனை எதிரிகளையும் ஒன்றாய்க் காட்டிய போது அமெரிக்க மக்கள், எதிரியின் பருமனை உணர்ந்தார்கள். இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான போரில் எங்கள் திட்டங்களை போர் திட்டங்களை ஏற்றிட தயாரானார்கள்.)

(ஆதாரம்: பக்கம் 18 சிலுவைப் போர் 2.0 மேற்கு நாடுகளில் இஸ்லாத்திற்கு எதிரான புத்துயிர் பெற்ற போர்)

(வாசகர்கள் சிரியா ஏன் கபளீகரப்படுத்தப் பட்டது என்பது இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் - மொழிபெயர்ப்பாளர்)

ஜான் பெப்பர் கூறுகின்றார்

எங்களை பொருத்தவரை நாங்கள் எதிரிகளாகக் காட்டுபவர்கள் எங்கள் எல்லைக்குள் புகுந்து எங்கள் நாடுகளைத் தாக்கி விடுவார்கள். வீதிகளைத் தகர்த்து விடுவார்கள் என்று மட்டும் காட்டினால் போதாது. அவர்கள் எங்கள் கலாச்சாரத்தையே தாக்கி விடுவார்கள் எனக் காட்டியாக வேண்டும். அதற்கு மேலே நாம் கூட்டு எதிரிகள் போதுமானவர்களாக இருந்தார்கள்.

இந்நிலையில் முஸ்லிம்கள் மேலுள்ள பழைய கோபம் மீண்டும் வந்தது. மேலை நாட்டவர்களாகிய நாங்கள் மக்களுக்கு எல்லா வகையிலும் எல்லா சுதந்திரங்களையும் கொடுத்து வாழ வைப்பவர்களாக எங்கள் மக்களிடம் காட்டினோம்.

இதற்கு நேர் எதிராக காரண, காரியங்களின் அடிப்படையில் அமையாத மத தீவிரவாதிகளாக முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும் காட்டினோம். மக்களின் ஆதரவும் கிடைதது. இதனை வைத்துக் கொண்டு அந்த மக்களிடம் இப்போது நாம் தொடுப்பதும் ஒரு சிலுவைப் போர் தான் என நம்ப வைத்தோம். போரைத் தொடங்கினோம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.



# அமெரிக்கர்களால் தகர்க்கப்பட்ட சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) அவர்களின் பள்ளிவாசல்

நூருத்தீன் ஸங்கி அவர்களை நாம் நினைவில் வைத்துள்ளோமோ இல்லையோ ஆனால் எதிரிகள் அவரை மறக்கவில்லை.

நாம் நூருத்தீன் ஸங்கி அவர்களின் வரலாற்று தொடரில் நூருத்தீன் ஸங்கி அவர்களால் ஷேக் உமருல் மல்லா அவர்களை கொண்டு கட்டப்பட்ட ஒரு மஸ்ஜிதை குறித்து குறிப்பிட்டிருந்தோம். மீண்டும் உங்கள் ஞாபகத்திற்கு கொண்டு வர அதனை அப்படியே இங்கு தருகிறோம்.

**மஸ்ஜித் கட்ட இவரா?**

நாட்டின் பல்வேறு நகரங்களில் ஷாஃபி, ஹனஃபி சட்டப் பள்ளிக்கூடங்களை நூருத்தீன் அவர்கள் உருவாக்கினார்கள். குறிப்பாக அலெப்போ, ஹமாஹ், டமாஸ்கஸ் போன்ற பகுதிகளில் இத்தகைய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன. முஸ்லிம்களின் பகுதிகள் அனைத்திலும் மஸ்ஜித்களை நிர்மானம் செய்தார்கள்.

மொசூலில் இவர் கட்டிய மஸ்ஜித் கட்டிட கலைக்கொரு சான்றாக விளங்குகிறது. இந்த மஸ்ஜிதை கட்ட மேற்பார்வையாளராக இறையச்சம் கொண்ட ஷேக் உமருல் மல்லா என்பவரை நூருத்தீன் நியமித்திருந்தார்கள். அவர் ஒரு பக்திமான்.

உமருல் மல்லா அவர்கள் இந்தப்பணிக்கு தகுதியானவர் அல்ல என்று நூருத்தீன் அவர்களிடம் சிலர் கூறினார்கள்.

அதற்கவர், "நான் இந்தப் பணியை சக வீரர்களிடமோ அல்லது வேறு யாரிடமோ கொடுத்தால் அவர்கள் அடக்குமுறையை ஏவி பொதுமக்களுக்கும் மாற்று மதத்தினருக்கும் அநீதி இழைத்துவிடக்கூடும் என்று நினைக்கிறேன்.

ஆனால் உமரைப்பற்றி நான் உயர்வாக எண்ணம் கொண்டுள்ளேன். அவர் யாருக்கும் எந்த தீங்கும் இழைக்க மாட்டார், எந்த அநீதியும் இழைக்க மாட்டார். நான் என் மனதளவில் தூய்மையான எண்ணத்துடன் இப்படி செய்கிறேன். இதற்கு பின் ஒருவேளை அவர் அப்படி அநீதி இழைத்தால் அவர் தான் அந்த பாவத்திற்கு பதில் சொல்ல வேண்டும். நான் அல்ல" என்று கூறிவிட்டார்.

ஷேக் உமருல் மல்லா அவர்களும் நூருத்தீன் அவர்களின் நம்பிக்கையை நிறைவேற்றினார்கள். அந்த மஸ்ஜிதை கட்டும் பணியின் போது யாருக்கும் எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை. இப்படித்தான் நூருத்தீன் அவர்கள் எந்த காலகட்டத்திலும் யார் மீதும் அநீதி இழைக்கப்படாமல் பார்த்துக்கொண்டார்கள்.



1932இல் அல்நூரி மஸ்ஜிதின் அழகிய தோற்றம்

கி.பி 1172இல் நூருத்தீன் ஸங்கி அவர்களால் மொசூலில் கட்டப்பட்ட இந்த மஸ்ஜித் ஜாமிஅன்நூரி *(Great Mosque of al-Nuri)* பல்வேறு சிறப்பங்களை கொண்டு கடந்த 850 ஆண்ட காலங்களாக நூருத்தீன் ஸங்கி அவர்களின் பெருமையை இந்த உலகிற்கு பறைசாற்றி வந்தது.

அல்ஹத்பா மினாரா என்றழைக்கப்படும் இதன் சாயும் மினாரா இதன் பெருமையையும் கட்டட கலையையும் பறைசாற்றும். 45 மீட்டர் அதாவது 148அடி உயரம் கொண்டது இந்த மினாரா. இந்த பள்ளிவாசலை கட்டும் பணியை மேற்பார்வையிட நூருத்தீன் அவர்கள் தன் மருமகன் ஃபக்ருத்தீனை பணித்தார். அதுமட்டுமன்றி அவரே நேரிடையாக கட்டமானம் நடைபெறும் இடத்திற்கு சென்று மினாராவின் மீதேறி நின்று பார்வையிடுவார். அப்போது அருகில் இருந்த கடைகள் மற்றும் வீடுகள் பள்ளிவாசல் கட்டுமானப்பணிக்கு தேவைப்பட்டது. ஆனால் இந்த இடங்கள் நிலத்தின் உரிமையாளர்களின் முழு சம்மதத்தோடு வாங்கி கட்டப்பட்டது. இதில் யாருக்கும் எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை என்பதே இதன் சிறப்பம்சம். இந்த பள்ளிவாசலை கட்டும் பணி உமருல் மல்லா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கி.பி 1173இல் இது கட்டி முடிக்கப்பட்டது.

***https://en.wikipedia.org/wiki/Great_Mosque_of_al-Nuri_(Mosul)***

இது போன்ற இஸ்லாமிய வெற்றிச்சின்னங்கள் காலத்தால் நிலைத்து நிற்பது எதிரிகளின் கண்களை உறுத்திக்கொண்டே இருக்கிறது. நாம் நமது வரலாற்று கதாநாயகர்களை மறந்து விட்டோம். ஆனால் எதிரிகள் அவர்களிடம் பெற்ற தோல்விகளை மறப்பதே இல்லை. இதற்கான உதாரணம் தான் அல்நூர் மஸ்ஜித்.

இது கடந்த 21 ஜூன் 2017இல் இது அமெரிக்க கூட்டுப்படைகளின் விமானத்தாக்குதலில் சிதைக்கப்பட்டது. இஸ்லாமிய லெவான்த் (ஐ.எஸ்.ஐ.எல்) படைகளின் மீது தாக்குதல் நடத்துகிறோம் என்ற போர்வையில் இந்த மஸ்ஜிதின் மீது விமானத்தில் இருந்து குண்டு வீசி தகர்க்கப்பட்டது.

தற்போது இந்த மஸ்ஜிதை மீண்டும் கட்டும் பணியில் யுனைடெட் அரபு எமிரேட்ஸ் இறங்கியுள்ளது. இதற்காக அந்நாடு 50.4 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது. ஏப்ரல் 23 2018இல் இதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் டிசம்பர் 2018இல் தான் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

***https://www.middleeastmonitor.com/20181218-iraq-starts-reconstruction-of-mosul-great-mosque/?fbclid=IwAR0v-xohW6sCtcuRbqRJona25zarpP-aXMtCTXvZvEOEjCDwqm5N7t7RXis***

**- அபூ அஃப்ரஹ்**

# 10 இஸ்லாம்

## அரசியல் | அதிகாரம் | அரபுலக எழுச்சி

அன்வர் சதாத்திற்கு பின் எகிப்தின் அதிபராக பதிவியேற்றார் ஹோஸ்னி முபாரக். முபாரக்கின் அரசும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கமும் வெளிப்படையாகவே மோதிக் கொண்டன என்றே சொல்லலாம்.

இஸ்லாத்திற்காக குரல் கொடுத்தவர்களை அதிகாரத்தை கொண்டு நசுக்கியது முபாரக் அரசு. ஆரம்பத்தில், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துடன் மென்மையான போக்கையே கையாண்டார் முபாரக்.

அதாவது, அன்வர் சதாத்தின் கடைசி ஆண்டு கால ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இஸ்லாமியவாதிகளை விடுதலை செய்தார் முபாரக். அரசுக்கு கட்டுப்பட்டு நடக்கும் எதிர்கட்சிகளிடம் ஒரு கொள்கை.

அரசை கடுமையாக விமர்சிக்கும் எதிர்கட்சிகளிடம் இன்னொரு கொள்கை என இரண்டு விதமான கொள்கையுடன் செயல்பட்டது முபாரக் அரசு. அரசுக்கு கட்டுப்பட்டு நடக்கும் எதிர்கட்சிகள் சகித்து கொள்ளப்பட்டனர். தீவிரமாக இஸ்லாத்தை முன்வைப்பவர்கள் பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

1984-இல் நடந்த தேர்தலில் வப்த் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட்டது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம். இக்கூட்டணி 58 இடங்களில் வெற்றி பெற்றது. இதில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் உறுப்பினர்கள் 8 இடங்களில் வெற்றி பெற்றனர். முதன் முறையாக எதிர்கட்சி என்ற அந்தஸ்துடன் பாராளுமன்றத்தில் நுழைந்தது அவ்வியக்கம்.

அரசியல் வட்டாரத்தில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்தது **MBH (Muslim Brotherhood).**

1987-இல் நடந்த தேர்தலில், லேபர் அண்ட் அஹ்ரார் **(Labour and Ahrar)** கட்சியுடன் கூட்டணி அமைத்து 36 இடங்களில் வெற்றி பெற்றது **MBH**. இஸ்லாத்தை தீவிரமாக முன்வைப்பவர்களை சமாளிக்கும் விதமாக அரசு தனது கொள்கைகளில் சில மாற்றங்களை கொண்டு வந்தது. இஸ்லாமிய தினசரி மற்றும் வார பத்திரிகைகளை அரசே வெளியிட்டது. மார்க்க கல்விக்காக TV மற்றும் ரேடியோ நிகழ்ச்சிகளில் ஒதுக்கப்படும் நேரங்கள் அதிகரிக்கப்பட்டன.

அல்ஜீரியாவில் இஸ்லாமியவாதிகள் பெற்ற வெற்றி, பலஸ்தீனில் ஹமாஸின் வளர்ச்சி ஆகியவை **MBH**-இற்கு புதிய உற்சாகத்தை தந்தது.

மக்கள் மீது கவலையற்றே செயல்பட்டது முபாரக் அரசு. எனவே 1990-இல் நடந்த தேர்தலை புறக்கணித்தது **MBH**. மறுபடியும் 1995-இல் நடந்த தேர்தலில் தன்னுடைய பெயரிலே கலந்து கொண்டது. ஏகப்பட்ட தில்லுமுல்லுகள், குளறுபடிகள் தேர்தலில். எனவே **MBH**-இன் ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. சட்டவிரோதமாக செயல்படும் அமைப்புடன் தொடர்பு இருப்பதாக கூறி அவரும் வெளியேற்றப்பட்டார்.

2000 -த்தில் நடந்த தேர்தலில் கலந்து கொண்டு 18 இடங்களை வென்றது **MBH**. 2005-த்தில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட 161 **MBH** உறுப்பினர்களில் 88 பேர் வெற்றி பெற்றனர்.

**MBH**-இன் செல்வாக்கு உயர்ந்ததை தொடர்ந்து, அதனை தடுத்து நிறுத்தும் விதமாக 2007-இல்



அரசியல் அமைப்பில் சில திருத்தங்களை கொண்டு வந்தது அரசு. பாதுகாப்பு படைகளுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது.

மத சித்தாதங்களோடு தொடர்புடைய அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டன. **MBH-**இன் அரசியல் செயல்பாடுகள் நசுக்கப்பட்டன. தொடர்ச்சியாக எகிப்தில் நிலைபெற்ற எதேச்சதிகார அரசால் இஸ்லாமியவாதிகளின் அரசியல் குரல்கள் குறைந்து போனது.

**அரபு எழுச்சி:**

கெய்ரோவின் (எகிப்து) வீதிகளில் 2011 ஜனவரி 25 அன்று பெரும்திரளான மக்கள் ஒன்று திரண்டனர். நீண்ட காலமாக செயலில் இருக்கும் அவசர நிலையை **(Long-imposed emergency)** திரும்ப பெற வேண்டும், அரசியல் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதே அவர்களின் முதல் கோரிக்கையாக இருந்தது. நடைபெறவிருக்கும் அடுத்த தேர்தலில் தனது மகனை அரியணை ஏற்றிட திட்டமிட்டிருந்தார் முபாரக். இதற்கு எதிராக ஆத்திரமும் கோபமும் கொண்ட மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

குழுமியிருந்த மக்களின் கோரிக்கைகளை தலை சாய்க்கவே மாட்டேன் என்று பிடிவாதமாக ஆரம்பத்தில் இருந்தார் முபாரக். எதிர்ப்புகள் மேலும் வலுக்க ஆரம்பித்தன. எனவே அரசியலில் சில சீர்திருத்தங்களை கொண்டு வருவேன் என்றும் அடுத்த தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்றும் அறிவித்தார் அவர். பின்பு பாராளுமன்றத்தை கலைப்பதாக அறிவித்தார்.

ஆனால் இது காலம் தாழ்ந்து வந்த அறிவிப்பாகி போனது. அதிபர் மாளிகையிலிருந்து இறுதியாக முபாரக் வெளியேற வேண்டும் என்பதை தவிர வேறு எதையும் அப்போது கேட்பதற்கு மக்கள் தயாராக இல்லை.

புதியதாக நியமிக்கப்பட்ட பிரதிநிதி சுலைமானிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதாக மக்களுக்கு அறிவிப்பு செய்தார் முபாரக். ஆனால் கொடுத்த வாக்குறுதியை அவரால் காப்பாற்ற முடியவில்லை.

ஏனெனில் அரியணை ஏறி விடலாம் என்று பேராவலுடன் எதிர்பார்த்திருந்த அவரின் மகனும் அவருடைய மனைவியும் அழுத்தங்களை கொடுத்தனர்.

அதே வேளையில், பாதுகாப்பு அமைச்சரும், இராணுவ தலைமை தளபதியுமான தன்தாவி

*அவரின் கீழ் பணிபுரிபவர்களிடம் ஆலோசனை கூட்டத்தை நடத்தினார். அதில் மக்களின் விருப்பத்திற்கு மதிப்பு அளிப்பதாகவும் அறிவித்தார்.*

*லிபியா, துனிசியா இராணுவத்தோடு எகிப்து இராணுவத்தை ஒப்பிடும்போது, அது சுய அதிகாரம் கொண்டதாக விளங்கியது. மக்களோடு இராணுவமும் இணைந்து நின்றதனால் முபாரக்கின் மகன் ஆட்சியில் வர முடியாமல் போனது.*

*2011 ஜனவரி 28 அன்று அமெரிக்க அதிபர் ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு முபாரக்கிடம் அரசியல் நிலைமையை சரி செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு பதிலாக முபாரக் இப்படி கூறியதாக சொல்லப்படுகிறது.*

*"நீங்கள் இனிமையான நபர் தான். ஆனால் உங்களுக்கு என்னுடைய நாட்டை பற்றி தெரியாது. வெளியிலிருந்து இயக்குவதையும் நான் விரும்பவில்லை."*

*கெய்ரோவின் வீதிகளின் நிலைமை நாளுக்கு நாள் கட்டுங்கடங்காமல் போய் கொண்டிருந்தது. மக்களை பாதுகாப்பதும் அவர்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிப்பதும் இராணுவத்தின் பொறுப்பு என்று 2011 பெப்ரவரி 10 அன்று இராணுவ தளபதி தன்தாவி அறிவித்தார்.*

*மக்களின் கோரிக்கைகளுக்கு தடை போடும் விதமாக இராணுவம் செயல்படாது என்றும் அறிவித்தார். மேலும் மக்களின் குரல்களை அதிபர் கேட்பதற்கு தடையாக இருக்கும் அனைத்தையும் அகற்றுங்கள் என்றும் ஆணையிட்டார்.*

*முபாரக் தன்னுடைய அதிபர் அதிகாரத்தை ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சிலிடம்* ***(Supreme Council of Armed Forces SCAF)*** *ஒப்படைத்து விட்டதாக பெப்ரவரி 11 அன்று முபாரக்கின் பிரதிநிதி உமர் சுலைமான் அறிவித்தார்.*

*நாசர் (18 ஆண்டுகள்) மற்றும் சதாத் (11 ஆண்டுகள்) அவர்கள் இருவரும் சேர்ந்து ஆட்சி புரிந்ததை விட அதிக ஆண்டுகள் எகிப்தை ஆண்டுள்ளார் முபாரக். தான் இறக்கும்வரை ஆட்சியிலே நீடிக்க வேண்டும் என்ற திட்டமும் அவரிடம் இருந்தது.*

*இன்ஷா அல்லாஹ் தொடரும்*

**அபூஹாசின்**

# வங்கிக் கொள்ளையருக்கு நிதின் கத்கரி வக்காலத்து

இந்திய வங்கிகளைக் கொள்ளை அடித்து விட்டு வெளிநாட்டுக்குச் சென்று அங்கே ஓர் உல்லாச புரியை அமைத்துக் கொண்டு ஒய்யாரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் விஜய் மல்லையா.

இவரை வெளிநாட்டுக்கு 13 சூட்கேஸ்களுடன் அனுப்பி வைக்கும் பொறுப்பை அலோக் ஷர்மா என்ற மத்திய புலனாய்வுத் துறை அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தது மோடி அரசு. இவர் இந்தியா சென்றாக வேண்டும் என லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் மத்திய அமைச்சர் நிதின் கத்கரி அவருக்கு வக்காலாத்து வாங்கிட முன் வந்துள்ளார்.

"தொழிலதிபர் விஜய் மல்லைய்யா அனைத்துக் கடன்களையும் அடைத்து விட்டார்கள். விமான துறையில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டதால் அவரால் கடனை அடைக்க முடியவில்லை. இதனால் அவரைத் திருடன் என்றும், மரியாதை இல்லாமல் விமர்சிப்பதையும் நான் விரும்பவில்லை" எனக் கூறியிருக்கின்றார். (*The Hindu 14.12.2018* | விடுதலை: 16.12.2018)

இதற்கு முன் மல்லைய்யாவுக்கு வக்காலத்து வாங்கிய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி மல்லைய்யா வெளிநாடு செல்லும் முன் நான் அவரைச் சந்திக்கவில்லை என்றார். இது எங்கள் அப்பன் குருதிக்குள் இல்லை என்று சொல்வதைப் போல் அமைந்திருந்தது.

அடுத்து எல்லோரும் அருண் ஜெட்லியை விரட்டவே நான் நாடாளுமன்ற நடைபாதையில் தான் சந்தித்தேன் அவர் எல்லாக் கடனையும் அடைத்து விடுவேன் என்று என்னிடம் சொன்னார்' என்று கூறினார். இதனை வைகறை வெளிச்சத்தில் விரிவாக தந்திருக்கின்றோம்.

ஆக, சங்கப்பரிவார கொள்ளைப் பரிவாரத்தின் ஒருவர் தான் வங்கிக் கொள்ளை விஜய் மல்லைய்யா என்பது தெளிவு.

தொடர் 8



# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

## சிலுவைப்போர்கள் ஒரு சுருக்கமான அறிமுகம்

சிலுவைப்போர்களை பொறுத்தவரை அது கிறித்தவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக தொடுத்த போர். குறிப்பாக அவர்களின் குறி ஜெருசலேம், இப்போதைய பலஸ்தீனம், சிரியா மற்றும் பல பகுதிகள்.

முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுக்க வேண்டும் என போப் அர்பன் 2 என்பவர் மேற்கத்திய கிறித்தவ நாடுகளை வலியுறுத்தி வந்தார். ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் இந்த போரில் பங்கேற்க வேண்டும் என கட்டளையுமிட்டார். இல்லையெனில் அந்த கிறித்தவர்கள் நரகத்திற்கு செல்வார்கள் எனவும் வெறியேற்றினார்.

இதன் காரணமாக ஒரு பெரும் படை கி.பி1095இல் ஜெருசலத்தை நோக்கி படையெடுத்தது. கி.பி 1095இல் இருந்து 1099 வரை நடந்த இந்த போரில் கிறித்தவ படை வெற்றி பெற்றது. ஜெருசலம் கிறித்தவர்களால் வெற்றி கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் சிலுவைப்படையினருடன் முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளை பாதுகாக்க அவ்வப்போது மோதி வந்தனர். வெற்றி தோல்வி மாறி மாறி வந்துக்கொண்டிருந்தது. இமாதுத்தீன் ஸங்கி போன்றோர் சிலுவைப்படை வீரர்களுக்கு பெறும் சவாலாக விளங்கி வந்தார். இவருக்கு பின்னர் சிலுவைப்படை வீரர்களின் தூக்கம் தொலைந்து போனது. இவரிடம் எடெஸ்ஸாவை கிறித்தவ படையினர் இழந்தனர்.

இரண்டாவது சிலுவைப்போர் கி.பி.1147இல் இருந்து 1149 வரை நடந்தது. இந்த போரை அறிவித்தது போப் ஈகுவீன்3. இமாதுத்தீன் ஸங்கியிடம் எடெஸ்ஸாவை இழந்த கிறித்தவர்கள் அதன் காரணமாக நடத்தியது தான் இரண்டாம் சிலுவைப்போர். முதல் சிலுவைப்போரில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதி தான் எடெஸ்ஸா. எனவே, அதனை மீட்கவே இரண்டாம் சிலுவைப்போர்.

ஆனால் இந்த போரில் முஸ்லிம்களுக்கு தெளிவான வெற்றி கிட்டியது. எடெஸ்ஸாவை கைப்பற்ற கிறித்தவர்கள் செய்த முயற்சி தோல்வியுற்றது.

அதன் பின்னர் கி.பி.1291வரை ஒன்பது சிலுவைப்போர்கள் நடைபெற்றன. அதன் பின்னரும் பல போர்கள் இஸ்லாமியர்களை அழித்தொழிக்க கிறித்தவர்களால் நடத்தப்பட்டன. ஆனால் அனைத்திலும் அவர்கள் தோல்வியையே கண்டனர்.

முதல் உலகப்போர் மற்றவர்களுக்கு பொதுவான போராக தெரிந்தாலும் அங்கும் சிலுவைப்போர்கள் தொடர்ந்தன. இதன் காரணமாகவே முதல் உலகப்போரில் டமாஸ்கஸை வெற்றி கொண்ட பிரெஞ்சு தளபதி ஹென்றி கௌரவ்ட் சிலுவைப்போரின் வெற்றி வீரர் சலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களின் அடக்கஸ்தலத்தில் காலை வைத்து இறுமாப்புடன், "சலாஹுத்தீனே பார்! நாங்கள் திரும்ப வந்து விட்டோம்" என்று கூறினான். சிலுவைப் போர்களில் முஸ்லிம்களிடம் வாங்கிய அடி ஐரோப்பியர்களை அப்படி பேச வைத்தது.

அதன் பின்னர் ஜார்ஜ் புஷ் அவர்கள் நவீன சிலுவை யுத்தத்தை முஸ்லிம்களின் மீது தொடங்கினார். இதனை வைகறை வெளிச்சத்தில் சிலுவைப்போர் 2.0 என குறிப்பிட்டு ஆசிரியர் குலாம் முஹம்மது அவர்கள் எழுதி வருகிறார்கள்.

உண்மையில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் சிலுவை யுத்தம் 2இல் பங்கு கொண்டவர்கள். ஆனால் நாம் கி.பி.1095இல் ஆரம்பித்து கி.பி. 1291 வரை நடந்த அனைத்து சிலுவை யுத்தங்களையும் சிலுவை யுத்தம் ஒன்று எனக் குறிப்பிட்டு வருகிறோம். இப்போது முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வரும் போரை சிலுவைப்போர் 2.0 எனக் குறிப்பிட்டு வருகிறோம். இதன் காரணமாகவே கி.பி.1095இல் ஆரம்பித்து கி.பி. 1291 வரை நடந்த அனைத்து சிலுவை யுத்தங்களில் பங்கு கொண்ட அனைவரையும் முதலாம் சிலுவை யுத்த வெற்றி வீரர்கள் என்று குறிப்பிட்டு வருகிறோம். வரலாற்றின் படி நூருத்தீன் ஸங்கி அவர்கள் இரண்டாம் சிலுவைப்போர் வெற்றி வீரர்.

நாம் இந்த புத்தகத்தில் அப்படியே குறிப்பிட்டால் ஆசிரியர் குலாம் முஹம்மது அவர்கள் எழுதி வரும் சிலுவைப்போர் 2.0 என்ற தொடரை ஒப்பிட்டு குழப்பம் ஏற்படலாம் என்பதற்காகவே அவ்வாறு குறிப்பிட்டு வருகிறோம் என்பதை தெளிவுப்படுத்த விரும்புகிறோம்.

இப்போது சென்ற இதழின் தொடர்ச்சிக்கு சென்று விடலாம்....

**ஸங்கியின் மற்றொரு இராஜதந்திரம்**

*இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் இப்போது ஃபிரான்குகளை (இன்றைய ஃபிரான்ஸையும் சேர்த்து ஒட்டு மொத்த ஜெர்மானியர்களை) அவர்களுடைய இடத்திற்கு சென்று தாக்கும் மனோநிலைக்கு வந்துவிட்டார். இதன் விளைவு ஹிஜ்ரி 534இல் அதாவது கி.பி.1139இல் ஃபிரான்குகளின் சில இடங்களை முற்றுகையிட்டார்.*

*இதன் காரணமாக ஃபிரான்குகளின் மன்னர்கள் ஒன்றிணைந்து இமாதுத்தீன் அவர்களுக்கு எதிராக படைகளை திரட்டினர். இமாதுத்தீனுக்கு எதிராக படைகளை பரீன் என்ற கோட்டைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தினர். அப்போது பரீன் கோட்டை ஃபிரான்குகளின் கைவசம் இருந்தது.*

*இதற்கு முன்னர் இல்லாத அளவிற்க இரண்டு படைகளும் கடுமையாக மோதிக்கொண்டன. இறைவனின் பெருங்கிருபையினால் ஸங்கியின் இஸ்லாமிய படை இந்த போரில் மிகச்சிறந்த வெற்றியை ஈட்டியது.*

*ஃபிரான்குகளின் மன்னர்கள் ஜெரூசலத்தின் மன்னருடன் சேர்ந்து தங்கள் குதிரைப்படையினருடன் பரீன் கோட்டைக்குள் நுழைந்து கோட்டையை தாளிட்டு கொண்டனர். அவர்கள் அந்த கோட்டைக்குள் நுழைய காரணம் அந்த கோட்டை தான் அவர்களுக்கு அருகில் இருந்தது. தொலைவில் உள்ள கோட்டைகளுக்குள் நுழைந்து பாதுகாப்பு தேடுவதற்குள் எங்கே ஸங்கி அவர்களின் படை தங்களை கொன்று விடுமோ என்ற பயம் அவர்களுக்கு.*

*அவ்வாறு ஓடி வந்து ஒளிந்த போது அவர்கள் தங்களுடைய போர் தளவாடங்கள், ஆயுதங்களையெல்லாம் அப்படியே விட்டு விட்டு வந்து விட்டனர். அவர்களுடைய போர் வீரர்கள் எல்லாம் கடுமையாக காயம் பட்டிருந்தனர்.*


பிரெஞ்சு தளபதி ஹென்றி கௌரவ்ட்

இந்த நிலையில் ஸங்கி, அவர்களை விடுவதாக இல்லை. அவர் பரீன் கோட்டைக்கு வந்து அதை முற்றுகையிட்டார். இப்போது கோட்டைக்குள் இருந்த மன்னர்கள் இமாதுத்தீன் அதாபேக் அவர்களிடம் சமாதான கோரிக்கையை முன் வைத்தனர். தங்களை உயிருடன் விட்டு விட்டால் தங்களுக்கு பாதுகாப்பு அளித்தால் பரீன் கோட்டையை இமாதுத்தீன் அவர்களிடம் ஒப்படைத்துவிடுவதாக சமாதானம் பேசினர்.

ஆனால் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் இதற்கு ஒப்பு கொள்ளவில்லை. கோட்டைக்குள் இருந்தவர்கள் தன்னுடன் சரி சமமாக சமாதான ஒப்பந்தம் பேசும் நிலையில் இல்லை என்பதையும் அவர்களுக்கு தான் சொல்வதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஸங்கி தெரிந்தே வைத்திருந்தார். எனவே, இதற்கு ஸங்கி ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களை சிறைபிடித்து கோட்டையை கைப்பற்றுவதே ஸங்கி அவர்களின் எண்ணம்.

இதற்கிடையே கடலோர பகுதிகளை சேர்ந்த ஃபிரான்குகள் சிலர் ரோமர்களிடமும் மற்ற பகுதிகளில் இருந்த ஃபிரான்குகளிடமும் தங்களின் மன்னர்களுக்கு நேர்ந்த கதியை எடுத்து கூறி அவர்களின் உதவியை கோரினர். ரோமர்களும் மற்ற ஃபிரான்குகளும் தங்களின் படைகளை உதவிக்கு அனுப்புவதென முடிவு செய்தனர்.

ஆனால் இந்த திட்டங்கள் எதுவும் கோட்டைக்குள் அடைபட்டு கிடந்த ஃபிரான்குகளுக்கு தெரியாது. எனவே, அவர்கள் தொடர்ந்து ஸங்கியிடம் சமாதான தூது அனுப்பி உயிர்பிச்சை கேட்டு வந்தனர். ஆனால் கடலோர ஃபிரான்குகளின் திட்டங்களையும் மற்ற ஃபிரான்குகளும் ரோமர்களும் தங்களை தாக்க வருவதை தன்னுடைய ஒற்றர்கள் மூலம் அறிந்த ஸங்கி அவர்கள் இந்த முறை சமாதான ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டார்.

ஃபிரான்குகளும் தங்களுடைய கோட்டையை இமாதுத்தீன் ஸங்கி அவர்களிடம் ஒப்படைத்து விட்டு தலைகுனிந்து வெளியேறினர். அவர்கள் திரும்பும் வழியில் ரோம மற்றும் ஃபிரான்குகளின் கிறித்தவ படையை சந்தித்தனர். அவர்கள் என்ன நேர்ந்தது என்று கேட்ட போது உயிர்பிழைந்து வந்தவர்கள் தாங்கள் பரீன் கோட்டையை வேறுவழியில்லாமல் ஒப்படைத்துவிட்டதை அவமானத்துடன் தெரிவித்தனர்.

இப்போது கிறித்தவ படையினர் அவர்களை நிந்திக்க ஆரம்பித்து விட்டனர். “இரண்டு நாட்களுக்கு உங்களால் அந்த கோட்டையை கைவசம் தக்க வைக்க முடியவில்லையா? நாங்கள் தான் படைகளை திரட்டி கொண்டு வருகிறோமே. அதற்குள் என்ன அவசரம்?” என்று அவர்களை சராமாரியாக கேள்விகளை கேட்டனர்.

இதற்கு பதிலளித்த உயிர் பிழைத்த மன்னர்கள், தங்களுக்கு கோட்டைக்குள் இருந்த காலம் எல்லாம் வெளியில் என்ன நடக்கிறது என்று தெரியவே இல்லை என்றும் எனவே கிறித்தவ படைகள் உதவிக்கு வருவது தங்களுக்கு தெரியவே தெரியாது என்றும் சத்தியம் செய்து கூறினர்.

“எங்களுக்கு எந்த செய்தியும் கிடைக்காத நிலையில் நீங்கள் எங்களை நிராகரித்து விட்டீர்கள் என்றே நாங்கள் நினைத்துவிட்டோம். நாங்கள் கோட்டையை கொடுத்து எங்கள் உயிர்களை பாதுகாத்துக் கொண்டோம். இதில் என்ன தவறு?” என்று எதிர் கேள்வி கேட்டனர்.

இவ்வாறாக பரீன் கோட்டையை மிக சாமர்த்தியமாக இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் வெற்றி கொண்டார்கள். இதில் கற்றுக்கொள்ள பல விஷயங்கள் உள்ளடங்கி உள்ளன.

ஒன்று எதிரிகளுக்கு எந்த செய்தியும் சென்று சேராமல் பார்த்துகொண்டது. இதன் மூலம் கிறித்தவ படையினர் உதவிக்கு வருகின்றனர் என்ற செய்தியை அறியவிடாமல் செய்து கோட்டையை எளிதாக கைப்பற்றியது. இந்த செய்தி தெரிந்திருந்தால் இன்னும் இரண்டொரு நாட்கள் தாக்குபிடித்திருந்தால் அந்த கோட்டை கிறித்தவர்கள் வசமே இருந்திருக்கும்.

மற்றொன்று எதிரிகளின் உள்ளே புகுந்து செய்திகளை சேகரித்து வந்தது. இதன் மூலம் சூழல் அறிந்து அடைபட்டுகிடந்த ஃபிரான்க் மன்னர்களின் சமாதானத்தை போனால் போகிறதென்று ஏற்றுக்கொள்வது போல் ஏற்றுக்கொண்டு கோட்டையை எளிதாக கைப்பற்ற இயன்றது. ஒருவேளை கிறித்தவ படையினர் உதவிக்கு வரவே இல்லை என்ற செய்தி அறிந்திருந்தால் ஸங்கி அவர்கள் ஃபிரான்குகளின் மன்னர்களை கைது செய்து கோட்டையை கைப்பற்றி இருப்பார். கிறித்தவர்கள் உதவிக்கு வந்ததை அறிந்து இந்த சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டார்.

இவற்றையெல்லாம் தாண்டி பரீன் கோட்டை முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்து வந்த கோட்டை. இந்த கோட்டையை சேர்ந்த ஃபிரான்குகள் அலெப்போவிற்கும் ஹமாவிற்கும் இடையேயிருந்த பகுதிகளில் தொடர்ந்து கொள்ளையடித்து வந்தார்கள். இந்த ஒட்டுமொத்த பகுதிகளையும் அச்சமுறுத்தி வந்தார்கள். இமாதுத்தீன் அதாபேக் அவர்கள் இந்த கோடையை வெற்றி கொண்டதன் மூலம் அலெப்போவிற்கும், ஹமாவிற்கும் இடையேயிருந்த பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் பாதுகாப்பை பெற்றனர்.

### ஃபிரான்க் மற்றும் ரோமர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை

கோட்டை இமாதுத்தீன் அவர்களின் கைகளில் வந்து விட்டது. இது ஃபிரான்குகளுக்கும் ரோமர்களுக்கும் தன்மான பிரச்சனையாகி விட்டன. அவர்களுடைய வாழ்நாளிலேயே முஸ்லிம்களின் கைகளில் தோல்வியை தழுவி இருந்தார்கள். முக்கியமான கோட்டையை பறி கொடுத்து விட்டு இருந்தார்கள். அவர்களுக்கு இது பெருத்த அவமானம்.

இப்போது ஃபிரான்குகளுக்கும் ரோமர்களுக்கும் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம். அது மட்டுமல்லாமல் ரோமப் படைகளும் ஃபிரான்குகளின் படைகளும் சேர்ந்த பெருத்த படை இப்போது அவர்களின் கைவசம் இருந்தது. இது அவர்களுக்கு உற்சாகத்தை தந்தது.

கோட்டையை இழந்த தோல்வி தந்த அவமானத்தால் எழுந்த கோபம், பெருத்த படை தந்த உற்சாகம் என ஃபிரான்குகளும் ரோமர்களும் ஆர்பரித்தெழுந்து லெவான்தை நோக்கி படையை நகர்த்தி வந்தனர். அலெப்போவுடன் சண்டையிட்டு அதை முற்றுகையிட்டனர். எதிரிகளின் படை பெரியது என்பதால் அவர்களுடன் சண்டையிடுவது உசிதமல்ல என்று கருதினார் இமாதுத்தீன் அவர்கள். முஸ்லிம்களின் உயிரை பணயம் வைக்க அவர் தயாராக இல்லை. எனவே அவர் சற்று பின்வாங்கி எதிரிகளுக்கு அருகிலேயே அதாவது அலேப்போவின் வெளியில் தன் படைகளை நிறுத்தி வைத்திருந்தார்.

இதன் காரணமாக எதிரிகளுக்கு தேவையான பொருட்கள் வெளியிலிருந்து கிடைப்பதை தடுத்துவிட்டார். எதிரிகளிடமிருந்து புறநகரையும் பாதுகாத்துக் கொண்டார்.

### ஸங்கிக்கு உதவிய நீதிபதி

இப்போது இமாதுத்தீன் அவர்கள் நீதிபதி கமாலுத்தீன் ஷஹ்ராசூரி அவர்களை அழைத்து சுல்தான் மசூத் அவர்களிடம் முஸ்லிம்களின் தற்போதைய கவலையான சூழ்நிலையை எடுத்துச் சொல்லி உடனடியாக படை உதவி பெற்று வரும்படி கூறி அனுப்பி வைத்தார்.

கமாலுத்தீன் அவர்கள் இமாதுத்தீன் அவர்களிடம், "நாம் இப்போது இவ்வாறு உதவி கேட்டு சுல்தானிடம் சென்றால் அவர் இதையே காரணம் காட்டி நம்மிடமிருந்து இந்த பகுதிகளை கைப்பற்றிக் கொள்ளக்கூடும். அவர்களுடைய படையினர் நம்மையே ஆக்கிரமிக்கக் கூடும்" என்று கூறி கவலைப்பட்டார்.

ஆனால் அதற்கு பதிலளித்த இமாதுத்தீன் அவர்கள், "எதிரிகள் இஸ்லாமியர்களின் நிலங்களை ஆக்கிரமித்து வைத்துள்ளனர். அவர்கள் அலெப்போவை வெற்றி கொண்டு விட்டால் லெவான்தில் முஸ்லிம்களே இருக்க மாட்டார்கள். இஸ்லாமே அழித்தொழிக்கப் பட்டு விடும். ஆனால் முஸ்லிம்களே இந்த நிலங்களை உரிமை கொண்டாட தகுதியானவர்கள். எனவே, என்ன நடந்தாலும் பரவாயில்லை நீங்கள் சென்று சுல்தானிடம் உதவி கேளுங்கள்" என்று கூறி விட்டார்.

அதன்படியே கமாலுத்தீன் அவர்கள் பாக்தாதுக்கு சென்று சுல்தானை அணுகி இமாதுத்தீன் அவர்கள் சொல்லியனுப்பிய செய்திகளை கூறினார். சுல்தானும் அவருக்கு உதவுவதாக வாக்களித்தார். ஆனால் நிலைமையின் தீவிரம் புரியாததால் சுல்தான் தன் சுட்டுவிரலை கூட அசைக்கவில்லை.

இதே நேரம் இமாதுத்தீன் அவர்கள் உதவி கேட்டு பல செய்திகளை அனுப்பிக்கொண்டே இருந்தார். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்பும் படி அதில் கோரி இருந்தார். ஆனால் சுல்தானோ கிணற்றில் போட்ட கல்லாக இருந்தார். கமாலுத்தீன் அவர்களுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலை. தன் தலைவன் அங்கே உயிருக்கு போராடிக் கொண்டிருக்க இங்கே சுல்தானோ அதனை விளையாட்டாக எடுத்துக்கொண்டிருக்கிறாரே என்று ஒரே கவலை.

கமாலுத்தீனும் பலமுறை சுல்தானிடம் உதவி கோரி விட்டார். சுல்தானிடமிருந்து வாக்குறுதிகளை தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. தலைக்கு வந்துகொண்டிருக்கும் ஆபத்தை பற்றி சுல்தானுக்கு தெரியவில்லை. இனி சுல்தான் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்யமாட்டார் என்ற முடிவுக்கு வந்து விட்டார் கமாலுத்தீன். இனி நம் வேலையை காட்டிவிட வேண்டியது தான் என்று முடிவு செய்து விட்டார்...

### கமாலுத்தீன் அவர்களின் தந்திரம்

சுல்தான் இனி இமாதுத்தீன் அவர்களின் கோரிக்கையை சட்டை செய்யப்போவதில்லை, அவருக்கு உதவ படைகளை அனுப்பப் போவதில்லை என்பதை உறுதி செய்து கொண்ட கமாலுத்தீன் அவர்கள் இப்போது ஒரு தந்திரத்தை கையாண்டார்.

அந்த பகுதியில் உள்ள சுல்தான் அவர்களின் சட்டப்பூர்வமான பிரதிநிதியாக இருந்த நீதிபதி ஒருவரை இரகசியமாக வரவழைத்தார். அவரும் இஸ்லாத்தில் பிடிப்புள்ள மனிதர். அவரிடம் உண்மை நிலைமையை விளக்கினார். எதிரிகளின் ஆபத்து குறித்து எடுத்துரைத்தார். இதை அப்படியே விட்டுவிட்டால் இந்த ஒட்டுமொத்த நிலமும் கிறித்தவர்களின் கையில் சென்று விடக்கூடிய அபாயத்தை தெளிவுபடுத்தினார். அவர் கைகளில் சிலஆயிரம் தினார்களையும் வழங்கினார். அதை பாக்தாத் பொதுமக்கள் சிலரிடமும், அரபுகள் அல்லாதோர் சிலரிடமும் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கும்படி கூறினார்.

“அவர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை ஜூம்மா தொழுகை முடிந்தவுடன் ஒரே குரலில் இஸ்லாம் வாழ்க! முஸ்லிம்களை காப்பாற்றுங்கள்! என்று குரல் எழுப்பியவாறு சுல்தானின் அரண்மனையை நோக்கி செல்ல வேண்டும். அப்போது ஃபிரான்குகளுக்கு எதிராக இமாதுத்துன் அவர்களுக்கு உதவ படைகளை அனுப்ப வேண்டும் என்றும் குரல் எழுப்ப வேண்டும். இதனை நீங்கள் தலைமை தாங்க வேண்டும். நான் இன்னும் சிலரை இதே போல் வேறு சிலரைக் கொண்டு விலைக்கு வாங்கி அவர்களையும் சுல்தானின் அரண்மனையை நோக்கி அனுப்புவேன். அவர்களும் இதே வேலையை செய்வார்கள்” என்று கமாலுத்தீன் அவர்கள் கூறினார்.

அன்றைய வாரம் வெள்ளிக்கிழமை இமாம் உரையை முடித்து மேடையை (மிம்பரை) விட்டு இறங்கியவுடன், இதற்காக காத்திருந்த அந்த நீதிபதி எழுந்து நின்று தன் ஆடைகளை கிழித்துக் கொண்டு தன் தலைப்பாகையை எடுத்து தூக்கி எறிந்து விட்டு சத்தமாக கதறி அழ ஆரம்பித்து விட்டார். அவர் விலைக்கு வாங்கி வைத்திருந்த நபர்களும் அவரைப்போன்றே செய்ய ஆரம்பித்து விட்டனர். கமாலுத்தீன் அவர்கள் வேறு நபர்களைக் கொண்டு விலைக்கு வாங்கியிருந்த நபர்களும் அதே போல செய்ய ஆரம்பித்து விட்டனர். இப்போது தொழுகைக்கூடம் அழுகைக்கூடமாக மாறிவிட்டது. அவர்களுடன் சேர்ந்து சாமான்ய மக்களும் விஷயம் தெரிந்தும் தெரியாமலும் அழ ஆரம்பித்துவிட்டனர்.

தொழுகை முடிந்தது. எல்லா மக்களும் கூட்டமாக சுல்தானின் அரண்மனையை நோக்கி ஊர்வலமாக சென்றனர். இப்போது வெளியில் இருந்த பொதுமக்களும் இவர்களுடன் சேர்ந்து விட்டனர். அவர்களுடன் படை வீரர்களும் சேர்ந்து கொண்டனர். பெருத்த கூட்டம் அரண்மனையை நோக்கி சென்றது.

இப்போது சுல்தானின் அரண்மனை முழுவதும் அழுகுரல் மற்றும் கண்டன கோஷங்கள். சுல்தானுக்கு பெருத்த ஆச்சரியம், என்னவாயிற்று இந்த மக்களுக்கு என்று.

“என்ன விஷயம்?” என்று கேட்டார் சுல்தான்.

“கிறித்தவ படையெடுப்பாளர்களுக்கு எதிராக சுல்தான் தன் படையை அனுப்பாததனால் பொதுமக்கள் மிகுந்த பயத்திலும் கோபத்திலும் உள்ளனர். புரட்சி செய்யும் மனோநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்” என்று சுல்தானிடம் அவரின் பிரதிநிதிகள் கூறினர்.

சுல்தான் உடனே கமாலுத்தீன் அவர்களை தன்முன் அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

கமாலுத்தீனுக்கு உள்ளூர பயம் தான் என்றாலும் உண்மையை உரக்க சொல்லிவிடுவது என முடிவெடுத்து கொண்டு சுல்தானிடம் வந்தார்.

சுல்தான் அவரிடம் “இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது” என்று கேட்டார்.

கமாலுத்தீன் சுல்தானிடம், “பொதுமக்கள் ஃபிரான்குகளினால் கிறித்தவர்களால் வரப்போகின்ற ஆபத்துகளை உணர்ந்து தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். சுல்தான் அவர்களுக்கு எதிரிகள் எவ்வளவு அருகில் உள்ளனர் என்பது தெரியவில்லை. அதனால் தான் சுல்தான் அவர்கள் இதனை சாதாரணமாக எடுத்து கொள்கிறீர்கள். எதிரிகள் நமக்கு ஒருவார தொலைவில் தான் உள்ளனர். அவர்கள் அலெப்போவை வெற்றி கொண்டு விட்டால் யூப்ரடீஸ் ஆற்றை விட நமக்கு அருகாமையில் வந்து விடுவர். அப்போது பாக்தாதையும் அவர்களையும் பிரிக்கவோ தடுக்கவோ எதுவும் இருக்காது”

சுல்தான் அவர்கள் ஒட்டு மொத்த ஆபத்தையும் தன் கண்களால் கற்பனை செய்து காணும் வண்ணம் கமாலுத்தீன் மொத்த விஷயத்தையும் சற்று மிகைப்படுத்தி அழகாக சாமர்த்தியமாக எடுத்துக் கூறினார். அது மிகச் சரியாக வேலை செய்தது.

சுல்தான் தன் தலையை உதறிக்கொண்டு கற்பனையில் இருந்து வெளியே வந்தார். பின்னர் கமாலுத்தீனை நோக்கி கட்டளையிட்டார், “இந்த பொதுமக்களை கலைந்து செல்லும்படி கூறுங்கள். எவ்வளவு போர்வீரர்கள் வேண்டுமோ அவ்வளவு போர்வீரர்களை அழைத்துக் கொண்டு முற்றுகையிடப்பட்ட இடத்தை நோக்கி செல்லுங்கள். உங்களுக்கு பின்னால் தேவையான பொருட்கள் போதுமான அளவு அனுப்பி வைக்கப்படும்.”

உயிர் போய் உயிர் வந்து விட்டது கமாலுத்தீன் அவர்களுக்கு. கமாலுத்தீன் அவர்கள் ஒரு நிமிடம் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே சென்று வந்து விட்டார். சுல்தான் இதனை வேறுவிதமாக எடுத்துக் கொண்டிருந்தால் கமாலுத்தீனின் தலைக்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தம் விடுபட்டு போயிருக்கும். உயிரைப் பணயம் வைத்து தான் கமாலுத்தீன் இந்த காரியத்தை நிகழ்த்தியிருந்தார் தன் தலைவர் இமாதுத்தீன் அவர்களுக்காக. அதையும் தாண்டி குறிப்பாக அல்லாஹ்வுக்காக.

கமாலுத்தீன் அவர்கள் நேராக பொதுமக்களிடம் வந்து நடந்தவற்றை எடுத்து கூறி அவர்களை கலைந்து செல்லும்படி கூறினார். பின்னர் சுல்தானின் படையிலிருந்து பத்தாயிரம் குதிரைப்படை வீரர்களை தேர்வு செய்து கொண்டார். பின்னர் நடந்த விஷயங்களை விவரித்து இமாதுத்தீன் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்.

இமாதுத்தீன் அவர்கள் அந்த படையை உடனடியாக அழைத்து கொண்டு போர்களத்திற்கு வரும்படி முதலில் கட்டளையிட்டார்.

பத்தாயிரம் படைவீரர்களும் மேற்குபுரத்தை கடந்து தங்களை தயார்படுத்தி கொண்டிருந்த போது இமாதுத்தீன் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ரோமர்களும் ஃபிரான்குகளும் அலேப்போவில் தோற்கடிக்கப்பட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்கள். எனவே, படைவீரர்களை இப்போது அனுப்ப வேண்டாம் என்று அந்த கடித்ததில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போது இதை சுல்தான் எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று கமாலுத்தீனுக்கு கவலையாகிவிட்டது. தேவையில்லாமல் இந்த விஷயம் மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது என்று சுல்தான் எடுத்துக் கொண்டால் என்ன செய்வது.

வேறு வழியின்றி இந்த விஷயம் சுல்தானுக்கு தெரியப்படுத்தப்பட்டது. சுல்தான் இப்போது ஒருபடி மேலே சென்று விட்டிருந்தார். வருங்காலத்திலும் ஃபிரான்குகளால் முஸ்லிம்களுக்கு ஏற்படும் எல்லா விதமான ஆபத்துகளையும் அவர் தடுக்க நினைத்தார். அவர் அந்த ஜிஹாதை முழுமைப்படுத்த விரும்பினார். எனவே, அந்த போர் வீரர்களை ஃபிரான்குகளின் நாடுகளை நோக்கி போர் தொடுக்க பணித்தார்.

மேற்சொன்ன இந்த விஷயங்களின்

அடிப்படையிலேயே ஃபிரான்குகளுக்கு எதிரான சுல்தானின் யுத்தம் தொடங்கியது. இந்த நிகழ்வுகளுக்கு பின்னர் கமாலுத்தீன் அவர்கள் இமாதுத்தீன் அதாபேக் ஸங்கி அவர்களிடம் திரும்பி விட்டார்.

இவ்வாறு கமாலுத்தீன் அவர்களின் புத்திசாலித்தனத்தினால் ஃபிரான்குகளுக்கு எதிராக சுல்தான் அவர்களின் படை கிறித்தவ ஃபிரான்குகளுக்கு எதிராக திருப்பிவிடப்பட்டது. ஸங்கி அவர்கள் தேர்ந்தெடுத்த நபர் எவ்வளவு விவரமாக இருந்திருக்கிறார். மிகச் சரியானதொரு நபரை தான் ஸங்கி தேர்ந்தெடுத்து சுல்தானிடம் அனுப்பிவைத்தார்.

அதற்கேற்ப கமாலுத்தீன் அவர்கள் தன் உயிரை பணயம் வைத்து சுல்தானை ஏற்றுக்கொள்ள செய்து பத்தாயிரம் குதிரைப்படை வீரர்களை அழைத்து வந்திருக்கிறார். மிக சிக்கலானதொரு நேரத்தில் இமாதுத்தீன் நம்பிய நபர் கமாலுத்தீன் அவர்கள். அவர் நம்பிக்கையை சீர்குலைக்காத வண்ணம் மிக நேர்த்தியாக சாமர்த்தியமாக காய்களை நகர்த்தி பத்தாயிரம் குதிரைப்படைவீரர்களை கொண்டு வந்தார். இல்லையெனில் ஒட்டு மொத்த காரியமும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நாசமாகி போய் இருக்கக்கூடும்.

தலைமையின் தேர்வும் சரியாக இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட நபரும் காலை வாரவில்லை.

கமாலுத்தீன் மிகச்சிறந்தவர் என்பதில் சந்தேகமேயில்லை. அவர் பத்தாயிரம் குதிரைப்படை வீரர்களை விட சிறந்தவர். இமாதுத்தீன் அவர்கள் இதைப்போன்றே அவருடைய ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து திறமையாளர்களை தேர்வு செய்து தன்னருகே வைத்திருந்தார். இதுவும் அவரின் வெற்றிக்கு தனிப்பட்ட காரணம்.

கமாலுத்தீனை இமாதுத்தீன் அவர்கள் எவ்வாறு மதிப்பிட்டிருந்தார்கள் என்பதற்கு பின்வரும் சம்பவமே உதாரணம்.

**பத்தாயிரம் தினார்களா கமாலுத்தீனுக்கு?**

ஒருமுறை இமாதுத்தீன் அவர்களிடம், “கமாலுத்தீன் அவர்களுக்கு வருடத்திற்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரச தினார்கள் சம்பளமாக கொடுக்கப்படுகிறதே. ஆனால் அவரைப்போன்ற பணியில் உள்ள மற்றவர்களுக்கு ஐநூறு தினார்கள் மட்டுமே சம்பளமாக கொடுக்கப்படுகிறதே” என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த இமாதுத்தீன் அவர்கள், “இது உங்கள் பார்வையில் செய்யப்படும் மதிப்பீடு. இவ்வளவு அதிகமான பணம் என்று நீங்கள் சொல்லும் அந்தப்பணமும் கூட கமாலுத்தீன் போன்ற நபரின் தகுதிக்கு சமமானதல்ல. ஆனால் மற்ற நபர்களுக்கு தரப்படும் ஐநூறு திர்ஹமும் அவர்களின் தகுதிக்கும் அதிகமானது. கமாலுத்தீன் ஒரேயொரு சந்தர்ப்பத்தில் செய்யும் ஒரே ஒரு செயல் இலட்சம் தினார்களுக்கும் அதிக பெறுமானமானது” என்று கூறி கேள்வி கேட்டவர்களின் வாயை அடைத்தார் ஸங்கி அவர்கள்.

இந்த நிகழ்வுகளுக்கு பின்னர் இமாதுத்தீன் அதாபேக் அவர்களின் கவனம் எடெஸ்ஸாவை கைப்பற்றுவதன் பக்கம் திரும்பியது.

கிஜீஸ்தவர்களுக்கு எடெஸ்ஸா எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதையும் அதனை ஒருவேளை இழந்துவிட்டால் அது எத்தகைய பேரிழப்புகளை கிறித்தவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதையும் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் எடெஸ்ஸாவை கைப்பற்றினாரா இல்லையா என்பதையும் இனி வரும் தொடரில் இன்ஷாஅல்லாஹ் காண்போம்.

**- அபூ அஃப்ரஹ்**




விலை: 30.ரூபாய்
8148129887

# சங்கப்பரிவாரங்களின் ஓலமும்! தலைமை நீதிபதியின் அறிவுரையும்!!

நாங்கள் இராமர் கோயிலை பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கட்டியே தீருவோம் என ஆர்ப்பரித்து வருகின்றனர் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள்.

"நாங்கள் இந்திய அரசியல் சாசனத்தையோ அறிவார்ந்த அகழ்வாராய்ச்சி முடிவுகளையோ பற்றிக் கவலைப்பட மாட்டோம் கோயிலைக் கட்டியே தீருவோம் என கொக்கரித்தனர்."

"இதற்காக அயோத்தியில் மூன்று லட்சம் பேர் கூடுவோம்" எனக் கூப்பாடு. அப்படியொரு கூட்டத்திற்கு நவம்பர் திங்களில் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் எல்லா எதிர்ப்புகளுக்கும் எதிராக 25,000 மட்டுமே வந்து கலந்து கொண்டார்கள். பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் கட்டுவதில் ஆர்வம் இழந்து விட்டார்கள். எடுத்துக் கொள்வதற்கில்லை.

கூட்டம் பெரிய அளவில் கூடாததற்கு அவர்கள் கூறும் காரணம், கலவரமாக்கி இவர்கள் ஒரு மஸ்ஜித் - ஐ அராஜமாக இடித்து விட்டு, அந்த இடத்தில் ஒரு கோயிலைக் கட்டி இருக்கின்றோம். இது அநியாயமானது, மாபெரும் தவறு என்ற குற்ற உணர்வின் காரணமாக அந்தக் கூட்டத்திற்கு வராமல் நின்று விட்டார்கள் எனக் கொள்வதற்கில்லை.

மோடியின் ஆட்சியால் தங்கள் வாழ்வாதாரங்கள் பொருளாதாரங்கள் இவற்றின் மேல் வீழ்ந்த பேரிடியால் நித்தம், நித்தம் நொந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தங்கள் வெறுப்பை ஒன்றாகக் கொட்டி மோடியை ஆட்சியிலிருந்து வீசி விட்டெறிந்திட நாடாளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் மோடியோ கோயில் கட்டுவதைக் காட்டி தனது ஐந்தாண்டு கால தோல்விகளை மறத்து விட வேண்டும். வாழ்வாதாரத்தை இழந்தவர்களின் வாக்குகளை குறுக்கு வழியில் பெற்று மீண்டும் பிரதமராகக் கபளிகரங்களைச் செய்யலாம் எனக் கணக்குப் போடுகின்றார். இதுதான் இவர்களுக்கு பிடிக்கவில்லை.

அண்மையில் நடந்த கூட்டங்களில் பல முக்கியமான சந்நியாசிகளும், மற்றவர்களும் கலந்து கொள்ளவில்லை. காரணம் கேட்டபோது மஸ்ஜித் நின்று கொண்டிருந்த இடத்தில், கோயில் கட்டுவது அநியாயம் என்றோ கடவுளுக்கு அடுக்காது என்றோ தர்ம நியாயங்களுக்கு அப்பாற்பட்ட அடாத செயல் என்றோ சொல்லிடவில்லை.

மாறாக நான்கு வருடங்களாக மோடி ஏமாற்றிவிட்டார். இப்போதும் நம்மை ஏமாற்றி நமது வாக்குகளைப் பறிக்கப் பார்க்கின்றார் என்றுதான் கூறியுள்ளார்கள். அவர்கள் கோயிலைக் கட்டுவது 2014 தேர்தல் அறிக்கையில் மோடி தந்த வாக்குறுதி அதை தவறிவிட்டார் என்றும் சாடினார்கள். ஆகவே அங்கே வராத யாரிடமும் நீதி நியாயங்கள் பற்றிய சிந்தனை இல்லை. அங்கே கூட்டிய கூட்டம் படுதோல்வி என நியாயவான்கள் கவலைப்படத் தேவை இல்லை. நிச்சயமாக முஸ்லிம்களுக்கு அது எந்த விதத்திலேயும் ஆறுதலைத் தந்திடாது.

முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பை பட்டித் தொட்டிகள் முதல் பட்டணக்கரைகள் வரை போதுமான அளவுக்குப் பரப்பி இருக்கின்றார்கள். பரப்பிக் கொண்டே இருக்கின்றார்கள். இந்தப் பாசிசப் படை 24X7 என செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

### நீதிமன்ற அவமதிப்பு

சங்கப்பரிவாரங்கள் அண்மையில் எழுப்பியுள்ள கோஷங்கள் அனைத்தும் நீதிமன்றத்தை குறிப்பாக உச்ச நீதிமன்ற அவமதிப்பாகவே அமைந்தன.

அந்தக் கூட்டமே நாங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் கோயிலைக் கட்டும் பணிகளைத் தொடங்கவிருக்கின்றோம், அதற்கான தேதியை அறிவிக்கவே கூடுகின்றோம் என்றுதான் கூட்டத்தை கூட்டினார்கள். கூட்டம் அவர்கள் எதிர்ப்பார்த்ததை விட மிகக் குறைவாக இருக்கவே அவர்களால் தேதியை அறிவிக்கும் மமதையைப் பெற முடியவில்லை. அதே போல் இது மத நம்பிக்கை,

இதில் நீதிமன்றம் செல்வதற்கு எதுவுமில்லை எல்லாமே நாங்கள் தாம் என்றும் அறிவித்துள்ளார்கள்.

இவையெல்லாம் நீதிமன்றத்தில் கிடப்பிலிருக்கும் ஒரு வழக்கைப் பற்றி கும்பலாட்சியில் நம்பிக்கையுள்ள ஒருக் கூட்டம் செய்யும் பிரகடனங்கள். இந்தப் பிரகடனங்கள் அடிப்படையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்று தொடரப்பட்டிருக்க வேண்டும். அதனால், தலைமை நீதிபதி ஒருக் கூட்டத்தில் பொத்தாம் பொதுவாக ஓர் அறிவிப்பைச் செய்துவிட்டு விட்டார்.

நமது அரசியல் நிர்ணயச் சட்டம், சொல்லுவதை கேட்பதுதான் நமக்கு நாம் செய்யும் சிறந்த நன்மையாகும். நாம் அளவிறந்த ஆணவத்தோடும் செருக்கோடும் அடாவடித்தங்களோடும் வெளிப்படுத்துவது, அழிவையே உண்டாக்கும். காலப்போக்கில் இது நம்மைக் கீழ்த்தரமான செயல்களிலேயே கொண்டு நிறுத்தும்.

நமது அரசியல் சாசனம் பலம் குன்றியவர்களின் குரலாகும், பெரும்பான்மையினரின் புத்திசாலித் தனமும் மாறும் சிக்கலான சூழ்நிலைகளிலெல்லாம், அது (அரசியல் சாசனம்) நமக்கு வழிகாட்டி இருக்கின்றது. இன்னும் வழிகாட்டிட வல்லது.

"நம்மில் சில சக்திகள், சட்டத்தில் ஆட்சியைத் தகர்த்தெறிந்திட முனைவது என்பது அமுக்கப் பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை ஒடுக்குவதாகும். புத்திசாலிகளை முட்டாள்களாக ஆக்குவதாகவும் அமையும்."

நவம்பர் 26, அரசியல் சாசன நாளன்று தலைமை நீதிபதி ரஞ்சின் கோகை பேசியதிலிருந்து. Radiance 9-15, dec 2018

**அத்துமீறினால்**

இதுபோன்ற எச்சரிக்கையையும் மீறி ஒரு வேளை சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் அத்து மீறினால் இராணுவம் வந்து சட்டம் ஒழுங்கை நிலை நாட்டலாம். ஆனால் பரிவாரத்தினர் அதிலும் கணிசமாக ஊடுருவி இருக்கின்றார்கள் என்பதே உண்மை. போன்ஸ்லா மிலிட்டரி பள்ளி, மகாராஷ்டிரா மிலிட்டரி ஃபவுண்டேஷன், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் மிலிட்டரி பிரிவு.

இவற்றால் இதற்கென தயாரிக்கப்பட்டவர்கள், கணிசமாகவே இராணுவத்தில் ஊடுருவி இருக்கின்றார். இவர்களால் பெரும் பேராபத்து சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் ஏற்படலாம். சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள், இராணுவத்தில் முக்கியப் பொறுப்புகளிலும் இருக்கின்றார்கள் என்பது அண்மைக் கால செய்திகள். Radiance 9-15, Dec 2018

இந்த உண்மையை மெய்ப்பிக்கும் வகையில் ஓய்வு பெறும், இராணுவ அதிகாரிகள் சங்கப்பரிவார அமைப்புகளில் சேருவதைக் குறிப்பிடலாம். இப்படி சேருவதை, அவர்கள் பணியில் இருந்த போது எத்தகையதொரு மனநிலையோடு இருந்திருப்பார்கள் என்பதைக் காட்டுக்கின்றது என்று சமூக ஆர்வலர்கள் நீண்ட நாட்களாக கூறிவருவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

இங்கே நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியின் போது அதாவது ***UPA*** **-** ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது கேரள மாநிலத்தைச் சார்ந்த ***A.K.*** அந்தோனி இந்திய இராணுவ அமைச்சராக இருந்தார்.

அவரிடம் இந்துத்துவ பாசிச சிந்தனையுடையவர்கள் எத்தனை பேர் இராணுவத்தில் இருக்கின்றார்கள் என்றொரு கணக்கெடுப்பை நடத்தும் படி நாடாளுமன்றத்தில் கோரிக்கைகளை வைத்தார்கள். அதற்கு அவர் அப்படி கணக்கெடுப்பை நடத்த முடியாது என்று கூறிவிட்டார்.

ஆக பாபரி மஸ்ஜித் விவகாரம் நாட்டின் பொது அமைதியை நாட்டுமக்களின் ஒன்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்திடாமல் பாதுகாத்திட வேண்டியது, நமது உச்சநீதிமன்றத்தின் பொறுப்பு.

இப்போது, தொன்மைமிகு பாபரி மஸ்ஜித் நின்று கொண்டிருந்த இடத்தில் கோயிலைக் கட்டுவது என்ற மத நம்பிக்கையோடு இதில் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கிட முடியாது.

கோவிலை கட்ட நாள் குறிப்போம் எனக் கூப்பாடு போடுபவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளைத் தொடர்ந்திட வேண்டும். இதில் உச்சநீதிமன்றம் கண்டிப்புடன் நடந்து கொண்டால் மட்டுமே, உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிடும் வரை நாடு அமைதியாக இருக்கும். சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்படாது. நீதிமன்றம் செய்யுமா?

**- எம்.ஜி.எம்**



# குஜராத்
## முஸ்லிம் பெண்கள் சிலர் செய்த சாதனைகள்

குஜராத் இனப்படுகொலையின் போது முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் இவர்களுக்கு என்னென்ன அநியாயங்கள் நிகழ்ந்தன என்பதை நாம் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி அக்டோபர் 2002 இதழில் வெளியிட்டிருந்தோம். இத்தனை கொடூரங்களுக்கிடையேயும் பெண்கள் சிலர் தங்கள் அறிவையும் அஞ்சாமையையும் பயன்படுத்தி கொடியவர்களின் இந்திய ஃபாசிஸ்டுகளின் கோரப் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். அவர்கள் எப்படி தபித்தார்கள் என்பதை இங்கே பட்டியல் போடுகின்றோம் நமக்குக் கிடைத்த வரை.

**வீர சுபைதாவும் ஃபாசிஸ்டுகளும்**

அந்தச் சகோதரியின் பெயர் சுபைதா மன்சூரா. வயது 35. குஜராத்திலுள்ள அஹமதாபாத் பகுதியில் மண்டிஜவ்கரின் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தாள். இது பெரும்பான்மையாக இந்துக்கள் வாழும் பகுதி. அன்று மாலை (28.02.2002) முதலே முஸ்லிம்களைக் கொலை செய்யும் படலம் சூடுபிடித்திருக்கிறது. சுமார் நூறு பேர் கொண்ட ஒரு கொலை வெறிக் கூட்டம் முஸ்லிம்களின் முகவரியோடு மோப்பம் பிடித்து வந்த கொண்டிருந்தது. சுபைதா மன்சூராவையும் அவள் குடும்பத்தைச் சார்ந்த ஏழு பேரையும் மரணம் தேடி வந்து கொண்டிருந்தது.

சுபைதாவை நிச்சயமாக அவர்கள் கற்பழித்த பின்னரே கொலை செய்வார்கள். ஏனெனில் முஸ்லிம் பெண்களை இந்து பயங்கரவாதிகள் இப்படித்தான் கொலை செய்கின்றார்கள் என்ற செய்தி ஏற்கனவே சுபைதாவை வந்தடைந்து விட்டது. ஆமாம். அதோ சுபைதா மன்சூராவின் வீடு நோக்கி அவர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள். இல்லை, மரணம் அவர்களின் வடிவில் வந்து கொண்டிருந்தது. அத்தோடு அவமானமும் வீடு தேடி முகவரியோடு வந்து கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் மன்சூராவின் மரணத்தையும் அவள் மானபங்கப்படுத்தப்படுவதையும் வேடிக்கை பார்க்க குழுமிவிட்டார்கள். தானும் தன்னைச் சார்ந்த ஏழு பேரும் காப்பாற்றப்படுவோம் என்ற எண்ணம் அவளுக்கில்லை. மரணம், அவமானம் இவை தன்னை நெருங்கி வரும் நிலையிலும் மதி மயங்கவில்லை, நிலைகுலையவில்லை சுபைதா மன்சூரா. ஃபாசிஸ்டுகள் குஜராத் இனப்படுகொலையின் போது பயன்படுத்திய கொடுமையான ஆயுதம் கேஸ் சிலிண்டர்கள். சுபைதாவும் அதே கேஸ் சிலிண்டரை தனது ஆயுதமாகப் பயன்படுத்தினாள். ஃபாசிஸ்டுகள் அவருடைய வீட்டை நெருங்கிய போது அவள் தன் வீட்டிலிருந்த கேஸ் சிலிண்டரை இழுத்து வந்து வீட்டின் முன்னுள்ள வராண்டா என்ற சிறு முற்றத்தில் வைத்தாள். கேஸை திறந்து விட்டாள். கையில் தீப்பெட்டியை எடுத்துக் கொண்டாள். அந்த ஃபாசிஸ்டுகளை நோக்கி இப்படிக் கூறினாள்;

“உயிரின் மேல் ஆசையிலிருந்தால் ஓடி விடுங்கள். இல்லையேல் விரைந்து வெளிவந்து கொண்டிருக்கும் கேஸை நெருப்பாக எரியச் செய்திடுவேன்.”

நானும் என்னோடு சேர்ந்த ஏழு பேரும் மரணிப்போம் என்பதே உண்மையே. அதற்கு நாங்கள் எப்போதோ தயாராகி விட்டோம். அத்தோடு உங்களையும் கூண்டோடு அனுப்பி விடுவோம். அவ்வளவு தான். அந்த ஃபாசிஸ்டுகள் பின்னங்கால் பிடரியில் பட ஓடினார்கள். ஓடினார்கள். ஓடிக்கொண்டே இருந்தார்கள். மரணத்தின் ஓலம் அவர்களை துரத்திக் கொண்டேயிருந்தது. வேடிக்கை பார்க்க வந்தவர்கள் மாயமாய் மறைந்தார்கள். பின்னர் சுபைதா மன்சூரா தன் குடும்பத்தவர்கள் ஏழு பேரையும் அழைத்துக் கொண்டு சொந்த பந்தங்கள் இருக்கும் இடம் தேடி நகர்ந்தார். அது போது அகதிகள் முகாம்களை நோக்கி அனைத்து முஸ்லிம்களும் பயணமாகிக் கொண்டிருந்தார்கள்.

**மைமுனாவைத் தேடி வந்த மரணம்**

அதே அஹமதாபாத்! மைமுனா தன் வீட்டில் தனது இரண்டு குழந்தைகளுடன் இருந்து கொண்டிருந்தாள். துணையாக யாருமில்லை. தனித்தே இருந்தாள். சுமார் 23 பரிவாரத்தினர் அவளது மானத்தைப் பறிக்கவும் அதன் பின் மரணத்தைப் பரிசாகத் தரவும் அவள் இல்லம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். முதல் மாடியில் நின்று அவர்கள் வருவதைப் பார்த்தாள். அஞ்சவில்லை மைமுனா. ஒரு வினாடியில் தன்னை மரணத்திற்குத் தயாராக்கிக் கொண்டாள். தன் அன்பு குழந்தைகளையும் அல்லாஹ்வைச் சந்திக்கத் தயாராக்கிக் கொண்டாள். தாயும் சேய்களும் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். பாய்ந்து வரும் ஃபாசிஸ்டுகளிடம் கையெடுத்து கரம் கூப்பி மடிப்பிச்சை ஏந்தவில்லை மைமுனா. அவர்கள் தன் இல்லம் நோக்கி நகர்ந்து வருவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தபால்காரன் முகவரி தேடி கடிதம் தர வருவதைப் போல் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள் அவளது முகவரித் தேடி அவளது இல்லம் நெருங்கிய போது அவள் தயாராக வைத்திருந்த மிளகாய்ப் பொடியை அவர்களை நோக்கி வீசினாள். மைமுனாவின் அழகையும், உயிரையும் குறிவைத்த அவர்களுக்கு மைமுனாவின் குறி தெரியவில்லை.

எதிர்பாராமல் தங்களைத் தாக்கிய மிளகாய்ப் பொடியின் எரிச்சலை தாங்க முடியவில்லை. தாங்கள் வயிற்றெரிச்சலை அசிங்கமான வார்த்தைகளாக வாந்தி எடுத்தார்கள். "திரும்பி வருவோம். உன்னை அதம் பண்ணுவோம்" என மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். மைமுனா அகதிகள் முகாம் நோக்கி நகர்ந்தாள்.

**வீர சகோதரி சவ்தா - ஒரு விசித்திரப் பெண்**

அஹமதாபாத் மாநகரில் குடியிருக்கின்றாள் சவ்தா. ஃபாசிஸ பரிவாரத்தினர் தங்கள் பகட்டான வாளைச் சுழற்றிக் கொண்டு அவளை நெருங்கி வந்தார்கள். வீட்டின் முன் நின்ற காரைத் தவிடு பொடியாக்கினார்கள். அவள் வீட்டை நெருங்கும் முன் எதிர்ப்பட்ட இரண்டு முஸ்லிம்களையும் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டார்கள். நெருப்பிட்டுக் கொளுத்தினார்கள். சவ்தா அதைக் கண்டாள். குலை நடுங்கினாள். அவர்கள் அடுத்த இலக்காக அவளை நோக்கியே வந்து கொண்டிருந்தார்கள்.

அவளுடைய கணவன் ஒரு பரபரப்பான வியாபாரி. அவன் பம்பாய் சென்றிருந்தான். கூட்டமான தொகுப்பு வீடுகளில் ஒரு விசாலமான வீட்டில் தான் அவள் குடியிருந்தாள். ஃபாசிஸ பரிவார கொலையாளிகள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட அவள், அக்கம் பக்கத்து வீட்டாரிடம் "உங்களவர்கள் வருகின்றார்கள், அவளைத் தடுங்கள்" எனக் கோரினாள். கடைசி வரை கத்திப் பார்த்தாள். பயனேதும் இல்லை. ஒரு முடிவுக்கு வந்தாள். நாம் மட்டும் மரணிக்க வேண்டாம், வருபவர்களையும் அந்த பாசிஸ்டுகளையும், இங்கே இறப்புகளை வேடிக்கைப் பார்ப்பவர்களையும் அழைத்துச் செல்லலாம் மரண(மறுமை) வாழ்க்கைக்கு என முடிவு கட்டினாள்.

தன் வீட்டில் கேஸ் தீர்ந்து போனால் பயன்படுத்துவதற்காக வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணையை எடுத்தாள். முடிந்த இடங்களிலெல்லாம் தெளித்தாள். வீட்டில் கிடந்த மரத்தில் செய்த பொருட்கள், பஞ்சு மெத்தைகள், துணிமணிகள் எல்லாவற்றையும் கொண்டு வந்து போட்டு அவற்றிலும் அதே மண்ணெண்ணையை ஊற்றினாள். எதிரே வரும் ஃபாசிஸ கொலையாளிகள் அவளையும் கொன்று எரிக்கத்தானே செய்வார்கள். முந்திக் கொள்வதாக முடிவெடுத்தாள் சவ்தா. எல்லோரும் ஓடோடி வந்தார்கள். என்னவென்று கேட்டார்கள். என்ன இப்படிச் செய்கின்றீர்கள் எனக் கேட்டார்கள்.

"மரணத்தை வரவேற்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றேன். என்னோடு வர எல்லோரும் தயாராகுங்கள்" என்றாள். திரண்டவர்கள் ஓடிப்போய் அங்கே வந்த ஃபாசிஸ்டுகளிடம் முறையிட்டார்கள். அந்த ஃபாசிஸ்டுகள் விடுவதாய் இல்லை. இறுதியில் அந்த ஃபாசிஸ பரிவாரங்களிடம் அந்தப் பெண்கள் இப்படிச் சொன்னார்கள்: "நீங்கள் மேலே சென்று கீழே வருவதற்குள் நீங்களும் எரிந்து போவீர்கள்."

அவ்வளவுதான். ஒரே ஓட்டமாக ஓடினார்கள் அந்த ஃபாசிஸ்டுகள். தங்கள் உயிருக்கு மேல் அவ்வளவு பயம் அவர்களுக்கு!.

நன்றி: சந்திரிகா நாளிதழ், 2002 ஏப்ரல் 11, தமிழில் : ஷரீஃபா

**- எம்.ஜி.எம்**



# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்

## தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண முஸ்லிம்களின் வரலாறு

தொடர்-6

## ஜகதீஷ் (எ) உமர் ஃபாரூக்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.... என்னுடைய பெயர் உமர் ஃபாரூக். என்னுடைய பழைய பெயர் ஜகதீஷ். நான் பிறந்தது ஓர் இந்து குடும்பத்தில். என்னுடைய சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புளியங்குடி. நான் பி.காம் படித்துள்ளேம்.

நான் படிக்கும் காலக்கட்டத்தில் தான் பின்பற்றி வந்த இந்து மதத்தின் கடவுள்கள் பற்றி பலவிதமான கேளிக்கைகளை கேள்விப்படுவேன். அவைகளெல்லாம் வெறும் கேளிக்கைகளாகவே என் சிந்தனையில் கடந்து சென்று விடும்.

ஒருக்கட்டத்திற்கு மேல் நானே சிந்திக்க ஆரம்பித்தேன். இவைகளைத்தான் நாம் கடவுள் என்று வணங்குகிறோம். பின்னர் அவைகளின் பலவீனங்கள் குறித்து நாமே கேளிக்கை செய்கிறோமே! அவைகளுடைய பலஹீனங்களை நாமே பட்டியல் போடுகின்றோமே! அப்படியென்றால் அது எப்படி கடவுளாக இருக்க முடியும்? என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தேன்.

நாம் எங்கிருந்து பிறந்தோம்? என்று சிறு குழந்தை ஒன்றை கேட்டால் கூட அது கூறும், “அம்மாவின் வயிற்றிலிருந்து” என்று. குழந்தைக்கு உண்டான அறிவிற்கேற்ப அது இந்த பதிலை கூறும்.

ஆனால் இந்து மதத்தில் தலையிலிருந்து பிறந்தவன் ஒரு சாதி, தோளிலிருந்து பிறந்தவன் ஒரு சாதி, தொடையில் பிறந்தவன் ஒரு சாதி, காலில் பிறந்தவன் ஒரு சாதி என்று மனித அறிவிற்கு பொருந்தாத நடைமுறை வாழ்வியலுக்கு சாத்தியமில்லாத ஒருக் கொள்கையை காண முடிந்தது. அதன் பின் இது விஷயத்தில் ஆழமாக ஆய்வு செய்ய ஆரம்பித்தேன். இந்து மதத்தின் கடவுள் கதைகள், அதில் உள்ள மூடத்தனங்கள் எல்லாம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தன.

**கிருஸ்தவம்**

அதன் இறுதியில் நான் இந்து மதத்தையே வெறுத்து விட்டு கிருஸ்தவ மதத்தில் இணைந்தேன். ஆனால் நான் இந்து மதத்தில் எந்தக் கொள்கைகளை வெறுத்து கிருஸ்தவத்தை ஏற்றுக் கொண்டேனோ அதே தான் அங்கேயும் இருந்தது. இந்து மதத்தில் பலகடவுள் வழிபாடு என்றால், கிருஸ்தவ மதத்தில் முக்கடவுள் வழிபாடு. இந்து மதத்தில் இடைத்தரகர் இல்லாமல் நம்மால் கடவுளை அடைய முடியாது. அதேப் போல் தான் கிருஸ்தவத்திலும். இறைத்தன்மையில் அங்கும் பல முரண்பாடுகளைப் பார்த்தேன்.

**நாத்திகம்**

எனவே இவையெல்லாம் என்னை கடவுளே இல்லை என்ற கொள்கையை நோக்கி நகர்த்தியது. இதன் விளைவாக தி.க.வில் இணைந்தேன். தி.க.வில் இருந்துக் கொண்டு இதுப் போன்ற மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்துக் கொண்டிருந்தேன்.

அப்படி தி.க.வில் இருந்துக் கொண்டு மூடப்பழக்க வழக்கங்களை எதிர்க்கும் போது ஒரு விதமான செயற்கை ஆனந்தம் கிடைத்ததே தவிர, இதுபோன்ற மூடப்பழக்க வழக்கங்களுக்கான உண்மையான தீர்வு எனக்கு நாத்திகத்தில் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தான் எனக்கு இரண்டு முஸ்லிம் நண்பர்கள் கிடைத்தார்கள். அப்துல் பாசித் அலி மற்றும் முஹம்மது ரஃபீக் எனும் இருவர். இவர்களிடம் நான் வழக்கம் போல் நிறைய கேள்விகளைக் கேட்பேன். அவர்கள் எனக்கு அறிவுப்பூர்வமான பதில்களை அழகாக எடுத்துரைப்பார்கள்.

**மனிதனுக்கேற்ற மார்க்கம் இஸ்லாம் - பெரியார்**

அப்போது ஒரு முறை நான் தி.க.வில் பெரியாரின் பேச்சுரை ஒன்றை படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. திருச்சியில் பெரியார் பேசிய அந்த உரையில் "மனிதனுக்கேற்ற மார்க்கம் இஸ்லாம் தான்" என்று பெரியார் ஆணித்தரமாக கூறியிருந்தார். அட! பெரியாரே இஸ்லாத்தைப் பற்றி கூறியிருக்கிறாரே!! என்று ஆச்சரியப்பட்டேன். இது என்னை மேலும் இஸ்லாத்தை ஆராய வைத்தது.

அப்போது என் மனதிற்குள் பல சிந்தனைகள் ஓடியது. அதில் முக்கியமானது மனிதர்களாகிய நாம் ஏன் படைக்கப்பட்டோம்? அதற்கான பலன் என்ன? என்பதுதான்.

இந்தக் கேள்விக்கு எந்த மதத்திலும் சரியான பதில் இல்லை. இஸ்லாம் மட்டுமே அதற்கான பதிலை சரியாக சொல்கிறது. "மனிதர்களே என்னை வணங்குவதற்காகவேயன்றி உங்களை நான் படைக்கவில்லை" என்று திருமறை குர்ஆன் போதிக்கிறது.

அதன் பின் நான் நிறைய இஸ்லாமிய கேள்வி பதில் நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டேன். நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் முஸ்லிம்கள் மிக அழகாக பதில் கொடுத்தார்கள். அதன் பின் நான் இஸ்லாத்தை மேலும் ஆராய்ந்து கலீமா கூறி முஸ்லிமாகிவிட்டேன்.

**இஸ்லாத்தின் இறைத்தன்மை - மறுமை வாழ்வு**

நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன் இஸ்லாத்தில் இருக்கும் இறைத்தன்மை என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. இறைவன் ஏதோ கோவிலுக்குள் இருக்கிறான். வானத்தில் இருக்கிறான் என்பதைப் போன்றல்லாமல், இஸ்லாத்தில் இறைவன் எந்த நேரமும் நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

நமக்கு மேல் ஏழெட்டு கடவுள்கள் இருந்தால் நம் நிலை என்ன? ஒரு அணிக்கு இரண்டு தலைவர்கள் இருந்தாலே அந்த அணி ஒழுங்காக செயல்படாது என்பது தான் நிதர்சனம். அப்படி இருக்கும் போது இந்த அகில உலகிற்கும் ஒரு கடவுள் தான் என்ற இஸ்லாத்தின் கோட்பாடே அறிவுக்கு ஏற்றமானதாக இருந்தது. அதேப்போல அந்த ஒரு இறைவனின் நிலை என்ன என்பதைப் பற்றியும் இஸ்லாம் மிகத் துல்லியமாக போதிக்கிறது.

மற்ற மதங்களெல்லாம் கடவுளுக்கு மனைவி, பிள்ளைகள், குடும்பம், எதிரி என்று போதிக்கின்றன. மனிதனுக்குத்தான் இவைகளெல்லாம் தேவை. கடவுளுக்கும் இவைகளெல்லாம் தேவை என்றால் நமக்கும் கடவுளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஆனால் இஸ்லாமோ இறைவனுக்கான இலக்கணத்தை மிக அழகாக எடுத்துரைக்கிறது;

**அல்லாஹ் அவன் ஒருவனே.**

**அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.**

**அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை.**

**அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.(அல்குர்ஆன்**:112:1-4)

மேலும் நாம் மறுமை வாழ்வில் இன்பமாக வாழ்வதற்கான போதனைகள் தான் இஸ்லாத்தில் இருக்கின்றன. நம்முடைய இலக்கு மறுமை வாழ்க்கைதான் என்பதை எனக்கு இஸ்லாம் அழகாக போதித்தது. இஸ்லாம் இறைத்தன்மை மட்டுமின்றி ஒரு மனிதனின் வாழ்வியல்

முறைமைகளையும் அவ்வளவு அழகாக போதிக்கிறது. சுத்தம் இறை நம்பிக்கையின் ஒரு பகுதி, உறவுகளை பேணி வாழ்வது இறை நம்பிக்கையின் ஒரு பகுதி என்று இஸ்லாம் இறைத்தன்மையை போதித்த விதம் என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது.

**இஸ்லாமும் விஞ்ஞானமும்**

அதேப்போல் இன்றைய நவீன உலகில் விஞ்ஞானம் கூறும் பல உண்மைகளை 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் கூறிவிட்டிருந்தது. கருவியல் பற்றி, இரு கடல்களுக்கு மத்தியில் திரை இருப்பதுப் பற்றி என பல அறிவியல் உண்மைகளை அன்றே குர்ஆன் கூறியிருக்கிறது.

இதெல்லாம் எப்படி சாத்தியம் என்று நான் சித்தித்தேன். நிச்சயமாக இவை எல்லாவற்றையும் படைத்த அந்த ஒரு இறைவனால் தான் இவ்வளவு துல்லியமாக சொல்ல முடியும் என்பதை நான் அறிந்துக் கொண்டேன்.

அது மட்டுமில்லாமல் இஸ்லாம் அறிவுப்பூர்வமாக சிந்தித்து இறைவனை உணரச் சொல்கிறது. அறிவை முன்வைத்து உண்மையான இறைவனைத் தேடுபவர்கள் இஸ்லாம் தான் சரி என்று தேர்ந்தெடுத்து விடுவார்கள்.

அந்த வகையில் நான் நன்கு ஆய்வு செய்துதான் இஸ்லாத்தை தேர்ந்தெடுத்தேன். இஸ்லாம் எனக்கு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் என் குடும்பத்தார்களுக்கு இஸ்லாத்தை எடுத்துக் கூறி நிச்சயமாக அவர்களையும் நேர்வழிப்படுத்துவேன். இன்ஷா அல்லாஹ்.

https://www.youtube.com/watch?v=fafiY6cjO8c&index=8&list=PL6QNhHvRWhuGoQxcrzTp3FjU2MWURR5gV&t=0s

இங்கே நாம் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். பெரியார் மற்றும் அம்பேத்கர் போன்றவர்கள் இந்து மதத்தின் சாதீய வர்ணாசிரமக் கொள்கைக்கு எதிராக தீவிரமாக போராடியவர்கள். அதிலிருந்து மக்களை விடுவிக்க மதமாற்றத்தை நேரடியாகவே பரிந்துரைத்தவர்கள். மதமாற்றம் தான் அதற்கான முழுமையான தீர்வு என தீர்க்கமாக நம்பியவர்கள்.

ஆனால் இன்றைக்கு பெரியார் மற்றும் அம்பேத்கர் போன்றவர்களை முன்னோடியாக கொண்டு செயல்படும் இயக்கங்கள் மதமாற்றத்தை பரிந்துரைக்காமல் தங்கள் இயக்கங்களுக்கென்று தனித்தனி கொள்கைகளை வகுத்துக் கொண்டு அதற்கு கூட்டம் சேர்க்கும் பணிகளையே செய்துக் கொண்டிருக்கின்றன.

இது அவர்களின் முன்னோடிகளான பெரியார் மற்றும் அம்பேத்கர் ஆகியோரின் வழிமுறைக்கு முற்றிலும் மாற்றமானது.

பெரியார் கூறினார்: **“நீங்கள் 5 மணிக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் 5.5க்கு உங்களை விட்டு தீண்டாமை ஒழிந்து விடும்”.**

அம்பேத்கர் கூறினார்: **“நீங்கள் இந்து மதத்தை விட்டு வெளியேறி விடுங்கள். எந்த மதம் உங்களை முழுமையாக அரவணைக்கிறதோ அந்த மதத்திற்குச் செல்லுங்கள்.”**

**த. அஷ்ரஃப் இஸ்லாம்**


**சகோதர சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு இலவச**

**திருக்குர்ஆன்**

**தமிழ் பிரதியைப் பெற கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.**

52/1, **மண்ணடி தெரு**, **மண்ணடி**, **சென்னை** - 600001.

**தொலைப்பேசி:**

**81481 29887**

**இந்த இலவசம் முஸ்லிம்களுக்கு கிடையாது.**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadgur Street, chennai - 600 002